# கிறிஸ்தவம்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் - 11



சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல்,
சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# கிறிஸ்தவம்

## தரம் - 11

### ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி


சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல், சமூக
விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.



அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

**கிறிஸ்தவம்**
தரம் - 11

முதலாம் பதிப்பு - 2008

இரண்டாம் பதிப்பு - 2009

**ISBN - 978-955-654-115-1**

© தேசிய கல்வி நிறுவகம்

சமயத் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**அனுசரனை** : ஆசிய அபிவிருத்தி வங்கி - இடைநிலைக்கல்வி நவீனத்துவ செயற்றிட்டம்

**வெளியீடு**
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக ஜே.அன்ட்.டீ. அச்சகத்தினால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரந்த எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

**டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

‘இசுருபாய’

பத்தரமுல்ல.

12.11.2009

# முன்னுரை

இலங்கையின் கலைத் திட்டக் கொள்கையில், பாடசாலைப் பாடத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒரு முறை காலத்திற்கு இயைந்ததாக மறுசீரமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப, 2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்த கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்படி வழிகாட்டியும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில், குறித்த பாடத்துடன் தொடர்பான வியடத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும் வழங்கப்பட்டு அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இந்நடைமுறை காரணமாக ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரை ஒன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில் அவ்வப்பாடங்களில் மாணவர் அடைந்து கொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல இனங்காணப் பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய அணுகுமுறை மூலம் அதிக விடயங்களைக் கற்ற அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற, தேர்ச்சி கொண்ட மாணவர் சந்ததி ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் புதிய பாடத்திட்டத்தைக் கையாளு கின்ற ஆசிரியர்கள், இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன் அதில் விசேட கவனமும் செலுத்த வேண்டும். இந்நூலில் புதியதொரு கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்தல், புத்தகங்கள் வாசித்தல், சுற்றாடல் அவதானித்தல், தகவல் அறிந்தோரை சந்தித்து செய்தி சேகரித்தல், தமது உடன் மாணவரிமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், (இயலுமெனில்) இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல் போன்ற கண்டறிதல் மூலமான கற்றல் கலாச்சாரம் ஒன்றைக் காண முடிகின்றது.

இதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்கனத்தினால் வழங்கப்பட்டுள்ள பாடப் புத்தகத்தினை உசாத்துணை நூலாகக் கொள்ளலாம். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும், ஒழுங்காகவும், முழுமையாகவும் மாணவர்களை அடையச் செய்வது ஆசிரியர்களின் பணியாகும், இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் பகுத்தறிவு மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு, மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்ளாக மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றல் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் பரிந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாள்வதற்கும், இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக, புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராகச் செயற்பட்டு, பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்த புதிய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுவர்களாகக் காணப்படுவர். இதனால் அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் மாணவர் சில சந்தர்பங்களில் எதிர்கொள்ளுகின்ற கடினப்பாடு/ இடர்பாடுகளை நீங்கள் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள உடன் மாணவருக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்படும்போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது, சிறந்த கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை விரிவுரைபடுத்துவதற்காள கருவியானது, ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை மேலும் பலப்படுத்த கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை, மாணவர் மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் - கற்பித்தலை விரிவுபடுத்தம் கருவிகளைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் சந்ததி ஒன்றை உருவாக்கலாம். அதற்குப் பொருத்தமானவாறு ஆசிரியர் வகிபாகமும், வகுப்பறையும், புதிய கற்றல் கலாச்சாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணியாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

## ஆலோசனைக் குழுவும் ஆக்கியோர் குழுவும்

| | | |
|---|---|---|
| **பணிப்பு** | : | பேராசிரியர் ஜே. டப்ளியூ. விக்ரமசிங்க<br>பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்<br><br>திரு விமல் சியம்பலாகொட<br>உதவிப் பணிப்பாளர் நாயகம்<br>மொழிகள், மாணிடவியல், சமூக விஞ்ஞானப் பிரிவு<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **மேற்பார்வை** | : | கலாநிதி. மாவுல்கொட சுமணரத்ன தேரர்<br>பணிப்பாளர்,<br>சமய கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம். |
| **ஆலோசனை** | : | கலாநிதி. அருட்பணி. ஜயசிரி. ரீ. பீரிஸ் |
| **இணைப்பாளர்** | : | கலாநிதி. அருட்பணி. ஜயலத் பலகல்ல<br>ஓய்வுபெற்ற பிரதான செயற்றிட்ட அதிகாரி,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **ஆக்கியோர்** | : | திருமதி ஹாசினி பர்னாந்து மென்டிஸ்<br>செல்வி .டபிள்யூ .என்.மதாரா பர்னாந்து<br>அருட்பணி. செ.டே.ப செல்வன்<br>திருமதி. சுமுதினி பர்னாந்து<br>திருமதி. குளோரி ஹெக்கியா |
| **அட்டையும் படங்களும்** | : | செல்வி .டபிள்யூ .என். மதாரா பர்னாந்து |

# உள்ளடக்கம்


| விடயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| முகவுரை | | ....... | iii |
| முன்னுரை | | ....... | iv |
| ஆலோசனைக்குழுவும் ஆக்கியோர் குழுவும் | | ....... | vi |

**பகுதி I**

| | | | |
|---|---|---|---|
| 11.1.0 | : பாடத்திட்டம் | ....... | 1 |
| 11.1.1 | : அறிமுகம் | ....... | 2 |
| 11.1.2 | : பாடத்திட்டத்தின் நோக்கம் | ....... | 3 |
| 11.1.3 | : வகுப்புக்குரிய தேர்ச்சி | ....... | 4 |
| 11.1.4 | : பாடத்திட்டம் | ....... | 5 |
| 11.1.5 | : பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | ....... | 9 |
| 11.1.6 | : கணிப்பீடும் மதிப்பீடும் | ....... | 10 |

**பகுதி - II**

| | | | |
|---|---|---|---|
| 11.2.0 | : பாடத்திட்டத்தின் தொடரகம் | ....... | 11 |
| 11.2.1 | : கற்றல் கற்பித்தல் முறை விளக்கம் | ....... | 12 |
| 11.2.2 | : தரவிருத்தி உள்ளீடுகள் | ....... | 15 |
| 11.2.3 | : செயற்பாட்டுத் தொடரகம் | ....... | 16 |

**பகுதி - III**

| | | | |
|---|---|---|---|
| 11.3.0 | : கணிப்பீடும் மதிப்பீடும். | ....... | 110 |
| 11.3.1 | : கணிப்பீடும் மதிப்பீடும் விளக்கம் | ....... | 111 |
| 11.3.2 | : கற்றல் கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள் | ....... | 113 |
| 11.3.3 | : மாதிரி வினாத்தாள் | ....... | 120 |

# பகுதி - I

11.1.0 : பாடத்திட்டம்

11.1.1 : அறிமுகம்

11.1.2 : பாடத்திட்டத்தின் நோக்கம்

11.1.3 : வகுப்புக்குரிய தேர்ச்சி

11.1.4 : பாடத்திட்டம்

11.1.5 : பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

11.1.6 : கணிப்பீடும் மதிப்பீடும்

## 11.1.1 அறிமுகம்

சமய நெறியைப் புறக்கணித்துவிட்டு ஒழுக்க விழுமியங்கள் நிறைந்ததொரு சமூகத்தை எதுவிதத்திலும் எதிர்பார்க்க முடியாது. இதனாலேயே சமயவிளக்கம் மிகவும் அத்தியாவசிய மான ஒன்றாக உள்ளது. இத்தகைய சமய விளக்கத்துடனான வாழ்வானது மிகவும் பெறுமதி வாய்ந்தது. இதன் இயல்பாகவே ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த சமூகமொன்று உருவாகும்.

கலைத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் இதுவரைகாலமும் நோக்கங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட கலைத்திட்டமானது அத்தத்துவத்தைக் கடந்து தேர்ச்சி அடிப்படையிலான கலைத்திட்ட தத்துவத்துடன் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதற்கிணங்க கிறிஸ்தவனொருவன் தனது சமயத்தின் வழியாக எத்தகைய சமயத் தேர்ச்சிகளை தனது வாழ்க்கையுடன் இணைத்துக்கொள்ள வேண்டுமென்பதைச் சரியாக இனங்கண்டு கொள்ளக்கூடியதாய் இருக்கின்றது. அவ்வவ் தேர்ச்சிகளின் விருத்தியுடன் தொடர்புபடுத்திக் கொள்ளக்கூடிய விதம் கவனத்திற்குரிய தொன்றாகின்றது. இதற்காகப் பொருத்தமான கற்பித்தல் நுட்பமுறைகளை உறுதிப்படுத்துகின்ற வகுப்பறை செயன்முறையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தரம் ஆறு தொடக்கம் தரம் பதினொன்று வரையான வகுப்புகளில் ஒரு அலகு அல்லது பல அலகுகளை அடிப்படையாகக்கொண்டு ஆறாம் தரத்தில் எளிமையான அறிமுகத்துக்கும் பதினொராம் தரத்தை அடையும் போது இவ்வலகுகளில் கற்பிக்கப்படு கின்றவை பற்றிய ஓரளவு படிமுறை வளர்ச்சியைக் கொண்டதான முறையில் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

தரம் பதினொன்றில் பொதுக்கல்வியை முடித்துக் கொள்வதோடு பெரும்பாலான மாணவர்களின் சமயக் கல்வியும் முடிவடைகின்றது. எனவே தரம் பதினொன்றில் பயிலும் மாணவர்களுக்கு சமயம் அறிவுசார்ந்த பாடமாக மட்டுப்படுத்தப்படவோ அல்லது பின்னர் பூரணப்படுத்தும் விதத்தில் அமைத்துக் கொள்ளவே அல்லாமல் வாழ்க்கைக்கு உகந்த முழுமையான ஆளுமையை அவனுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மேற்கூறிய விடயங்களை நிறைவேற்றக் கூடிய விதத்தில் தரம் பதினொன்றுக்குரிய பாடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியராகிய நீங்கள் செய்ய வேண்டியது யாதெனில் வாழ்வில் ஒரு கட்டத்தை நிறைவு செய்து கொண்டு, மற்றொரு கட்டத்தில் காலடி வைக்கத் தயாராக இருக்கும் இம்மாணவச் செல்வங்களின் சமய வாழ்கையோடு இணைத்துக்கொள்ளக் கூடிய விதத்தில் உங்களது கற்பித்தல் பணியை முழுமையான அர்ப்பணிப்புடனும், பொறுப்புணர்வுடனும் நிறைவேற்ற வேண்டும் என்பதேயாகும்.

## 11.1.2 பாடத்திட்டத்தின் நோக்கம்

1. படைப்பிலே மிக உன்னத படைப்பான மனிதன் தன்னைப் படைத்தவரை அறிந்து கொள்ளத் திட்டமிடல்.

2. கிறிஸ்துவினுடைய தூதுப் பணியையும் அவருடைய அனுபவங்களையும் ஏற்றுக் கொண்டு முழுமையான கிறிஸ்தவனாக வாழ்வதற்குத் திட்டமிடல்.

3. இறைவார்த்தை, அருளடையாளங்கள், பொதுவழிபாடுகள் வழியாக ஊட்டம் பெற்று கிறிஸ்தவ வாழ்வுக்குச் சான்றுபகர திட்டமிடல்.

4. அடிப்படைக் கிறிஸ்தவ ஒழுக்க விழுமியங்களைக் கட்டியெழுப்பும் இறைக்கட்டளை களினதும், மலைப்பொழிவினதும் அடிப்படையில் மறையைக் கற்பித்தலும் வாழ்தலும் ஓரே செயன்முறை என்பதை விளங்கிக் கொள்ளச்செய்தல்.

5. செபத்தின் வல்லமையால் ஆற்றல் பெற்று சமூகத்தை ஒளிரச் செய்யும் ஒளியாகச் செயலாற்றுவதற்கு வழிகாட்டல்.

6. கிறிஸ்துவின் அளவில்லா அன்பினால் நிறைவடைந்து அவ்வன்பை சமூகத்திலே பரப்பும் படியாக திட்டமிடல்.

7. தன்னைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலானது இறைவனால் வழங்கப்பட்ட கொடை யாகையால் அதனைப் பாதுகாப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான ஆற்றலை விருத்தி செய்தல்.

8. ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாத்து மனிதத்துவத்தைக் கட்டியெழுப்புவதோடு கிறிஸ்தவன் என்ற உறுதியான அடையாளத்தோடு, உயிருள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் பணியில் பங்காளிகளாக்குதல்.

9. கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாக்கும் அதேவேளை, ஏனைய மதங்களையும் மதித்து வாழப் பழக்குவித்தல்.

10. இலங்கைப் பிரஜை என்ற வகையில் தனது நாட்டின் மீது பற்றையும், மரியாதையையும் உருவாக்குதல்.

## 11.1.3 வகுப்புக்குரிய தேர்ச்சி

1. மனுவுருவான கிறிஸ்துவைப் பற்றிய சம்பந்தமான புதிய கண்ணோட்டத்துக்குள் பழக்கப்படல்.

2. தூய பவுலின் வாழ்வு, அவரின் பணி என்பவற்றால் ஒளியைப் பெற்று, செயல்படும் கிறிஸ்தவனாக பணி செய்தல்.

3. இயேசு கிறிஸ்துவுடன் சமீபித்து பிறருடன் நல்லுறவுடன் வாழ்தல்.

4. பல் இன, பல் சமய சமுதாயத்தில் சமாதானத்துடன் இணைந்து வாழ்வை வளர்த்தல்.

5. கிறிஸ்தவ நெறியின் கோட்பாடுகள், பெறுமதி மூலம் வாழ்வைக் கட்டியெழுப்புதல்.

# 11.1.4 பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கால வேளை |
|---|---|---|---|
| 1.0 புதிய கண்ணோட்டத்தில் மனுவுருவான மெசியாவை பின்பற்றுவர். | 1.1 அடிமை நிலையிலிருந்து விடுதலையை நோக்கி மெசியாவின் ஊடாக நற்பலனளிக்க வேண்டும் என்பதை விளக்குவர். | 1. விடுதலையை எதிர்பார்த்தல். மெசியாவின் மூலம் பலன் கொடுத்தல்.<br>ஏசாயா 9:1-7<br>ஏசாயா 11:1-9<br>மத்தேயு 1:22-23<br>மத்தேயு 16:13-20<br>யோவான் 1: 15-36<br>யோவான் 4:51<br>கோரிந்தியர் 1:20 | 4 |
| | 1.2 நிறைவான தலைமைத்துவ பண்புகளை நல்லாயன் மூலம் விளக்குவர் | 2. நல்ல ஆயன் மூலம் புதிய தலைமைத்துவம்<br>எசேக்கியேல் - 34<br>திருப்பாடல் - 23<br>யோவான் 10:13<br>யோவான் 21:15-17<br>திருத்தூதர் பணி 20:15-23 | 2 |
| | 1.3 துன்பங்களை உறுதியோடு எதிர்கொள்வர் | 3. துன்பங்கள் மூலமாக பெற்ற வெற்றி.<br>யோபு 1, 2 அதிகாரங்கள்<br>யோபு 19: 25-26<br>யோபு 42: 42-16<br>ஏரேமியா 20:7-9<br>மத்தேயு 5: 11-12 | 2 |
| | 1.4 துன்புறும் ஊழியரை முன்மாதிரியாக ஏற்று பின்பற்றுவர். | 4. துன்புறும் ஊழியரின் முன்மாதிரி<br>ஏசாயா 41: 8-13<br>ஏசாயா 42: 1-9, 18-23<br>ஏசாயா 53: 9-10<br>மாற்கு 10:45<br>மாற்கு 8: 31-42<br>மத்தேயு 12:24<br>மத்தேயு 13: 53-58 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 2.0 புனித பவுலின் வாழ்வு பணி என்பனவற்றின் அடிப்படையில் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து பணிகளை செய்வர். | 2.1 புனித பவுலின் செயல்மையப் பணியை பின்னணியுடன் அறிந்து, அவரை பின் தொடர்வோம். | 1. செயல்படும் பணியின் பின்னணி<br>திருத்தூதர் பணி 22: 1-3<br>திருத்தூதர் பணி 23: 6<br>திருத்தூதர் பணி 26: 4-6<br>கலாத்தியர் 1: 15-16 | 2 |
| | 2.2 நிறைவாழ்வுக் குரிய மாற்றங் களின் தொடர்ச்சியான நிலைக்குள் செல்வர். | 2. வாழ்வின் மாற்றம்<br>திருத்தூதர் பணி 7:58<br>திருத்தூதர் பணி 8: 1-3<br>திருத்தூதர் பணி 9 ஆம் அதிகாரம் | 2 |
| | 2.3 பயன்மிக்க திருப்பணியில் ஈடுபடக் கூட்டு தலைமைத்துவத்தைப் பின்பற்றுதல். | 3. கூட்டுப்பணி<br>திருத்தூதர் பணி 9:26-30<br>திருத்தூதர் பணி 13, 14ம் அதிகாரங்கள். | 3 |
| | 2.4 நாம் சவால்களை எதிர் கொண்டு பணிகளை உறுதியுடன் செய்வோம். | 4. துன்பங்களின் மத்தியில் முன்னோக்கி செல்லல்.<br>திருத்தூதர் பணி 15: 36-41<br>திருத்தூதர் பணி 16: 1-40<br>திருத்தூதர் பணி 17: 16-37<br>திருத்தூதர் பணி 18: 1-17 | 3 |
| | 2.5 சரியான நோக்கில் சிறந்த கிறிஸ்தவ பணியில் ஈடுபடுவர். | 5. நல்லதொரு கிறிஸ்தவ பணிக்கு சரியான கண்ணோட்டம்.<br>திருத்தூதர் பணி 19 ஆம் அதிகாரம். | 3 |
| | 2.6 கைது செய்யப் பட்ட நிலையிலும் கிறிஸ்தவ பணி யைத் தொடர்வர். | 6. கிறிஸ்துவுக்காக துன்பப்படுதல்.<br>திருத்தூதர் பணி 21:1-16, 27-37<br>திருத்தூதர் பணி 23: 1-10<br>திருத்தூதர் பணி 24, 25ம் அதிகாரங்கள். | 3 |
| | 2.7 பணியின் சவால்களை சந்தர்ப்பத்துக்கு ஏற்ப எதிர்கொள்வர். | 7. பணியின் சவால்களுக்கு சந்தர்ப்பத்துக்கு ஏற்ற செயற்பாடு.<br>திருத்தூதர் பணி 27:1-4<br>திருத்தூதர் பணி 28: 2-10<br>திருத்தூதர் பணி 28: 11-37 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 3.0 கிறிஸ்து வுக்குள் வாழ்ந்து அனை வரோடும் நல்லுறவைப் பேணுவர். | 3.1 தனிப்பட்ட மட்டத்தில் கிறிஸ்துவுக்குள் வாழ்வர். | 1. கிறிஸ்துவும், தனிப்பட்ட உறவும்<br>கொரிந்தியர் 6:12-20<br>கலாத்தியர் 3:26<br>பிலிப்பியர் 2:16<br>யோவான் 7:51 | 3 |
| | 3.2 கிறிஸ்துவுக்குள் நிலையான குடும்ப வாழ்வை வாழ்வர். | 2. குடும்பத்துக்குள் ஐக்கிய இணைப்பு<br>தொடக்கநூல் 1: 27-28<br>தொடக்கநூல் 2: 24<br>ரோமர் 12:10 | 3 |
| | 3.3 சமூக மட்டத்தில் கிறிஸ்துவுக்குள் வாழ்வர். | 3. சமுதாயத்தில் கிறிஸ்தவ குடும்பம்.<br>மத்தேயு - 25 ஆம் அதிகாரம்<br>திருத்தூதர் பணி 3: 1-2 | 2 |
| | 3.4 இறையாட்சியின் விழுமியங்களை கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்வுக் கூடாக பகிர்ந்து கொள்வர். | 4. பலதரப்பட்ட சூழலுக்குள் கிறிஸ்தவ சாட்சி. | 2 |
| | 3.5 கிறிஸ்துவுக்குள் வறுமையை எதிர் கொள்வர். | 5. வறுமையை சந்தித்தல். | 2 |
| | 3.6 இயற்கை அழிவு களை, கிறிஸ்து வுக்குள் எதிர் கொள்வர். | 6. அனர்த்தங்களின் மத்தியில் | 2 |
| | 3.7 ஒடுக்கு முறையை கிறிஸ்துவுக்குள் எதிர் கொள்வர். | 7. ஹிம்சை, துன்பங்கள் மத்தியில் | 2 |

| | | | |
|---|---|---|---|
| 4.0 பன்மைச் சூழலில் இணைந்து வாழ்வர். | 4.1 யூத சமுதாயத்திட மிருந்து நல்ல விழுமியங்களைப் பெற்று எமது இன்றைய வாழ்வுக்குப் பயன்படுத்துவர். | 1. யூத சமுதாயத்தின் மதிப்பும், பெறுமதியும்<br>தொடக்கநூல் 13:14<br>தொடக்கநூல் 17: 23-27<br>ஏசாயா 49:3 | 2 |
| | 4.2 தொடக்ககால திருச்சபை சமூகத் திடமிருந்து நல்ல விழுமியங்களைப் பெற்று இன்றைய வாழ்வுக்காகப் பண் படுத்துங்கள். | 2. ஆரம்ப திருச்சபையின் கிறிஸ்தவ பெறுமதிகள்.<br>தூய யோவான் 20:17<br>திருத்தூதர் பணி 2:42-47<br>திருத்தூதர் பணி 4:32 | 2 |
| | 4.3 சமாதானம் ஒப்புரவு போன்ற நல்விழுமியங்களின் அடிப்படையில் இன்றைய சமூகத்தில் வாழ்வார். | 3. நவீன உலகில் கிறிஸ்தவன்.<br>திருத்தூதர் பணி 8:4-40<br>திருத்தூதர் பணி 10 ஆம் அதிகாரம். | 2 |
| 5.0 கிறிஸ்தவ (மனித) விழுமியங் களின் அடிப்படையில் வாழ்வார் | 5.1 அன்பு மைய வாழ்க்கை வாழ்வார். | 1. எல்லையற்ற அன்பு<br>கொரிந்தியர் 13: 4-8<br>ரோமர் 12: 9-14<br>பரி. மத்தேயு 19:14<br>பரி. யோவான் 13: 34-35 | 2 |
| | 5.2 அமைதி வாழ்க்கை வாழ்வார். | 2. நிரந்தர சமாதானம்<br>பரி. மத்தேயு 5:9 | 2 |
| | 5.3 'வேற்றமையில் ஒற்றுமை' மைய வாழ்வு வாழ்வர | 3. வேறுபாடுகளின் ஐக்கியத்துவம்<br>பரி. யோவான் 17: 20-21<br>பரி. யோவான் 15: 1-16<br>திருத்தூதர் பணி 4: 32-35<br>திருத்தூதர் பணி 11: 27-30<br>திருத்தூதர் பணி 15:13<br>எபேசியர் 2:11, 15-16<br>எபேசியர் 6: 18-24<br>கலாத்தியர் 3:29<br>யோவான் 1:3 | 2 |
| | 5.4 மன்னிப்பு மைய வாழ்க்கை வாழ்வர். | 4. மன்னிப்பின் மாண்பு<br>பரி. மத்தேயு 18: 21-35<br>எபேசியர் 4: 25-29 | 2 |
| | 5.5 நம்பிக்கை - எதிர் பார்ப்பு மைய வாழ்க்கை வாழ்வர். | 5. புதிய எதிர்பார்ப்பை நோக்கி<br>திருத்தூதர் பணி 15:1<br>கலாத்தியர் 5: 1-15<br>பேதுரு 1:13 | 2 |

## 11.1.5 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

1. பாடசாலைத் தவணைகளில் ஆகக் குறைந்தபட்சம் ஒரு முறையாவது மாணவர்களை வழிபாடுகளில் வகுப்பு ரீதியாகப் பங்குபற்றச் செய்தல்.

2. மாணவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்காக அருட்பணியாளர்களின் வழிகாட்டலைப் பெறல்.

3. வழிபாட்டுக் காலங்களுக்குரிய வழிபாடுகளில் மாணவர்களைப் பழக்குதல்.

4. ஒற்றுமை, பொதுத்தன்மை, பொறுமை போன்ற மறை சார்ந்த எண்ணக்கருக்களின் விருத்திக்காகப் பயிற்சிச் செயன்முறைகளைப் பாடசாலையில் ஒழுங்கு செய்தல்.

5. கிறிஸ்தவ சிறார்களுக்கான குழுக்களைத் தொடங்கும் போது முழுமையான கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு சிறுவர்களை பயிற்றுவித்தல்.

6. சபைகளில் பணியாற்றும் குழுக்களில் சிறுவர் பங்கெடுப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்றோருக்கு வழங்குதல்.

## 11.1.6. கணிப்பீடும் மதிப்பீடும்

1. பல்தேர்வு வினாக்கள்
2. சிறு வினாவிடைப் பரீட்சை
3. எழுத்துப் பரீட்சை / கட்டுரை
4. இரட்டை நாட் குறிப்பேடு
5. ஆக்கச் செயற்பாடு
6. மாதிரியுரு
7. ஒப்படை
8. கணிப்பீடு
9. பலதர பரீட்சைகள்
10. மதிப்பீடு
11. குழுச்சோதனை
12. விவாதம்
13 பேச்சு / உரை
14. கண்காட்சி

# பகுதி - II

11.2.0 பாடத்திட்டத்தின் தொடரகம்

11.2.1 கற்றல் கற்பித்தல் முறை விளக்கம்

11.2.2 தரவிருத்தி உள்ளீடுகள்

11.2.3 செயற்பாட்டுத் தொடரகம்

## 11.2.1. கற்றல் கற்பித்தல் முறை விளக்கம்

இக்கற்கைநெறிக்குரிய கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில், தேடியாய் தலை அடிப்படையாகக்கொண்டு, மாணவரது தேர்ச்சிகளை உருவாக்கத்தக்க வகையில் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுவது குறித்துக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாகத் தேர்ச்சிசார் கல்விக்காக ஆயத்தமாகும் போது, ஆசிரியரது வகிபாகத்திலும் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது.

பண்டைக் காலந்தொட்டு பரவலாக நடைமுறையில் இருந்த மரபு ரீதியான கடத்தல் வகிபாகம் (Transmission Role) பிற்காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் வகிபாகம் (Transaction Role) என்பன எமது வகுப்பறைகளில் தற்போதும் கூட அரசோச்சுவதைக் காண முடிகின்றது. இன்று பாடசாலையை விட்டுச் செல்லும் பிள்ளைகளின் கற்பனைத் திறன்கள், தனிப்பட்ட திறன்கள், சமூகத்திறன்கள் போன்றவையெல்லாம் சீர்க்குலைந்துள்ள நிலையில், கற்றல் - கற்பித்தல் முறையினை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அதனை எவ்வாறு செய்வது என்பதையும் இனங்காணல் கடினமாகவுள்ளது.

கடத்தல் வகிபாகத்தில், தாம் கற்க வேண்டிய அனைத்தையும் அறிந்தவர் ஆசிரியரே என மாணவர் ஏற்றுக் கொள்வர். மாணவருக்கு எதுவுமே தெரியாது எனக் கருதும் ஆசிரியர் தமது அறிவை மாணவருக்கு கடத்துபவராகச் செயற்படுகின்றார். ஆசிரியரிடத்தே இருந்து மாணவருக்கு அறிவு கடத்தப்படுதல் மாத்திரம் இடம்பெறும். இவ்வகிபாகம் விரிவுரை போன்றதாகவே அமையும். இக்கற்றல் - கற்பித்தற் செயன்முறை மாணவரது சிந்தனையை-கற்பனையைத் தட்யெழுப்புவதிலே அவர்களது ஆளிடை மற்றும் சமூகத்திறன்களை விருத்தி செய்வதிலே கணிசமான பங்களிப்பைச் செய்வதில்லை.

ஆசிரியர் வகுப்பறையில் நடத்தும் கலந்துரையாடல், கொடுக்கல்- வாங்கல் வகிபாகத்தின் தொடக்கமாகும். ஆசிரியருக்கும் மாணவருக்கும், பின் மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றம், அதனைத் தொடர்ந்து உருவாகும் மாணவருக்கும் மாணவருக்கும் இடையிலான இடைத்தொடர்புகளும் படிப்படியாக ஓர் உரையாடலாக மாற்றம் பெறும். அறிந்தவற்றில் இருந்து அறியாதவற்றுக்கும், எளிமையானவற்றில் இருந்து சிக்கலானவற்றுக்கும் காட்சி (தூல) நிலையில் இருந்து கருத்து நிலைக்கும் மாணவரை இட்டுச் செல்வதற்காக ஆசிரியர் தொடர்ந்து வினாக்களை விடுப்பார்.

தேர்ச்சிசார் கல்வியில் மாணவரது பணிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. வகுப்பில் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் அந்தந்தத் தெர்ச்சியில் குறைந்தபட்சம் அண்ணளவாகவும், பாண்டித்திய மட்டத்தையேனும் அடையத்தக்க வகையில் தலையிட்டு, வளவாளராக (Resource Person) ஆசிரியர் செயற்படுவார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களையும் ஏனைய வசதிகளையும் மாணவரது இயலுமைகளையும் இயலாமைகளையும் இனங்காணல். தேவையான முன்னூட்டலும் பின்னூட்டலும் வழங்கி மாணவரது கற்றலை மேம்படுத்தல், வகுப்பறைக்கு அப்பாலும் கற்றல் - கற்பித்தலை இட்டுச் செல்வதற்காக, பொருத்தமான உபகரணங்களைத் தயார்ப்படுத்தல் போன்றவை எல்லாம் ஆசிரியரால் ஆற்றப்பட வேண்டிய அடிப்படைப் பணிகளாகும். மேற்போன்றவாறான பணிகளை உள்ளடக்கிய ஆசிரியர் வகிபாகமே நிலைமாற்ற வகிபாகம் (Transformation) எனப்படுகின்றது.

இதன் முதலாம் பகுதியில் பாடத்திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. இப்பாடத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தத்தக்க செயற்பாட்டுத் தொடர் இரண்டாம் பகுதியில் அடக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாடும் குறைந்தபட்சம் மூன்று படிமுறைகள் அடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவரைக் கற்றலின்பால் ஈர்ப்பதே செயற்பாட்டின் முதலாவது படிமுறையினால் தொடர்புறுத்தும் படிமுறை (Engagement Step) எனப்படுகிறது. இதன் தொடக்கத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் வகிபாகத்தின் பண்புகளை வெளிக் காட்டியவாறு மாணவருடன் உரையாடுவர். இது பின்னர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய

அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படும். மேலும், செயற்பாடுகள் குறித்த கோடிகாட்டல்களும் வழங்கப்படும். இவ்வாறான கருத்துப் பரிமாற்றத்துக்காக ஆசிரியர் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்கள் கேட்டல், படங்களைக் காட்சிப்படுத்தல், புதினத்தாள் நறுக்குகளை முன்வைத்தல், காட்டி மறைக்கும் அட்டைகளைக் (Flash cards) காட்டுதல் போன்ற தூண்டல் முறை களைக் கையாளுதல், பிரச்சினைகள், புதிர்கள், விவகார ஆய்வு (Case Study) போன்ற வற்றை முன்வைத்தல், உரையாடல், போலச் செய்தல், படம், செய்துகாட்டல் ( Demonstration) போன்றவற்றை முன்வைத்தல், ஒலி நாடாக்கள், ஒலி ஒளி நாடாக்கள் போன்ற வற்றை பயன்படுத்தல் போன்ற பல்வேறு உத்திகளை இதற்காக ஆசிரியர் பயன்படுத்தலாம். சுருக்கமாகக் கூறுவதாயின், பின்வரும் மூன்று நோக்கங்களையும் அடைவதைக் கருத்திற் கொண்டே செயற்பாட்டின் முதலாவது படிமுறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

வகுப்பின் கவனத்தைக் கவர்தல்

தேவையான முன்னறிவை நினைவு கூர்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளித்தல்

செயற்பாட்டின் இரண்டாம் படிமுறையின் போது மாணவரை ஈடுபடுத்த எதிர்பார்க்கும் தேடியாய்வின் அடிப்படை அம்சங்களை அம்மாணவர்க்கு அறிமுகம் செய்தல்.

மாணவருக்கு கண்டறியும் வாய்ப்பை வழங்குவதற்காகவே செயற்பாட்டின் இரண்டாம் படிமுறை திட்டமிடப்பட்டுள்ளது. கண்டறிதலுக்கென விசேடமாகத் தயாரிக்கபட்ட அறிவுறுத்தற் படிவத்தை அடிப்படையாகக் கொண்டே மாணவர் கண்டறிகையில் ஈடுபடுவர். பிரச்சினையின் வெவ்வேறு அம்சங்களைக் குழுநிலையில் கண்டறிந்து ஒத்துழைத்துக் கற்கத்தக்க வகையில் இக்கண்டறிகையை ஆசிரியர் திட்டமிடல் வேண்டும். தரப்பட்டுள்ள மூல வளங்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வுடன் குழுக் கலந்துரையாடலை நடத்தியவாறு மாணவர்கள் கண்டறிகையில் ஈடுபடுதல் இப்படிமுறையின் சிறப்பியல்பாகும். தொடர்ந்தும் இவ்வாறான குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் தன்னடக்கம், ஏனையோரின் கருத்துக் களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் ஒற்றுமையாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவி புரிதல், நேர முகாமை, உயரிய தரமுடைய உற்பத்திகளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான பல தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கு இப்படிமுறையூடாக மாணவர்க்கு வாய்ப்புக் கிடைக்கும்.

கண்டறிகைக்காக மாணவரை வழிப்படுத்துகையில் மாணவர் குழுக்களின் தலைமைத் துவம் குறித்து ஆசிரியர் முடிவெடுத்தலாகாது. மாறாக, மாணவர் குழுவில் ஒருவர் தலைவராக உருவெடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குதல் ஆசிரியரின் பொறுப்பாகும். இலை மறைகாயாகக் காணப்படும் ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட்டு, தருணத்திற்கு ஏற்ப தலைமைத் துவத்தை ஏற்கும் வாய்ப்பு மாணவருக்குக் கிடைக்க இது வழிகோலும்.

செயற்பாட்டின் மூன்றாம் படிமுறையின் போது, ஒவ்வொரு குழுவுக்கும் தாம் கண்டறிந்தவற்றை அதாவது தமது கண்டறிகையின் பெறுபேறுகளை ஏனையோரும் அறிந்து கொள்ளும் பொருட்டு, முன்வைப்புக்களை வைப்பதற்கு மாணவரைத் தூண்டுவதே இங்கு ஆசிரியரின் பணியாகும்.

ஒவ்வொரு மாணவருக்கும் பொறுப்புக்களை ஆற்றும் வாய்ப்புக் கிடைக்கும் வகையில் முன்வைப்பைத் திட்டமிட்டுக் கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்துதல் பயனுடையதாகும். வழக்கமாக ஆசிரியரின் குரல் ஒலிக்கும் வகுப்பறையில் மாணவரின் குரல் ஓங்கி ஒலிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றமை, மாணவர் தாம் கண்டறிந்தவற்றுக்கு விளக்கமளித்தலுடன் (Explanation) தொடர்புடைய இப்படிமுறையின் சிறப்பியல்பாகும்.

வாழ்க்கைக்கு சமய அறிவு அவசியமான போதிலும் அறிவினால் மட்டும் சமயத்தை வாழ்க்கையோடு ஒன்றிணைப்பதற்கு முடியாது. எனவே சமயத்தை வாழ்க்கை அனுபவமாக்கிக் கொள்ள வேண்டும். இதனை வகுப்பறைக் கற்றலுக்கு மேலதிகமாக வகுப்பறையில் பயன்படுத்தப்படும் நுட்ப முறைகளையே முடியும் எனலாம். இதனை எவ்வாறு நிறைவேற்றுவது? உதாரணமாக இங்கு சில நுட்ப முறைகளை முன்வைக்கலாம். இந்த நுட்ப முறைகளைப் பயன்படுத்தும் போது வகுப்பறையில் கற்கும் விடயங்களோடு கற்பித்தல் முறைகளும் சமமாகவும் ஒருமித்தும் இருப்பதோடு கற்கும் விடயங்களை வாழ்க்கை அனுபவமாகவும் அறிவின் விருத்திக்கும் காரணமாக அமைகிறது.

- செபக் கூட்டம் ஒன்றினை ஆயத்தப்படுத்தி அதில் செயலாற்றலோடு பங்குபற்றல்.
- பெரிய வியாழன், பெரிய வெள்ளி பாஸ்கா ஞாயிறு, நத்தார் ஆகிய சமய விழாக்களில் பங்குபற்றல்.
- சபையிலுள்ள இரங்கல் பணிகளில் பங்குபற்றல்.
- சங்கங்களில் சேர்ந்து செயலாற்றுதல்.
- தியானங்களிலும் செபங்களிலும் பங்குபற்றல்.
- வீட்டில் நடைபெறும் செபங்களில் பங்குபற்றல்.
- முதியோர் இல்லம், சிறுவர் இல்லம் என்பவற்றில் சுயவிருப்புடன் பணியாற்றல்.

இவ்வாறான நுட்ப முறைகளின் வழியாக வகுப்பறையில் பெற்ற அறிவினை அனுபவ மாக்கிக் கொண்டு சமயத்துக்கும் வாழ்க்கைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பினைக் கட்டியெழுப்புவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. மேலே உதாரணங்களாக கூறப்பட்ட நுட்ப முறைகளுக்கு மேலதிகமாக வேறும் நுட்ப முறைகளில் மாணவர்களை சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு ஈடுபடுத்துவதற்கு இந்தப் புதிய பாடத்திட்டத்தின் வழியாக ஆசிரியர்களுக்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

## 11.2.2 தரவிருத்தி உள்ளீடு

1.0
- பரி. வேதாகமம்
- தரம் 11 பாடநூல்
- பாடத்துடன் தொடர்புடைய வேதவசன அட்டைகள்
- படங்கள்

2.0
- பரி. வேதாகமம்
- தரம் 11 பாடநூல்
- மாதிரியுரு
- படங்கள்

3.0
- பரி. வேதாகமம்
- தரம் 11 பாடநூல்
- தினசரி பத்திரிகை
- VCD
- படங்கள்
- ஒலிநாடாக்கள்
- மேகசின் (பருவ இதழ்ச்சுவடி)

4.0
- பரி. வேதாகமம்
- தரம் 11 பாடநூல்
- வரலாற்று நூல்கள்
- படங்கள்

5.0
- பரி. வேதாகமம்
- தரம் 11 பாடநூல்
- கிறிஸ்தவ பாடங்கள்
- தினசரி பத்திரிகை
- VCD

**தேர்ச்சி 1.0** : புதிய கண்ணோட்டத்தில் மனுவுருவான மெசியாவை பின்பற்றுவர்

**தேர்ச்சி மட்டம் 1.1** : அடிமை நிலையிலிருந்து விடுதலையை நோக்கி மெசியாவின் ஊடாக நற்பலனளிக்க வேண்டும் என்பதை விளக்குவர்.

**செயற்பாடு 1.1** : "விடுதலையை எதிர்பார்த்து மெசியாவின் ஊடாக நற்பலன் கொடுக்கச் செயற்படுவோம்"

**நேரம்** : 160 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 1.1.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 1.1.2 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 1.1.1**

- இணைப்பு 1.1.1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் விளங்கும் வண்ணம் ஓரிரு முறைகள் வாசியுங்கள்.
- மெசியாவின் வருகையை எதிர்பார்ப்பது பற்றி விளக்குங்கள்.
- 'விடுதலை' பற்றிய கதைகள், சம்பவங்கள் , சிந்தனைகள் போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ள மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அடிமை நிலையிலிருந்து விடுதலையை நோக்கிய பயணம் பற்றிய ஒரு கலந்துரையாடலில் மாணவர்கள் திறந்த மனதுடன் ஈடுபட வாய்ப்பளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

> - அடிமைத் தனத்திலிருந்து வேறுபட்ட அடிமைத் தனங்கள் - உதாரணம் : பெண்ணடிமைத்தனம், சிறுவர்களை கட்டாய வேலைக்கமர்த்தல், வேலையின்மை, அடிப்படை வசதிகளின்மை அடிப்படை மனித உரிமைகளின்மை, பாலியல் துன்புறுத்தல்கள், வன்முறை கலாச்சாரம்.... முழு விடுதலையை நோக்கி பயணிக்க வேண்டும் என்பது

- காரிருளிலும், சாவின் நிழல் சூழ்ந்துள்ள இடத்திலும் துன்புற்றோர் பேரொளியை அனுபவித்து நம்பிக்கை பெற்று வாழ மெசியா எதிர்பார்ப்பும் , வருகையும் உதவியது என்பது (எசாயா 9:1-7)
- நீதியின் ஆட்சியின் வருகை இறையாட்சிப் பண்புகளுக்கு ஏற்ற வாழ்வை வழங்கும் என்பது (ஏசாயா 11:1-9)
- கடவுள் நம்முடன் இருக்கின்றார் (இம்மானுவேல்) என்பது
(மத்தேயு 1:22, 23)
- பேதுருவும் திருமுழுக்கு யோவானும் மெசியா வாகிய இயேசுவை நேருக்கு நேர் எதிர்கொண்டு அனுபவம் பெற்றனர் என்பது (பேதுருவின் பற்றுறுதி அறிக்கை- 'நீர்மெசியா வாழும் கடவுளின் இறைமகன் "(மத்தேயு 16:13-20) திருமுழுக்கு யோவானின் அறிக்கை - "இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி (யோவான் 1:15-36)

(20 நிமிடங்கள்)

**படி 1.1.2** :
- மாணவர்களை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- செயற்பாட்டுப்படிவப் பிரதிகளை மாணவர்களிடம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் தேவையான எழுது கடதாசி, நிறப்பேனா, என்பனவற்றை வழங்குங்கள்.
- குழு செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத் துங்கள்.
- அறிக்கைகள் சமர்ப்பிக்க ஏற்றவாறு குழுக்களை ஆயத்தம் செய்யுங்கள்.

(60 நிமிடங்கள்)

**படி 1.1.3** :
- ஒவ்வொரு குழுவும் அறிக்கைகளை, கவிதை, கதை, நாடகம் , ஓவியம் - சித்திரம் பாடல் ... போன்றவற்றில் ஏதாவதொன்றின் மூலம் வெளிப் படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதே குழுவினர் அறிக்கையைப் பூரணப்படுத்த இடமளியுங்கள்.
- குழுவின் ஏனைய அங்கத்தவர்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.

- குழுக்கள் முன்வைத்த விடயங்களைத் தொகுக்கும் வகையில் கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையப்படுத்தி கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - இஸ்ரவேல் மக்களின் வரலாற்றில் மெசியா எதிர்பார்ப்பு மிகவும் முக்கியமானது என்பது
> - மெசியா தரும் விடுதலை நிறைவானது என்பது
> - மெசியா சிந்தனைகள், எதிர்பார்ப்புக்கள், செயற்பாடுகள் இயேசு கிறிஸ்துவிற்கு மிகவும் பொருத்தமாக காணப்பட்டது என்பது
> - இயேசு இஸ்ரவேலரின் மெசியா சிந்தனைகள் கடந்து வித்தியாசமான வாழ்வு தரும் மெசியாவாக (இயேசு - பணியாற்றும் மெசியா) செயலாற்றினார் என்பது
> - மெசியா எதிர்பார்ப்பும் மெசியாவாகிய இயேசுவின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் எம்மை நிறைவான விடுதலைக்குரிய பலன்களை அடையவும், அதனை மனுக்குலத்துடன் பகிர்ந்து கொள்ளவும் வழிகாட்டுகின்றன என்பது
> - எமது தனிப்பட்ட வாழ்விலும், சமூக வாழ்விலும் காணப்படும் அடிமைத்தனங்களை (தனிப்பட்ட பாவம், சமூக பாவம்) அடையாளம் கண்டு, அவற்றிலிருந்து விடுதலையை நோக்கி பயணிக்க வேண்டும் என்பது.

(80 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. 'மெசியா' பற்றிய இஸ்ரவேலரின் எதிர்பார்ப்பினை விளக்குவர்.
2. 'மெசியா' மூலம் நிறைவான விடுதலையை, அனுபவிக்க முடியும் என்பதை இயேசுவின் வாழ்வினூடாக விளக்குவர்.
3. மெசியாவாகிய இயேசுவின் வாழ்க்கை முறையை பின்பற்றும் போது எதிர்கொள்ள வேண்டிய ஐந்து சவால்களைக் கூறுவர்.
4. இன்றைய சூழ்நிலையில் நாம் எதிர்பார்க்கும் விடுதலை எப்படிப்பட்டதாக அமைய வேண்டும் என விளக்குவர்.
5. நாம் எதிர்கொள்ளும் அடிமைத்தன நிலைகள் ஐந்தினைப் பெயரிடுவர்.
6. அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு விடுதலையை நோக்கி வர வேண்டும் என தீர்மானம் எடுப்பர்.

## குழுச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்

- குழு ஒவ்வொன்றும் தத்தமது செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்துங்கள்.
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

### தகவல் கோவை

**இணைப்பு 1.2.1**

இஸ்ரவேலரின் வாழ்விலும் வரலாற்றிலும் மெசியா எதிர்பார்ப்பு மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகும். வரலாற்றில் கடவுள் தலையிட்டு வேற்று நாட்டவரின் ஆட்சிகளிலிருந்து தம்மை விடுவித்து முழு உலகினையும் ஆட்சி செய்வார் எனும் நம்பிக்கை யூதர்களின் மெசியா எதிர்பார்ப்பில் காணப்பட்டது. இதனால் அரசர்கள் குருக்கள் இறைவாக்கினர்கள் என்போரையும் மெசியாவாக சிந்தித்து செயற்பட்டு வந்தனர் என்பதனை வரலாறு பறை சாற்றுகின்றது. இதனாலேயே பரிசேயர்கள், சதுசேயர்கள், மறைநூல் அறிஞர்கள் , செலோத்தேயர்கள் ..... போன்ற அனைத்துக் குழுக்களும் இயேசுவை எதிர்த்து வன்முறையை பாவித்து கொலை செய்தனர். வித்தியாசமான மெசியாவாகிய இயேசுவின் சிந்தனைகள் செயற்பாடுகள் சரியானவை என்பதை கடவுள், இயேசுவின் உயிர்ப்பு மூலம் உலகிற்கு பறைசாற்றினார்.

நாம் மெசியா சிந்தனைகளின் அடிப்படையில் வாழும் போது நிச்சயம் நிறைவான விடுதலையை அடைய முடியும். இந்த விடுதலை மனிதம் மலரவும் மனித மாண்புகள் செழிப்புறவும் இறையாட்சி நடைபெறவும் மனுகுலத்திற்கு வழிகாட்டும்.

### செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 1.1.2**

**குழு 1 :** மெசியாவின் பண்புகள் மையமான மெசியாவின் ஆட்சி எப்படியிருக்கும் என விளக்குங்கள்.

**குழு 2 :** வேறுபட்ட அடிமைத்தனங்களை அடையாளம் கண்டு, விடுதலைக்கான வழிவகைகளை முன்வையுங்கள்.

**குழு 3 :** ‘இயேசு ஒரு வித்தியாசமான மெசியா‘ என்பதை விளக்குங்கள்.

**குழு 4 :** இஸ்ரவேலரின் நோக்கில் மெசியா தரும் விடுதலையையும் , இயேசுவின் சிந்தனைகளின் படி எமது நோக்கில் மெசியா தரும் விடுதலையையும் ஒப்பிட்டு நோக்குங்கள்.

**தேர்ச்சி 1.0** : புதிய கண்ணோட்டத்தில் மனுவுருவான மெசியாவை பின்பற்றுவர்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : நிறைவான தலைமைத்துவ பண்புகளை நல்லாயன் மூலம் விளக்குவர்.

**செயற்பாடு 1.2** : 'சிறந்த தலைமைத்துவத்தை நல்லாயன் (இயேசு) மூலம் அறிந்து நல்லாயர்களாக வாழ்வோம்.'

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 1.2.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 1.2.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- நல்லாயன் இயேசுவின் படம், நல்ல தலைவர்களின் படங்கள்
- கடதாசி
- நிறப்பேனா

**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 1.2.1**

- உலகின் வரலாற்றில் சிறந்த தலைவர்களாக செயல்பட்டவர்களின் உருவப்படங்களைக் காட்டி கலந்துரையாடலை ஆரம்பிக்கவும் (உ+ம் ஸ்ரீநேரு, மகாத்மாகாந்தி, மாட்டின்லூதர், அன்னைதிரேசா.)
- மாணவர்கள் தாம் அறிந்த தலைவர்கள் பற்றி கருத்துக்கள் வெளியிட இடமளியுங்கள்.
- நல்லாயன் இயேசு பற்றிய சிந்தனைகளை பகிரச் செய்யுங்கள்.
- இணைப்பு 1.2.1 இலுள்ள தகவல் கோவையை வாசியுங்கள்.
- பின்வரும் விடயங்களின் அடிப்படையைக் கொண்ட கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> - இஸ்ரவேலின் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற ஆயர்களும் அவர்களின் செயற்பாடு களும் கீழ்வருமாறு அமையும் என்பது, (நல்லாயர்கள் - எசேக்கியல் 34:1-10, தீய ஆயர்கள் எசேக்கியேல் 34:11-19)
> - கடவுளே நல்லாயர் என்பது (திருப்பாடல்கள் 23)
> - இயேசுவே நல்லாயன் என்பது (யோவான் 10-7-19)
> - நல்லாயர்களாக செயற்படுவதே உண்மை யான சீடன் என்பது (திருத்தூதர் பணிகள் 20 :15-23)
> - எங்களை நிறைவான விடுதலைக்கு இட்டுச் செல்லும், நல்லாயருடைய பண்புகளை பின்பற்றி, நல்லாயர்களாக வாழ்வோம் என்பது

(10 நிமிடங்கள்)

**படி 1.2.2** :

- மாணவர்களை நான்கு குழுக்களாக பிரியுங்கள்.
- செயற்பாட்டு படிவத்தின் பிரதிகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் டிமை கடதாசிகள், பிளாற்றினம் பேனைகள், எழுது கடதாசிகள் என்பனவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவினரையும் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.
- குழுவின் செயற்பாட்டை உறுதிப்படுத்துங்கள்.
- அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு குழுக்களை ஆயத் தப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 1.2.3** :

- நல்ல தலைவர்களின் நல்ல விழுமியங்களை டிமை தாளில் குழுக்கள் வாரியாக எழுதி வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துக்களை ஆக்க பூர்வமான முறையில் விமர்சிக்க ஏனைய குழுக் களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துக்களை ஆக்க பூர்வமான முறையில் விமர்சிக்க ஏனைய குழுக் களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- நல்லாயர் பற்றிய விவிலியச் சிந்தனைகளை வெளிப்படுத்த இடமளியுங்கள்.
- குழுக்களின் சிந்தனைப் பகிர்வுடன் கீழ் குறிப்பிடப் படும் கருத்துக்களை இணைத்து கலந்துரை யாடலில் ஈடுபடுங்கள்.

(40 நிமிடங்கள்)

- இஸ்ரவேலரின் வரலாற்றில் நல்லாயர்கள் பலர் செயற்பட்டுள்ளர் என்பது
- நாம் புதிய நிறைவான தலைமைத்துவத்தை, கடவுள் இயேசு சீடர்கள் போன்ற நல்லாயர் களிடமிருந்து கற்க வேண்டும் என்பது
- எம்மத்தியிலும் பல்வேறுபட்ட சவால்களை எதிர் கொண்ட வண்ணம் சிலர் நல்லாயர்களாக (நற்தலைவர்களாக) செயற்பட்டு வருகின்றனர் என்பது
- நல்லாயர்களாக தலைமைத்துவம் வழங்கு தலும் நல்லாயர்களை பின்பற்றுதலும் ஒவ்வொருவரதும் கடமையாகும் என்பது
- நாம் உண்மையான சீடத்துவ பண்புகளுடன் வாழும் போது பல்வேறுபட்ட சிக்கல்களையும் சவால்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பது
- நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட நிலையிலும் சமூகமாகவும் நல்லாயர்களாக வாழ்ந்து, நல்ல தலைமைத்துவத்தை பகிர்ந்து கொண்டு, தீமை நிறைந்த இன்றைய உலகை நன்மை நிறைந்த உலகாக மாற்ற, கடவுளுடன் இணைய, கடவுள் அழைக்கின்றார் என்பது

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. நல்லாயர்களின் தலைமைத்துவம் பற்றி எழுதுவர்.
2. நல்லாயன் இயேசுவின் தலைமைத்துவம் பற்றிக் கூறுவர்.
3. நிறைவான விடுதலைக்குப் பொருத்தமான தலைமைத்துவத்தை இன்றைய சூழ்நிலையில் விளக்குவர்.
4. சமகாலத்தில் வாழும் நல்ல தலைவர்கள் இருவரை அடையாளம் கண்டு விளக்குவர்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- ஒவ்வொரு குழுவும் தம் செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.
- உங்களது குழுவின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 1.2.1**

இஸ்ரவேலின் வரலாற்றில் நல்லாயர்கள் பலர் நல்ல தலைமைத்துவத்தை வழங்கினர் இதனால் மக்கள் நல்ல வாழ்வை வாழ்ந்தனர் எனினும் தீய தலைவர்களின் செயற்பாடுகள் இஸ்ரவேலை அடிமைத்தனத்துக்கு இட்டுச் சென்றது.

கடவுளை நல்லாயராக நோக்கிப் பலர் வாழ்ந்தனர். .ஆயர்களாக தங்கள் மந்தைகளை வழிநடத்திய இஸ்ரவேலர்கள் பலருக்கு கடவுளை ஆயராக நோக்குவது பொருள் மிக்கதாக இருந்தது. தங்கள் மந்தைகளை தாங்கள் வழி நடத்துவது போல் தங்களை கடவுள் ஆயராக வழி நடத்துகின்றார் என்ற அடிப்படையில் கடவுளை ஆயராக நோக்கினர். மந்தைகளின் வாழ்வை பாதுகாக்க உயிரையும் கொடுக்கும் நல்ல ஆயராக இயேசுவை இஸ்ரவேலர் மட்டுமல்ல கிறிஸ்தவர்களும் நோக்குகின்றனர். இயேசுவின் சீடர்களையும் ஆயர்களாக நோக்கலாம்.

ஆயர்கள் மந்தைகளின் உருவாக்குதலுக்கும், வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் பொறுப் பாளர்கள். நல்ல தலைவர்கள் ஆயர்கள் போல மனுகுலத்தின் இருப்புக்கும் , வளர்ச்சிக்கும் எதிர்காலத்துக்கும் பொறுப்பானவர்களாக செயற்பட வேண்டும் நல்ல தலைவர்களாக செயற் படுவதன் மூலம் நல்லுலகத்தை உருவாக்கும் செயற்பாட்டில் கடவுளுக்கு உதவ வேண்டும்.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 1.2.2**

1. நல்ல தலைவர்களின் படங்கள், கதைகள், வரலாற்று நிகழ்வுகள் என்பனவற்றை சேகரியுங்கள்.
2. நல்ல தலைவர்களின் பண்புகளை அட்டவணைப்படுத்துங்கள்.
3. நல்ல தலைவர்களுக்கு ஏற்படும் சவால்கள் ஐந்தினை எழுதுங்கள்.

**தேர்ச்சி 1.0** : புதிய கண்ணோட்டத்தில் மெசியாவை பின்பற்றுவர்

**தேர்ச்சி மட்டம் 1.3** : துன்பங்களை உறுதியோடு எதிர்கொள்வர்

**செயற்பாடு 1.3** : "உண்மையான சீடர்களாக வாழ்ந்து உறுதியாக துன்பங்களை எதிர்கொள்வோம்".

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 1, 3, 1 இலுள்ள தகவற் கோவை
- இணைப்பு 1.3.1 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- திருவிவிலியம்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 1.3.1**

- துன்பங்கள், பற்றி மாணவர்கள் நினைப்பதை வெளியிட இடமளியுங்கள்.
- மனுக்குலம் துன்பங்களை எதிர்கொள்ளும் சந்தர்ப் பங்களை மாணவர்கள் வெளிப்படுத்த இடமளி யுங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்ட கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- இஸ்ரவேலர் துன்பங்களை எதிர்கொண்டனர் என்பது (விடுலைப்பயணம் 3:7-9, யோபு 1,2 42:7-16,31 எரேமியா 20:7-18) யோபு1,2, 42:7-16,31,
- இயேசு பல்வேறு துன்பங்களை எதிர்கொண்டார் என்பது (மாற்கு 8:34, லூக்கா 4:29,30, யோவான் 18:23)
- இயேசுவின் சீடர்கள் துன்பங்களை எதிர்கொள் கின்றனர் என்பது (திருத்தூதர் பணிகள் 4:1-22, திருவெளிப்பாடு 1:9)
- சமகாலத்தில் கிறிஸ்தவர்கள் துன்பங்களை எதிர் கொண்டனர் என்பது (மார்ட்டின் லூத்தர் கிங், மைக்கல் ரொட்ரிகோ ,அன்னைதெரேசா)
- இன்றைய சமூகத்தில் துன்பங்கள் கீழ்வருமாறு அமையும் என்பது
- இயற்கையான துன்பம். உதாரணம்: வெள்ளம்
- செயற்கையான துன்பம். உதாரணம்: வேலை யின்மை, வறுமை

(10 நிமிடங்கள்)

**படி 1.3.2** :

- மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்.
- செயற்பாட்டுப் படிவத்தின் பிரதிகளைக் குழுக் களுக்கு வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும், டிமை கடதாசி நிறப்பேனா என்பனவற்றை வழங்குங்கள்.
- குழுக்கள் ஒவ்வொன்றையும் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.
- குழுவினரின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப் படுத்துங்கள்.
- அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு குழுக்களை ஆயத் தப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 1.3.3.** :

- 'துன்பம்' பற்றிய பல்வேறு கருத்துக்களை டிமை கடதாசியில் குழுக்கள் வாரியாக எழுதி வகுப் பறையில் பகிர்ந்து கொள்ள இடம் கொடுங்கள்.
- ஆக்கபூர்வமான முறையில் பகிர்ந்து கொள்ளப் பட்ட கருத்துக்களை விமர்சிக்க ஏனைய குழுக் களுக்கு இடமளியுங்கள்.
- கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களுடன் கலந் துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - தனிப்பட்டோர் எதிர் கொள்ளும் துன்பங்கள், சமுகமாக எதிர்கொள்ளும் துன்பங்கள், இயற்கையாக ஏற்படும் துன்பங்கள் அப்பாவிகள் எதிர்கொள்ளும் துன்பங்கள் என துன்பங்களை வகைப்படுத்தி நோக்கலாம். என்பது
> - துன்பங்கள் மறைபொருள் என்பது (யோபு 38-41)
> - இறைவாக்கினர்கள் இறையாட்சிக்காக செயற் பட்டதால் துன்பங்களை எதிர்கொண்டனர் என்பது (எரேமியா 38, மாற்கு 6:14-29)
> - இறையாட்சிக்காக உழைக்கும் போது, துன்பங்களை எதிர்கொள்ள எம்மைத் தயார் படுத்தி கொள்ள வேண்டும் என்பது. (மாற்கு 14:36)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- தனிப்பட்டோர் துன்பங்களையும் சமூக துன்பங்களையும் ஒப்பிட்டு விளக்குவர்.
- இன்றைய சூழ்நிலையில் அப்பாவிகளின் துன்பங்களை அடையாளங் கண்டு குறிப்பிடுங்கள்.
- துன்பங்களுக்கு பலியானவர்களை அடையாளம் கண்டு குழுவாக உதவி செய்யுங்கள்
- 'துன்பங்களை நீக்குவது' தொடர்பான கலந்துரையாடலில் குழுக்கள் ரீதியாக ஈடுபடுங்கள்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- ஒவ்வொரு குழுவும் தம் செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.
- உங்கள் குழுவினரின் கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 1.3.1**

துன்பங்களை எதிர் கொள்வது மனித வாழ்வில் முக்கியமான தொன்றாகிவிட்டது. தனிநபர் எதிர் கொள்ளும் துன்பங்கள், சமூகம் எதிர்கொள்ளும் துன்பங்கள், இயற்கையாக ஏற்படும் துன்பங்கள், அப்பாவிகள் எதிர்கொள்ளும் துன்பங்கள் என துன்பங்களை வகைப்படுத்தலாம். இத்துன்பங்களை விட்டு நிறைவான விடுதலையை நோக்கி நாம் பயணிக்க வேண்டும்.

இறையாட்சியை நோக்கிய பயணத்தில் துன்பங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் தவிர்க்கமுடியாததாக காணப்படுகின்றன. இதனை இஸ்ரவேலரின் வரலாற்றிலும், இயேசுவின் வாழ்விலும், இயேசுவின் சீடர்களின் வாழ்விலும் காணலாம். இன்றைய சூழ்நிலையிலும் உண்மையான சீடத்துவத்துடன் வாழ்பவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு துன்புறு கின்றனர்.

துன்பங்கள் மறைபொருள் மிக்கவை. முழுமையாக எம்மால் புரிந்து கொள்ள முடியாதவை. ஆனாலும் இயேசுவின் மனுவுரு வாழ்வை அடிப்படையாகக் கொண்டு நாம் ஒவ்வொருவொரும் இறையாட்சியை நோக்கி செயற்பட வேண்டும். நாம் தனிப்பட்டோராகவும் சமுகமாகவும் எதிர்கொள்ளும் துன்பங்களை 'பிரசவ வேதனை' போன்றதாக நோக்க வேண்டும்.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 1.3.2**

1. உண்மையான சீடத்துவத்துடன் வாழ்பவர்கள் எவ்வாறு துன்பங்களை எதிர்கொண்டனர் என எழுதுங்கள்.
2. எத்தகைய துன்பங்களை எதிர்கொண்டாலும், அதனை உரிய முறையில் நோக்கவும் வாழ்க்கையை விட்டு தப்பியோடாமலும் (உதாரணம் தற்கொலை) செயற்பட தீர்மானம் எடுங்கள்.
3. நாம் துன்பங்களை இல்லாமற் செய்வதற்கு எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம் என குறிப்பிடுங்கள்.
4. துன்பங்களில் சிக்கித் தவிக்கும் சமூகத்தை மாற்றி நல்ல வாழ்வு கிடைக்கச் செய்ய செயற்படும் சிலரை அடையாளம் கண்டு அவர்கள் பற்றி எழுதுங்கள்.
   (பேராயர் டெஸ்மன் டூட்டு)

**தேர்ச்சி 1.0** : புதிய கண்ணோட்டத்தில் மெசியாவை பின்பற்றுவர்

**தேர்ச்சி மட்டம் 1.4** : துன்புறும் ஊழியரை முன்மாதிரியாக ஏற்று பின்பற்றுவர்.

**செயற்பாடு 1.4** : துன்புறும் ஊழியரை (இயேசு கிறிஸ்து) பின்பற்றி வாழுவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 1.4.1 இலுள்ள தகவற் கோவை
- இணைப்பு 1.4.2 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- திருவிவிலியம்
- டிமை நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 1.4.1**

- துன்புறும் ஊழியர் பற்றி பின்வரும் விவிலியப் பகுதிகள் கூறும் கருத்துக்களை மாணவர்கள் பகிர்ந்துகொள்ள இடமளியுங்கள்.
  எசாயா 41.8-13
- துன்புறும் தொண்டர்களின் தியாகத்தை உணர்ந்து விளக்க வழியேற்படுத்துங்கள்.
- இணைப்பு 1.4.1 இலுள்ள தகவல் கோவையை வாசியுங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரை யாடலை மேற்கொள்ளுங்கள்.

- துன்புறும் ஊழியரின் பண்புகளை எசாயா இறைவாக்கினர் நூலில் இருந்து அறிந்து கொள்ளலாம் என்பது
  (எசாயா 42:1-8, 49:1-7, 50:4-9, 52:13-53:12)
  துன்புறும் ஊழியரை பின்பற்றி வாழும் பல்வேறுபட்ட துன்பங்களையும் சவால்களை யும் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பது
  (இயேசு கிறிஸ்து, திருமுழுக்கு யோவான், பவுல் ...)
- இன்றைய சமூகத்தில் துன்புறும் ஊழியர் களை நாம் அடையாளம் காணமுடியும் என்பது)
- தனிப்பட்டவர்களாகவும், சமூகமாகவும் நாம் துன்புறும் ஊழியர்களாக செயற்பட வேண்டும் என்பது

**படி 1.4.2** :

- மாணவர்களை சிறு குழுக்களாக பிரியுங்கள்.
- செயற்பாட்டுப் படிவத்தின் பிரதிகளைக் குழுக் களுக்கு வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும், நிறப்பேனா, டிமை கடதாசிகள் என்பனவற்றை வழங்குங்கள்.
- குழுக்கள் ஒவ்வொன்றையும் கலந்துரை யாடலில் ஈடுபடுத்துங்கள்.
- குழுவினரின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழுக்களை ஆயத் தப்படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 1.4.3.** :

- விவிலியப் பார்வையில், துன்புறும் ஊழியர் களின் பண்புகளையும், இன்றைய தலைவர் களின் பண்புகளையும் ஒப்பிட்டு டிமை கடதாசியில் குழுக்கள் வாரியாக எழுதி வகுப் பறையில் மாணவர்கள் பகிர்ந்து கொள்ள இடமளியுங்கள்.
- குண நிரப்பு செயற்பாட்டில் ஈடுபட அதே குழு வுக்கு இடமளியுங்கள்.
- ஆக்கபூர்வமான முறையில் விமர்சனங்களை வெளிப்படுத்த ஏனைய குழுக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகை யில் கலந்துரையாடல் மூலம் கருத்துக்களை முன்வையுங்கள்.

> - துன்புறும் ஊழியர்களின் பண்புகள், இஸ்ரவேல் மக்களுக்கு நல்வாழ்வும் நம்பிக்கையும் அளிக்கும் சிறுபான்மை (எஞ்சியோர்-Remnant) எசாயா 11: 1 பணியாளர்கள்
>   மக்கள் கூட்டத்தை ஏற்படுத்தியது என்பது எசாயா 42:1-9, 49:1-7, 50:4-9 52:13-53:12)
> - துன்புறும் ஊழியர்களின் பண்புகள் அனைத்தும் இயேசுவில் காணப்பட்டன என்பது
>   (மாற்கு 8:31-38)
> - துன்புறும் ஊழியரான இயேசு, இறையாட் சிக்காக தன்னலம் துறந்தது - தேவையேற் படுமிடத்து தன்வாழ்வையும் இழக்க தயாராக இருந்தார் என்பது
>   (மாற்கு 8:31-38)

- துன்புறும் ஊழியரான ஒருவர் அல்லது ஒரு சமூகம் வாழும் போது புறக்கணிப்பை எதிர்கொள்ள தம்மை துயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது (மத்தேயு 13:53-58)
- இன்றைய சூழ்நிலையில் துன்புறும் ஊழியராக இயேசுவைப் போல வாழ கடவுள் ஒவ்வொருவரையும் அழைக்கின்றார் என்பது

(40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- "விவிலியப் பார்வையில் துன்புறும் ஊழியர்" என்பதை அடிப்படையாகக் கொண்டு குழுவாக நாடகப் பிரதி ஒன்றை தயாரிப்பர்.
- "இன்றைய சூழ்நிலையில் துன்புறும் ஊழியர்" என்பதை அடிப்படையாகக் கொண்டு குழுவாக நாடகப் பிரதியொன்றை தயாரிப்பார்.
- துன்புறும் ஊழியராக நாம் ஒவ்வொருவரும் இணைந்து செயற்பட இன்றே தீர்மானம் மேற்க்கொள்வர்.
- சமகால துன்புறும் தொண்டர்களின் கதைகளை தேடி திரட்டி தொகுப்பர்.

## குழுச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்

- உங்கள் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டுப் படிவத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக குறித்துக் கொள்ளுங்கள்.
- கலந்துரையாடிப் பெற்ற விடயங்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.
- வகுப்பறையில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 1.4.1**

இஸ்ரவேலரின் வரலாற்றில் சிறப்பாக எசாயாவின் காலத்தில் துன்புறும் ஊழியர்கள் மிகவும் முக்கியத்துவம் பெற்றனர். துன்புறும் ஊழியர், சிறுபான்மை (எஞ்சியோர் - Remnant) ஏசாயா 11:1) மக்கள் கூட்டமாகும். இவர்களின் செயற்பாடுகள் மக்களுக்கு நம்பிக்கையும் ஆறுதலையும் அளித்தன.

இயேசுக் கிறிஸ்துவை துன்புறும் ஊழியராக நோக்குவது மிகவும் பொருத்தமானது. இயேசுவின் பண்புகள் அனைத்தும் துன்புறும் ஊழியருக்குரிய பண்புகளே. இயேசுவின் போதனைகள் வாழ்க்கைமுறை செயற்பாடுகள் அனைத்தும் துன்புறும் ஊழியருக்குரியவையே.

இயேசுவை பின்பற்றிய உண்மையான சீடர்களையும் துன்புறும் ஊழியர்களாக பார்ப்பது மிகவும் பொருத்தமானது. இன்றும் உண்மையான சீடத்துவப் பண்புகளோடு, நிறைவான விடுதலையை நோக்கி மனுவுருவான கிறிஸ்துவை பின்பற்றும் அனைவரும் துன்புறும் ஊழியர்களே.

நல்ல பண்புகளையும், மனித விழுமியங்களையும் பின்பற்றி வாழும் போது தீயவர்கள் தம் இருப்பு குறித்து குழப்பமடைகின்றனர். நல்ல பண்புகளையும் மனித விழுமியங்களையும் வாழ்க்கை மூலம் வெளிப்படுத்துபவர்களை துன்புறுத்துகின்றனர். இதனால் நல்லவர்கள் துன்புறும் ஊழியராக மாறுவது இன்றைய கட்டாய தேவையாகிவிட்டது. துப்பாக்கியின் ஆட்சியை விட்டுவிட்டு கடவுளின் ஆட்சியை பின்பற்றுங்கள் என துன்புறும் ஊழியர் இன்று செயற்படுகின்றனர். இவர்கள் பல்வேறு துன்பங்களையும் சவால்களையும் சந்தித்தாலும் கடவுளின் அருள் இவர்களோடு நிறைவாகவுள்ளது.

**தேர்ச்சி 2.0** : புனித பவுலின் வாழ்வு பணி என்பனவற்றின் அடிப்படையில் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து பணிகளை செய்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : புனித பவுலின் செயல்மையப் பணியை பின்னணியுடன் அறிந்து, அவரை பின் தொடர்வோம்.

**செயற்பாடு** : 'புனித பவுலின் செயல்மையப் பணியை பின்பற்றுவோம்'

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 2.1.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 2.1.2 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- திருவிவிலியம், திருவிவிலிய வசனங்கள் எழுதப்பட்ட அட்டைகள்
- புனித பவுலின் படம்
- எழுது கடதாசிகள்
- பிளாற்றினம் பேனைகள்
- பிறிஸ்டல் போர்ட் (கடதாசி அட்டைகள்)

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**
**படி 2.1.1.**

- 2.1.1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் விளங்கும் வண்ணம் ஓரிரு முறை வாசியுங்கள்.
- புனித பவுலை விளங்கிக் கொள்ள, அவரின் பின்னணி பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என விளக்குங்கள்.
- புனித பவுலின் பின்னணி பற்றி கூற மாணவர் களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- செயல் மையப் பணி பற்றி விளக்கமொன்றை வழங்குங்கள் அல்லது சுவரொட்டி மூலம் விளக்குங்கள்.
- புனித பவுலின் பின்னணி பற்றிய விபரங்களை வலியுறுத்தும் வகையில் கீழ்வரும் சிந்தனைகளை முக்கியத்துவப்படுத்தும் கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

> - பவுல், தாயின் வயிற்றிலிருந்த போதே, கடவுளின் அழைப்பை பெற்றிருந்தார் என்பது (கலாத்தியர் 1:15)
> - பவுல் எபிரேய மொழி பேசும் ஆற்றல் மிக்கவர் என்பது (திருத்தூதர் பணிகள் 22:1,2,)
> - பவுல் யூத இனத்தை சேர்ந்தவர் என்பது (திருத்தூதர் பணிகள் 22:3)

- பவுல் திருச்சட்டங்களை மிகவும் நுட்பமாக கமாலியோரிடம் கற்றிருந்தார் என்பது (திருத்தூதர் பணிகள் 22:3)
- பவுல் பரிசேய மரபில் பிறந்த பரிசேயனாக வாழ்ந்தார் என்பதை எருசலேம் மக்கள் அறிந்திருந்தனர் என்பது (திருத்தூதர் பணிகள் 26:4-6)
- பவுல் உரோமைய குடியுரிமையுடையர் என்பது (திருத்தூதர் பணிகள் 22:25)
- பவுலின் தொழில் கூடாரம் செய்தல் என்பது (திருத்தூதர் பணிகள் 18:3)
- புனித பவுல் செயல்மைய பணி செய்ய அவரது பின்னணியே காரணம்.

**படி 2.1.2** :

- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.
- செயற்பாட்டுப் படிவப் பிரதிகளை மாணவர்களிடம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் தேவையான எழுது கடதாசிகள் டிமை கடதாசிகள், பிறிஸ்டல் (கடதாசி) அட்டைகள், பிளாற்றினம் பேனைகள் என்பனவற்றை வழங்குங்கள்.
- விவிலிய வசனங்களின் கருப்பொருள் எழுதப்பட்ட அட்டைகளை குழுக்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளும்படி செய்யுங்கள்.
- குழுக்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப் படுத்துங்கள்.
- அறிக்கைகள் சமர்ப்பிக்க ஏற்றவாறு குழுக்களைத் தயார்படுத்துங்கள்.

**படி 2.1.3.** :

- ஒவ்வொரு குழுவும் அறிக்கைகளை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குறை நிரப்பு செய்வதற்கு அதே குழுவுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுவினரும் தமது கருத்துக்களை விமர்சனப் பார்வையில் முன்வைக்க இடங் கொடுங்கள்.
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- அறிக்கைககள் சமர்ப்பிக்க ஏற்றவாறு குழுக் களை தயார்படுத்துங்கள்.
- பவுலின் செயல்மையப் பணிக்கு அவரது பின்னணி மிகவும் உதவியது என்பது.
- பவுல் தனது பின்னணி சார்ந்த கருத்துக்களை நன்கு பாவித்தார் என்பது
  உதாரணம்: பரிசேயர் இறந்தோர் உயிர்த் தெழுவர் என நம்பினர். ஆனால் சதுசேயர் இதனை நம்பவில்லை. பரிசேயர் சதுசேயர் கூடியிருந்த சந்தர்ப்பத்ததில் தனது பணியை இலகுவாக்க, பரிசேயர் சதுசேயர் பிரிவினையை ஏற்படுத்தினார் (திருத்தூதர் பணிகள் 23:511)
- தர்சு நகரப் பின்னணி நற்செய்தி அறிவிக்க, பவுலுக்கு உதவியது என்பது (உரோமைக் குடியுரிமை, கிரேக்க மொழிப் புலமையும் அவர்களின் பண்பாட்டிலிருந்த பழக்கமும்)
- பவுலுக்கு, யூதர்கள் மத்தியில் போன்று, பிற இனத்தவர் மத்தியிலும் வாழவும் செயல்மைய பணிகளில் ஈடுபடவும் உரிய வலு நிறைவாக காணப்பட்டது என்பது.
- பவுலைப் போல நாமும் எமது சூழ் நிலையில் இறையாட்சியை பறைசாற்ற எமது பின்னணி யைப் பாவிக்க வேண்டும் என்பது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. பவுலின் பின்னணி குறித்து விளக்குவர்.
2. புனித பவுலின் பின்னணி அவரின் செயல்மைய பணிக்கு உதவியது என விளக்குவர்.
3. புனித பவுலின் பணிக்கு அவரது பின்னணி உதவியது போல இன்று நாம் இறையாட்சிக்காக உழைக்க எமது பின்னணி உதவும் என தீர்மானிப்பர்.
4. புனித பவுல், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தனது பணியை செய்ய பரிசேயர் - சதுசேயர் பிரிவினையை பாவித்தது போல், நாம் இன்று கடவுளுடைய ஆட்சியை பறைசாற்ற செயற்படுவது கிறிஸ்துவின் பார்வையில் சரியானதாக இருக்குமா? எனச் சிந்திப்பர்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- குழு ஒவ்வொன்றும் தமது செயற்பாட்டுப் படிவம் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.
- உங்கள் குழுவினது கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

**தகவல் கோவை**

**இணைப்பு 2.1.1**

பவுல் தாயின் வயிற்றிலிருக்கும் போதே கடவுளால் அழைக்கப்பட்டார். எபிரேய மொழி கிரேக்க மொழி என்பவற்றை நன்கு பேசக் கூடியவர், நீதிச் சட்டத்தை நன்கு அறிந்திருந்தார். யூத இனத்தைச் சேர்ந்த அவர் பரிசேய மரபில் வாழ்ந்தார். இது எருசலேமில் வாழ்ந்த பலருக்கும் தெரியும் உரோமை குடியுரிமையும் பவுலுக்கு இருந்தது. கூடாரம் செய்யும் தொழிலை நன்கு அறிந்திருந்தார்.

பவுலின் இந்தப் பின்னணி அவரது செயல்மைய பணிக்கு மிகவும் உதவியது. அவரது சிந்தனைகள் ஆழமாக்கப்படவும் குறித்த வரையறைகளுக்குள் காணப்படவும் இந்தப் பின்னணியின் தாக்கம் முக்கியமானதாகும்.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 1.3.2**

- குழு1, குழு2 முறையே பவுலின் பின்னணி அவரது பணிக்கு உதவியது. தடையாக அமைந்தது. என விவாதியுங்கள்.
- குழு3, குழு4 முறையே பவுல் ஒரு சந்தர்ப்பவாதி, சந்தர்ப்பவாதியல்ல என விவாதியுங்கள். (திருத்தூதர் பணி 23:5-11)

**தேர்ச்சி 2.0** : புனித பவுலின் வாழ்வு, பணி என்பனவற்றின் அடிப்படையில் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து பணிகளை செய்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : நிறைவாழ்வுக்குரிய மாற்றங்களின் தொடர்ச்சியான நிலைக்குள் செல்வர்.

**செயற்பாடு 2.2** : நிறை வாழ்வுக்குரிய தொடர்ச்சியான மாற்றங் களுக்குள் செல்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 2.2.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 2.2.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா
- பிளாற்றினம் பேனைகள்
- புனித பவுலின் தமஸ்கு அனுபவப்படம்

**கற்றல் கற்ப்பித்தல் செயலொழுங்கு**

**படி 2.2.1** :
- இணைப்பு 2.2.1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் வாசிக்கச் செய்யுங்கள்
- தமஸ்குவிற்கு செல்லும் பாதையின் வரை படத்தை மாணவர்கள் முன்வையுங்கள்.
- பவுலின் மனமாற்ற அனுபவத்தை அடிப்படை யாகக் கொண்டு, மாணவர்கள் கருத்துக்களை பகிர இடமளியுங்கள்.
- பவுலின் வாழ்வில் 'மாற்றம்' என்பது பற்றிக் கூற இடமளியுங்கள்
- கீழ்வரும் சிந்தனைகளை முக்கியத்துவப்படுத்தும். கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

- பவுல் யூத நீதிச் சட்டத்தினை உறுதியாக கடைப்பிடித்து வந்தார் என்பது
- திருத் தொண்டர் ஸ்தேவானின் சாவுக்கு பவுலின் ஒத்துழைப்பு கிடைத்தது என்பது (திருத்தூதர் பணிகள் 7:58)
- பவுல் கிறிஸ்தவர்களை துன்புறுத்தி வந்தார் என்பது (திருத்தூதர் பணிகள் 8:1-3)
- பவுல் மாற்றமடைந்து இயேசுவை இறைமகன் என பறைசாற்றி வந்தார் என்பது (திருத்தூதர் பணிகள் 9)

**படி 2. 2. 2** :

- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.
- செயற்பாட்டுப் படிவத்தின் பிரதிகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் டிமை கடதாசி நிறப்பேனா என்பவற்றை வழங்குங்கள்.
- குழுக்கள் ஒவ்வொன்றையும் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.
- குழுவினரின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப் படுத்துங்கள்.
- அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழுக்களை ஆயத்தப் படுத்துங்கள்.

**படி 2.2.3** :

- பவுலின் மனமாற்றத்தின் தொடர் நிலையை விவிலியப்பகுதியின் அடிப்படையில் வரிசைப்படுத்தி டிமை கடதாசிகளில் எழுதி குழுக்கள் வாரியாக வகுப்பறையில் பகிர்ந்து கொள்ள இடமளியுங்கள்.
- குறை நிரப்பு செயற்பாட்டில் ஈடுபட அக்குழுவை சேர்ந்தவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆரோக்கியமான முறையில் ஆக்கபூர்வமான விமர்சனங்களைப் பகிர்ந்து கொள்ளுவதற்கு ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்.
- கீழ்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வண்ணம் பொதுவான கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - நிறை வாழ்வுக்குரிய தொடர்ச்சியான நன்மைசார் மாற்றங்கள், நிறைவான வாழ்வுக்குரிய அபிவிருத்தியின் தொடர்நிலையாகும் என்பது
> - இவை ஒரு கணப்பொழுதில் மட்டும் நடைபெற்று முடிவடையும் ஒன்றல்ல என்பது
> - கல்லெறிக்குப் பலியான ஸ்தேவானுடைய கருத்து வெளிப்பாடுகள் பவுலில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும் அல்லது மாற்றத்தின் தொடர்நிலையை தொடக்கியிருக்கும் என்பது (திருத்தூதர் பணிகள் 7:58, 59) (இறையருள் நோக்கிய மன்றாட்டு – 'ஆண்டவராகிய இயேசுவே எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும். கல்லெறிந்தோருக்கான மன்னிப்பு மன்றாட்டு "ஆண்டவரே, இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்")
> - பவுல் கிறிஸ்தவர்களை துன்புறுத்திய போதும் கிறிஸ்தவர்களாக பலர் இணைந்து கொண்டே வந்தனர் என்பது.

- பவுலின் தமஸ்கு நோக்கிய பயணத்தில் ஏற்பட்ட மாற்றம், தொடர்நிலை மாற்றத்தின் முக்கியமான ஒரு நிலையாகும் என்பது. (திருத்தூதர் பணிகள் 9, 22: 6-16 , 26:12-18 கலாத்தியர் 1:11-24)
- தமஸ்கு அனுபவத்துக்குப் பிறகும் பவுலின் சிந்தனைகளில் தொடர்ச்சியான மாற்றங்களைக் காணமுடியும் என்பது (உதாரணம் பவுலின் கடிதங்கள்)
- எல்லோருடைய வாழ்விலும் நல்ல மாற்றங்கள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும் என்பது.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. மனமாற்றம் தொடர்ச்சியான ஒன்று என்பதை பவுல், பேதுரு என்போரின் வாழ்வின் அடிப்படையில் விளக்குவர்.
2. நன்மை நோக்கிய அல்லது நிறைவான வாழ்வு நோக்கிய மனமாற்றம் தொடர்ந்து நடைபெற வேண்டும் எனக் குறிப்பிடுவர்.
3. தொடர்ச்சியான மனமாற்றம் ஏற்பட திறந்த மனதுடன் வாழ வேண்டும் என தீர்மானம் எடுப்பர்.
4. கடவுளின் ஆட்சி நோக்கிய மனமாற்றம் எப்பொழுதும் நல்ல மனித விழுமியங்கள் சார்ந்ததாக அமையும் என்பதை விளக்குவர்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டுப் படிவத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்களை கவனமாக குறித்துக் கொள்ளுங்கள்.
- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களை குறித்துக் கொள்ளுங்கள்.
- வகுப்பறையில் அவற்றைச் சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 2.1.1**

மனிதர்கள் ஒவ்வொரு கணப்பொழுதிலும் மாற்றங்களுக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றனர். இதனால் மனிதர்களில் நல்ல மாற்றங்களும் தீய மாற்றங்களும் ஏற்படுகின்றன. ஆரோக்கியமான மாற்றங்கள் நிறைவான வாழ்வு நோக்கி மனிதர்களை இட்டுச் செல்கின்றன. ஆரோக்கியமற்ற மாற்றங்கள் குறைவான அல்லது மனுக்குலத்திற்குப் பொருத்தமற்ற வாழ்வு நோக்கி இட்டுச் செல்கின்றன.

பவுல் யூத நீதிச் சட்டத்தில் ஆர்வம் மிக்க ஒருவர். யூத நீதிச்சட்டம் தவிர்ந்த எதனையும் ஏற்றுக் கொள்ளாதவர். ஸ்தேவானுடைய சாவு பவுலின் மனதில் நிச்சயம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் (திருத்தூதர் பணிகள் 7:58). பவுல் கிறிஸ்தவர்கள் பலரை துன்புறுத்தினார் எனினும் கிறிஸ்தவர்களோடு பலர் நாளுக்கு நாள் இணைந்து கொண்டனர். (திருத்தூதர் பணிகள் 8:4-40) இதுவும் பவுலுக்கு மனதில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும்.

கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதில் ஈடுபட்டிருந்த பவுல் தமஸ்குவுக்குச் செல்லும் போது மனமாற்றத்தின் முக்கிய அனுபவம் ஒன்றைப் பெற்றார் (திருத்தூதர் பணிகள் 9). அதன் பின்னரும் பவுல், மனமாற்ற தொடர்நிலை அனுபவங்களைப் பெற்றார், இதனால் பவுலின் சிந்தனைகள் தொடர்ந்து வளர்ச்சியடைந்து கொண்டு சென்றன என்பதை பவுலின் கடிதங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன.

இன்றும் பலர் நல்ல மாற்றங்களை தொடர்ந்தும் பெற்று நிறைவாழ்வு நோக்கி பயணிக்கின்றனர். நல்ல மாற்றங்கள் நிச்சயம் ஆரோக்கியமான மனித சமூகத்தை உருவாக்கும். கடவுளுடைய ஆட்சியை நாம் அனுபவிக்க நல்ல மாற்றங்கள் உதவும்.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 2.2.2**

1. *நிறைவாழ்வுக்குரிய மாற்றங்களைப் பெற்றவர்களின் பெயர்களை விவிலியத்திலிருந்து குறிப்பிடுங்கள்.*
2. மனமாற்றம் ஒரு கணப்பொழுதில் மட்டும் நடை பெறும் மந்திர நிகழ்வல்ல. மாறாக ஒரு தொடர்ச்சியான ஆரோக்கியமான நிகழ்வு என விளக்குங்கள்.
3. மாற்றம் பெற்றவர்களின் வாழ்க்கைமுறை முன்பு இருந்ததை விட வேறுபட்டு இருக்கும் என்பதை விவிலிய உதாரணங்களுடன் விளக்குங்கள்.
   (உதாரணம் : சக்கேயு)
4. வாழ்வில் ஏற்படும் தீமை சார்ந்த மாற்றங்கள் மனுக்குலத்தையே அழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதை விளக்குங்கள்.

**தேர்ச்சி 2.0** : புனித பவுலின் வாழ்வு, பணி என்பவற்றின் அடிப்படையில் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து பணிகளைச் செய்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.3** : பயன்மிக்க திருப்பணியில் ஈடுபடக் கூட்டு தலைமைத்துவத்தைப் பின்பற்றுதல்.

**செயற்பாடு 2.3** : கூட்டுத் தலைமைத்துவத்தை முன்னெடுத்து பயன் மிக்கத் திருப்பணியில் ஈடுபடுவோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 2.3.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 2.3.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசிகள்
- டிமை கடதாசிகள்
- பிளாற்றினம் பேனைகள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 2.3.1** :

- இணைப்பு 2.3.1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் வாசிக்க இடமளியுங்கள்.
- கூட்டுத் தலைமைத்துவத்துடனிருந்த திருத் தொண்டர்கள் பயன்களை பகிரும்படிகூறுங்கள்.
- பயன்மிக்கத் திருப்பணி மூலம் எதிர்பார்க்கப் படுவது என்ன என்று மாணவர்கள் பகிர்ந்து கொள்ள இடமளியுங்கள்.
- கூட்டுத் தலைமைத்துவத்திடமிருந்து திருத் தொண்டர்கள் பயன்மிக்க திருப்பணி பற்றிய உரையாடலுக்கு பின்வரும் சிந்தனைகளின் ஊடாக வழிநடத்துங்கள்.

> - கூட்டுத் தலைமைத்துவம் பவுலை கிரேக்க மொழி பேசும் யூதர்களிடமிருந்து காப்பாற்றியது என்பது.
>   (திருத்தூதர் பணிகள் 9 : 26 - 31)
> - கூட்டுத் தலைமைத்துவத்துடன் வாழ்ந்த சீடர்கள் பலர் பவுல், பர்னபா என்போரை கூட்டாக பலன்மிக்க பணியில் ஈடுபட மன்றாட்டுடன் அனுப்பிவைத்தனர் என்பது.
>   (திருத்தூதர் பணிகள் 13 : 1 - 3)

- கூட்டு வாழ்க்கைக்காக எருசலேம் சங்கம் மூலம் கூட்டுத் தீர்மானம் எடுத்தனர் என்பது (திருத்தூதர் பணி -15)
- பவுல், பர்னபா, யோவான், மாற்கு என்போரின் கூட்டுப்பணி (முதல் தூதுரைப் பயணம்) கீழ்காட்டப்படும் நல்ல பலன் மிக்க திருப்பணியாக மலர்ந்தது என்பது.

| **இடங்கள்** | | **சம்பவங்கள்** |
|---|---|---|
| சாலமி | - | யூத தொழுகைக்கூடங்களில் கடவுளின் வார்த்தையை அறிவித்தார்கள். |
| பார்போ | - | பாரேசு (எலிமா) எனும் போலி இறைவாக்கினனான யூத மந்திரவாதி, அத்தீவின் ஆட்சியாளர் செர்கியு பவுல் இறைவார்த்தையை கேட்பதைத் தடுக்க முயன்று எலிமா பவுலால் கண்டிக்கப் பட்டு பார்வையற்றவனானார். செர்கியு பவுல் நம்பிக்கை கொண்டார். |
| பிசிதியா அந்தியோக்கியா | - | தொழுகைக்கூடத்தில் பவுலின் உரை (திருத்தூதர் பணிகள் 13 : 15 - 41) அடுத்த ஓய்வுநாளுக்கும் தொழுகைக்கூடம் வந்து பேசும்படி வேண்டப்பட்டனர். யூதர்கள் பொறாமை கொண்டு பவுலையும், பர்னபாவையும் தம் நாட்டை விட்டுத் துரத்தினர். கூட்டுத் தலைமைத்துவப் பணியாளர்கள் பவுலும், பர்னபாவும் உறுதியுடன் சவாலை எதிர்கொண்டனர். |
| இக்கோனியா | - | யூத தொழுகைக்கூடத்தில் பணி. யூதர்களும் கிரேக்கரும் நம்பிக்கை கொண்டனர். நம்பாத யூதர்களிடமிருந்து எதிர்ப்பு வந்தது. துணிவுடன் அதனை எதிர்கொண்டனர். |
| லிஸ்திரா | - | பிறவியிலேயே கால் ஊனமுற்றவர் நடக்கும்படி செய்யப்பட்டார். மக்கள் பவுலையும் பர்னபாவையும் கடவுள்களாக நோக்கினர். பவுலும் பர்னபாவும் அதனை மறுத்து உரையாற்றி நற்செய்தியை பகிர்ந்தனர். இக்கோனியாவிலிருந்தும் அந்தியோக்கியாவிலிருந்தும் யூதர்கள் வந்து மக்களைத் தூண்டி விட்டு பவுல்மேல் கல்லெறிந்தனர். பவுல் துணிவுடன் இதனை எதிர்கொண்டார். |
| சீரியாவிலுள்ள அந்தியோக்கியா | - | நற்செய்தி அறிவித்தார்கள். லீஸ்திரா, இக்கோனியா அந்தியோக்கியா நகரங்களுக்குச் சென்று கிறிஸ்துவ சமூகத்தை உறுதிப்படுத்தினர். |
| பெருகை | - | இறைவார்த்தையை அறிவித்தனர். |
| அந்தியோக்கியா | - | பணியாளர்கள் திருச்சபையாகக்கூடி பலன்மிக்க பணிக்காக, சிறப்பாக பிற இனத்தவர்கள் நம்பிக்கை கொள்ள வாய்ப்பை கடவுள் அளித்தமை பற்றி பகிர்ந்துகொண்டனர். |

**படிமுறை 2.3.2** :

- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.
- செயற்பாட்டுப்படிவத்தின் பிரதிகளையும் பவுல், பர்னபா கூட்டுத்தலைமைத்துவத்தின் பலன்மிக்க முதலாம் தூதுரைப் பயண வரைபடப் பிரதிகளை யும் மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் டிமை கடதாசிகள், பிளாற்றினம் பேனைகள், எழுது கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- குழுக்கள் ஒவ்வொன்றையும் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.
- குழுவினரின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப் படுத்துங்கள்.
- அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழுக்களை ஆயத்தப் படுத்துங்கள்.

  முதலாம் தூதுரைப்பயணத்தில் பவுல், பர்னபா மற்றும் இறைவார்த்தையைக் கேட்டு இணைந்து செயற்பட வந்தவர்கள் (திருத்தூதர் பணிகள் 13:42) என்போரின் கூட்டுத் தலைமைத்துவத்தினால் பயன்மிக்க பணி நடைபெற்றது என்பதை டிமை கடதாசிகளில் விவிலியப்பகுதிகளின் அடிப்படை யில் எழுதி குழுக்கள் வாரியாக வகுப்பறையில் விளக்கமளிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படிமுறை 2.3.3** :

- குறைநிரப்பு செயற்பாட்டில் ஈடுபட அக்குழுவை சேர்ந்தவர்களுக்கு இடமளியுங்கள்.
- ஆக்கபூர்வமான விமர்சனங்களை ஆரோக்கியமான முறையில் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் வழங் குங்கள்.
- கீழ்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வண்ணம் ஆழமான கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - பிரிந்தவர்களாக செயற்படும்போது கிடைக்கும் பயனைவிட கூட்டுப்பணியில் அதிக பயன் கிடைக்கின்றது என்பது.
> - கிறிஸ்தவர்களை துன்புறுத்திய பவுல், கிறிஸ்துவை இறைமகனாக பறைசாற்ற வந்த போது, பர்னபாவின் முயற்சியினால் கூட்டுத் தலைமைத்துவம் ஏற்படுத்தப்பட்டது என்பது.
> - முதலாம் தூதுரைப்பயணம் கூட்டுத்தலைமைத் துவத்தின் மூலம் சிறந்த பயன்மிக்க பணியை செய்யலாம் என்பதற்கு கிடைத்த செயற்பாட்டு உதாரணம் என்பது.
> - எமது சூழ்நிலையில் கூட்டாக வாழ்ந்து செயற் படுவதன் மூலமே இறையாட்சிக்குரிய விழுமியங்கள் அடிப்படையிலான சமுதாயத் தைக் கட்டியெழுப்பலாம் என்பது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. கூட்டுத் தலைமைத்துவம் ஒப்பீட்டளவில் தனியாட்களாக செயற்படுவதைவிட ஆரோக்கியமானது என்பதை சாதாரண வாழ்வின் அனுபவங்களிலிருந்து விளக்குவர்.
2. முதலாம் தூதுரைப்பயணத்தின் மூலம் கிடைத்த பயன்களை கூட்டுத்தலைமைத்துவ திருப்பணியின் வெளிப்பாடு எனக் குறிப்பிடுவர்.
3. எமது நாட்டுச் சூழ்நிலையில் கூட்டுத் தலைமைத்துவத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது இன்றைய வரலாற்றுத் தேவை என தெளிவுபடுத்துவர்.
4. கூட்டுத் தலைமைத்துவத்துக்காக செயற்படுவேன் என தனியாட்களாகவும், குழுக் களாகவும், வகுப்பாகவும் தீர்மானம் எடுப்பர்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டுப்படிவத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்களை கவனித்துக் கொள்ளுங்கள்.
- கலந்துரையாடல் மூலம் வெளிவந்த கருத்துக்களை குறித்துக்கொள்ளுங்கள்.
- வகுப்பறையில் அவற்றை சமர்ப்பிக்க தயாராகுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 2.2.1**

கூட்டுத் தலைமைத்துவம், மனுக்குலத்தின் நல்வாழ்வுக்கு நன்கு உதவியுள்ளது. பவுலின் முதல் தூதுரைப் பயணத்தில் நல்ல ஒரு பயன்மிக்க திருப்பணியை வெளிக்கொணர கூட்டுத் தலைமைத்துவம் நன்கு உதவியது.

யூத தொழுகைக் கூடத்தில் இறைவார்த்தையை பகிர்ந்து கொண்டமை போலி இறைவாக்கினர் பாரேசுவை கண்டித்து தண்டித்தமை, பொறாமை கொண்ட நம்பிக்கை கொள்ளாத யூதர்களிடமிருந்து எதிர்ப்பு வந்தபோது அதனை துணிவுடன் எதிர்கொண்டமை, பணியாற்றும் சாதாரண மனிதர்களே நாம் எனக்கூறும் நல்ல மனப்பான்மையுடன் பவுலும் பர்னபாவும் செயற்பட்டமை, துன்பங்களை துணிவுடன் எதிர்கொண்டமை போன்ற அனைத்து நிகழ்வுகளும் கூட்டுத் தலைமைத்துவத்தால் உருவான கருத்துமிக்க திருப்பணியையே விளக்குகின்றது. எருசலேம் சங்கத் தீர்மானங்களிலும் கூட்டுத் தலைமைத்துவத்தின் தாக்கத்தை நோக்கமுடியும்.

எமது சூழ்நிலையிலும் நாம் கூட்டுத் தலைமைத்துவத்தை தெரிந்துகொண்டால் இறையாட்சிக்குரிய பணியில் நன்கு ஈடுபடலாம். சவால்களையும் கருத்தோடு உறுதியாக எதிர்கொள்ளலாம்.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 2.2.2**

1. முதலாம் தூதுரைப் பயணத்தில் கூட்டுத் தலைமைத்துவத்தில் கிடைத்த நன்மைகளை அட்டவணைப்படுத்துங்கள்.
2. கூட்டுத் தலைமைத்துவ அணுகுமுறையே சிறந்தது எனும் தீர்மானத்தை எடுத்து காரணங்களை விளக்குவர்.
3. கூட்டுத் தலைமைத்துவத்துடன் அன்றாட பிரச்சனைகளை இன்றைய சூழ்நிலையில் எதிர்கொள்ளும் இருவரைப் பற்றிய விபரங்களை சேகரித்து, கலந்துரையாடுங்கள்.
4. கூட்டுத் தலைமைத்துவமா, தனியாள் தலைமைத்துவமா இன்று சிறந்தது என திடீர் விவாதத்தை நடத்துங்கள்.

**தேர்ச்சி 2.0** : புனித பவுலின் வாழ்வு, பணி, என்பவற்றின் அடிப்படையில் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து பணிகளைச் செய்வர்

**தேர்ச்சி மட்டம்** : சவால்களை எதிர்கொண்டு பணிகளை உறுதியுடன் செய்வர்

**செயற்பாடு 2.4** : நாம் சவால்களை எதிர்கொண்டு பணிகளை உறுதியுடன் செய்வோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 2.4.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 2.4.2 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- திருவிவிலியம்
- நிறப்பேனா
- டிமை கடதாசிகள்
- பவுலின் இரண்டாம் தூதுரைப்பயண வரை படம்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

**படி 2.4.1**

- இணைப்பு 2.4.1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் விளங்கும் வண்ணம் வாசிக்க இடமளியுங்கள்.
- பவுலின் இரண்டாம் தூதுரைப் பயணம் வரை படத்தை குழுக்களிடம் வழங்கி இடங்களைக் குறிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பொருத்தமான முறையில் பவுல் , சீலா போன்றோர் சவால்களை உறுதியோடு எதிர் கொண்டார்கள் என்பதை பின்வரும் கருத்துக் களோடு இணைத்து கலந்துரையாட வழி நடத் துங்கள்.
- சவால்களை எதிர்கொண்டு திருப்பணி செய் தனர் என்பது.

- பின்வரும் இடங்களில் நடைபெற்ற கூட்டுத் தலைமைத்துவத்திற்கு பிரிவினை மூலம் சவால் ஏற்பட்டது என்பது (திருத்தூதர் பணிகள் 15:36-41)
- யூதர்களின் பொருட்டு தீமோத்தேயுவை விருத்த சேதனம் செய்யச் சொல்லும்படி லிஸ்திராவில் சவாலை எதிர்கொண்டார் என்பது (திருத்தூதர் பணிகள் 16:1-5)
- பித்தினியாவுக்கு செல்ல திட்டமிட்டிருந்த பவுலை, கடவுள் மசிதோனியா சவால்களை எதிர்கொண்டு முன்வைத்தார் என்பது

- பவுல் பிலிப்பியில் திருமுழுக்குப் பெற்ற லிதியா குடும்பத்துடன் தங்கினார் என்பது (திருத்தூதர் பணிகள் 16:11-15)
- பவுலும் சீலாவும் அடிமைப் பெண்ணை சுகமாக்கியதால் சிறைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்பது (திருத்தூதர் பணிகள் 16: 16-25)
- சிறைக்காவலர் புனித பவுல் சீலாவின் நடத்தையின் மூலம் சவாலை எதிர் கொண்டு கடவுளில் நம்பிக்கை கொண்டார் என்பது (திருத்தூதர் பணிகள் 16:26-34)
- புனித பவுல் , உரோமை குடியுரிமையுடைய தன்னை உரிய விசாரணையின்றி சிறை யிலிட்டமை தவறு என சவாலிட்டார். என்பது (திருத்தூதர் பணிகள் 16:24-40)
- உலகமெங்கும் கலகம் உண்டாக்குபவர்கள் எனும் பார்வையில் பவுல் சீலாவின் பணிகள் என்பது (திருத்தூதப் பணிகள் 17:1-9, 10-15)
- பவுல், எதென்சில் எப்பிக்கூரர் , ஸ்தோயிகர், யூதர்கள் போன்றவற்றின் கருத்தியல்களால் முன்வைக்கப்பட்ட, சவாலை எதிர் கொண்டு
- அறியப்படாத கடவுள் எனும் சிந்தனை மூலம் கடவுளை அறிவித்து சவாலிட்டார் என்பது (திருத்தூதர் பணிகள் 17:16-34)
- பவுல், சீலா, தீமோத்தேயு துன்புறுத்தல் களையும் சவால்களையும் எதிர்கொண்டு கடவுளுடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டனர் என்பது
- பவுல் சீலா போல நாம் இன்றைய சூழ்நிலை யில் வாழ எம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது

**படி 2. 4. 2** :
- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.
- செயற்பாட்டுப்படிவப் பிரதிகளையும் பவுலின் இரண்டாம் தூதுரைப் பயண வரைபடப் பிரதி களையும் குழுக்களிடம் பகிர்ந்தளியுங்கள்.

(45 நிமிடம்)

**படி 2.4.3** :
- ஒவ்வொரு குழுவும் அறிக்கையை சமர்ப்பித்து விபரிக்க இடமளியுங்கள்.
- குறை நிரப்புவதற்கு அக்குழுவின் அங்கத்தவர் களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- விமர்சனக் கருத்துக்களை ஆரோக்கியமான முறையில் வழங்க இடமளியுங்கள்.
- கீழ்க் குறிப்பிடப்படும் கருத்துக்களின் அடிப்படையில் கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

> - பவுலும் சீலாவும் பணியில் ஈடுபட்ட பொழுது பல்வேறு சவால்களையும் உறுதியோடு எதிர் கொண்டனர் என்பது
> - பவுல் குறி கூறும் அடிமைப் பெண்ணை சுகமாக்கியது சமயம் சார்ந்த பணி மட்டுமல்ல மாறாக இலாபத்தை பெறுவதற்காக பெண்ணை அடிமையாக வைத்திருந்தவர் களுக்கு சவாலாகவும் செயற்பட்டார் என்பது
> - நீதியான விசாரணையின்றி சிறையிலிருத்துவது தவறு என பவுலின் மொழியில் நாம் இன்று சவால்விட வேண்டும் என்பது
> - எம் சூழ்நிலையில் காணப்படும் ஒழுங்குமுறைகளை எதிர்த்து உலகமெங்கும் கலகம் உண்டாக்குபவர்களாக சுய நலமின்றி சவாலாக வாழ வேண்டும் என்பது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

01. புனித பவுல் சீலா என்போர் இரண்டாம் தூதுரைப் பயணத்தில் எதிர் கொண்ட சவால்களை பட்டியலிடுவர்.
02. மனுக்குலம் இறையாட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் வாழும் போது எதிர் கொள்ளும் சிக்கல்களை அடையாளங் கண்டு விளக்குவர்.
03. சம காலத்தில் இறைபணியில் ஈடுபட்டு சவாலாக வாழ்ந்த இருவரைப் பற்றி விபரங் களை சேகரித்து பகிர்ந்து கொள்வர்.
04. நீங்கள் தீமையை எதிர்த்து, குடும்பம் அல்லது பாடசாலை அல்லது சமூகத்தில் வாழும் போது வரும் சவால்களை எதிர்ப்பேன் என தீர்மானத்தை எடுக்க அடிப்படையாக இருந்த காரணங்களை எழுதுக.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டுக்கான படிவம் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.
- குழுவினரோடு கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.
- குழுவினது கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

**இணைப்பு 2.4.1**

புனித பவுல், சீலா என்போர் பல்வேறுபட்ட சவால்களை இரண்டாவது தூதுரைப் பயணத்தில் எதிர் கொண்டனர். கூட்டு தலைமைத்துவத்தாலும் இறையருளாலும் அவர்கள் சவால்களைத் துணிவுடன் எதிர் கொள்ளக் கூடியதாக இருந்தது.

தீமோத்தேயுவை விருத்தசேதனம் செய்ய வழிநடத்தியமை, பவுலை மசிதோனியாவுக்கு செல்ல கடவுள் வழிநடத்தியமை, லிதியாவின் குடும்பத்துடன் பவுல் தங்கியிருந்தமை, அடிமைப் பெண்ணை சுகமாக்கி சிறையில் துன்புற்றமை, சிறைக்காவலர் கிறிஸ்தவரானதை விசாரணையின்றி சிறையிட்டமை தவறு என பவுல் கண்டித்தமை, பவுலையும் சீலாவையும் சவாலுக்குள்ளாக்கின. (உதாரணம் : தீமோத்தேயுவை விருத்த சேதனம் செய்ய வழிநடத்திய) சில நிகழ்வுகள் பவுலும் சீலாவும் பிறரை சவாலுக்குள்ளாக்குகின்றனர். என்பதற்கு உதாரணங்களாகும். (உதாரணம் : குறி சொல்லும் அடிமைப் பெண்ணை சுகமாக்கியமை). இவையனைத்திலும் பவுலும் சீலாவும் சவால்களை உறுதியுடன் எதிர்கொண்டனர். நாமும் இவர்களைப் போல் சவால்களை உறுதியுடன் எதிர்கொண்டு வாழ வேண்டும்.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 2 .4.2**

பின்வரும் தலைப்புகளின் அடிப்படையில் விவாதத்தை மேற்கொள்ளுங்கள்.

**குழு 1** - தீமோத்தேயுவை விருத்த சேதனம் செய்யும்படி வழிநடத்தியமை பொருத்த மானது

**குழு 2** - தீமோத்தேயுவை விருத்தசேதனம் செய்யும்படி வழிநடத்தியமை பொருத்த மற்றது.

**குழு 3** - யோவான் மாற்குவின் விடயத்தில் பவுலின் தீர்மானம் அங்கீகரிக்கக் கூடியது

**குழு 4** - யோவான் மாற்குவின் விடயத்தில் பவுலின் தீர்மானம் அங்கீகரிக்கமுடியாதது.

**தேர்ச்சி 2.0** : புனித பவுலின் வாழ்வு பணி என்பவற்றின் அடிப்படையில் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து பணிகளைச் செய்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.5** : சரியான நோக்கில் சிறந்த கிறிஸ்தவ பணியில் ஈடுபடுவர்.

**செயற்பாடு 2.5** : சிறப்பான பார்வையின் அடிப்படையில் நல்ல கிறிஸ்தவ பணியில் ஈடுபடுவோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 2.5.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 2.5.2 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- திருவிவிலியம், பவுலின் மூன்றாம் தூதுரைப் பயண வரைபடம்
- நிறப்பேனா
- டிமை கடதாசிகள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

**படி 2.5.1**

- இணைப்பு 2.5.1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் விளங்கும் வண்ணம் வாசிக்க இடமளியுங்கள்.
- பவுலின் மூன்றாம் தூதுரைப் பயணத்தில் எபேசுவின் முக்கியத்துவத்தை பற்றி விளக்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பொருத்தமான நல்ல ஒரு நோக்கில் பவுல் செயற்பாட்டார் என்பதை பின்வரும் கருத்துக் களின் அடிப்படையில் கலந்துரையாடல் மூலம் முன்வைக்க இடமளியுங்கள்.

> - பவுல் திருமுழுக்கு யோவானின் சீடர்களுக்கு இயேசுவின் பெயரால் திருமுழுக்கு அளித்தார் என்பது (திருத்தூதர் பணிகள் 19:1-10)
> - தொழுகைக் கூடத்தில் இறையாட்சி பற்றி பேசினார் என்பது (திருத்தூதர் பணிகள் 19:1-10)
> - திரன்னு மன்றத்தில் நாள்தோறும் சீடர்களோடு விவாதித்தார் என்பது (திருத்தூதர் பணிகள் 19:
> - பவுல் மூலம் கடவுளின் அரும் செயல்கள் நிகழ்ந்தனவே தவிர பவுல் தனது விருப்பத்திற்காக அல்ல என்பது (திருத்தூதர் பணிகள் 19:11-20)

- பவுல் தனது நல்ல திருப்பணிகு எதிராக தெமேத்திரியு என்பவராலும் அவரின் தோழர் களாலும் அர்த்தமி தேவதையின் மாண்பைக் காக்கவும் அர்த்தமி தேவதை யின் பொருட்டு வெள்ளியில் வடிவங்களை செய்து உழைத்த கைவினைஞர்களின் மிகுந்த வருவாயை தொடர்ந்தும் கிடைக் கச் செய்யவும் எபேசுவில் கலகம் ஏற்படுத் தப்பட்டது. எபேசு கலகத்தை எதிர் கொள்ள வேண்டியிருந்தது என்பது (திருத்தூதர் பணிகள் (19:21-40)
- எபேசுவில் பவுலால் மேற் கொள்ளப்பட்ட பணிகள் அவரது காலத்துக்கு பொருத்த மானவை என்பது.

(15 நிமிடங்கள்)

**படி 2.5.2** :

- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.
- செயற்பாட்டுப் படிவப் பிரதிகளை பகிர்ந் தளியுங்கள்.
- டிமை கடதாசி , பவுலின் மூன்றாம் தூதுரைப் பயண வரைபடங்கள் என்பனவற்றை குழுக் களுக்கு வழங்குங்கள்.
- குழுக்களின் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- அறிக்கை சமர்பிக்க ஏற்றவாறு குழுக்களை தயார்படுத்துங்கள்.

(45 நிமிடங்கள்)

**படி 2.5.3** :

- ஒவ்வொரு குழுவும் அறிக்கைகளை சமர்ப்பிக்க இடமளியுங்கள்.
- குறை நிரப்புவதற்காக குழுவின் அங்கத்தவர் களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- விமர்சனக் கருத்துக்களை ஆரோக்கியமான முறையிலும் ஆக்கபூர்வமான வகையிலும் வழங்க ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்.
- கீழ் குறிப்பிடப்படும் கருத்துக்களின் அடிப்படை யில் கலந்துரையாடலில் ஈடுபட வழிகாட்டுங்கள்.

- மூன்றாம் தூதுரைப் பயணத்தில் பவுலின் எபேசு மையப் பணி முக்கியமானது என்பது
- திருமுழுக்கு யோவானுடைய சீடர்களுக்கு பவுல் திருமுழுக்களித்தமையின் போது நடைபெற்ற தூய ஆவியின் செயற்பாடும் பரவசப் பேச்சும் இறைவாக்கு உரைத்தமை யும் (19:6) என்பது
- இறையாட்சியைப் பற்றி தொழுகைக் கூடத்தில் பவுல் பேசியமை முக்கியமானது என்பது
- பவுலின் பணி நம்ப மறுக்கப்பட்டபோது வேறு இடம்சென்று பணியை தொடர்ந்தமை முக்கியமானது என்பது
- கடவுளின் திருப்பெயரால் அருஞ் செயல் களை செய்வது இறையாட்சி மையமானதே யன்றி சில தனிப்பட்டவர்களின் (ஸ்கேவாவின் மக்கள்) செயற்பாடுகள் சார்ந்தல்ல என்பது
- மனித கையால் செய்யப்பட்டவை தெய்வங் களல்ல என்பது
- எபேசுவில் பவுலின் பணி பொருத்தமான நோக்கிலும் குறித்த காலத்திற்கு உகந் தாகவும் காணப்பட்டது என்பது
- இன்றைய சூழ்நிலைக்கு பொருத்தமான சரியான நோக்கின் அடிப்படையில் கிறிஸ்தவ பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது

(60 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. புனித பவுலின் எபேசுப் பணி பொருத்தமான முறையில் நடைபெற்றது என்பதை விவிலியக் குறிப்புகளுடன் விளக்குவர்.
2. புனித பவுலால் எபேசுவில் முன்னெடுக்கப்பட்ட பணி நிகழ்வுகளில் ஏதாவது ஒரு நிகழ்வை எடுத்து இன்றைய சூழ்நிலையில் கிறிஸ்தவ பணியாளர்கள் எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு சிறந்த மாற்று வழியாக விளக்குவர்.
3. கடவுளின் அருஞ்செயல்கள் இறையாட்சிமையமானதேயன்றி தனிப்பட்டவர்களின் விருப்பு மயமானதல்ல என விளக்குவர்.
4. மிகவும் பொருத்தமான வழியில் கிறிஸ்தவ பணியில் ஈடுபட பவுலின் எபேசு திருப் பணியிலிருந்து நாம் கற்க கூடிய குறிப்புக்கள் சிலவற்றை விளக்குவர்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- குழு ஒவ்வொன்றும் தமது செயற்பாட்டுப் படிவம் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும்.
- குழுவினரோடு கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.
- குழுவினரது கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்பிக்க தயாராகுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 2.5.1**

மூன்றாம் தூதுரைப் பயணத்தில் பவுலின் எபேசுமையைப் பணிகள் மிகவும் முக்கிய மானவை. இவை அன்றைய கால சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமானதாகத் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. இறையாட்சிக்கான போதனை, கடவுளின் அருஞ் செயல்களைச் செய்தல், திருமுழுக்கு அளித்து கிறிஸ்தவ அங்கீகாரத்தை வழங்குதல், ஏற்றுக் கொள்ள மறுக்கும் இடங்களை விட்டு விலகி தேவையான இடத்தில் செயற்படுதல், தொடர்ச்சியான (நாள்தோறும்) விவாதங்களில் ஈடுபடுதல் போன்ற பவுலின் பொருத்தமான திருப்பணி முறைகள் நல்ல ஒரு கிறிஸ்தவப் பணியை எபேசுவில் செய்யக்கூடிய நிலையை உருவாக்கியது.

எமது சூழ்நிலைக்கும் எமது காலத்துக்கும் பொருத்தமான முறையில் நாம் செயற்படும் போது கிறிஸ்தவ பணி கருத்துமிக்கதாக அமையும் இறையாட்சி பற்றி மிகவும் பொருத்தமான முறையில் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 2.5.2**

குழு 1, குழு 2, முறையே பவுலின் எபேசு மைய திருப்பணி முறைகள் பொருத்த மானவை, பொருத்தமற்றவை என விவாதியுங்கள். கிறிஸ்தவ நெறியை இகழ்வோரை விட்டு நாம் விலகி செயற்பட வேண்டும். கிறிஸ்தவ நெறியை இகழ்வோரை விட்டு நாம் விலகி செயற்படக்கூடாது என விவாதியுங்கள்.

**தேர்ச்சி 2.0** : புனித பவுலின் வாழ்வு, பணி என்பவற்றின் அடிப்படையில் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து பணிகளைச் செய்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.6** : கைது செய்யப்பட்ட நிலையிலும் கிறிஸ்தவ பணியைத் தொடர்வர்.

**செயற்பாடு 2.6** : எத்தகைய துன்பங்களை எதிர்கொள்ள நேரிடினும் கிறிஸ்துவுக்காக வாழ்வோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 2.6.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 2.6.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம், பவுலின் சிறைவாழ்வை சித்தரிக்கும் படங்கள்
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 2.6.1**

- இணைப்பு 2.6.1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் விளங்கும் வண்ணம் வாசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பவுல் கிறிஸ்தவ பணிக்காக அனைத்துத் துன்பங்களையும் எதிர்கொண்டார் என்பது தொடர்பான மாணவர்களின் கருத்து வெளிப் பாட்டுக்கு இடமளியுங்கள்.
- பவுல் கைது செய்யப்பட்டபோதும் கிறிஸ்தவ பணியை உரிய முறையில் தொடர்ந்தார் என்பது தொடர்பான மாணவர்களின் கருத்துக் கள் பகிரப்பட இடமளியுங்கள்.
- கீழ்வரும் கருத்துக்களை மையமாகக் கொண்ட கலந்துரையாடல் நடைபெற வழிகாட்டுங்கள்.

> - கிறிஸ்துவுக்காக திருப்பணியைச் செய்ய, பவுல் எதனையும் இழக்கத் தயாராக இருந்தார் என்பது.
>   (திருத்தூதர் பணிகள் 21 : 1 - 16)
> - பவுல் எருசலேம் கோவிலில் கைது செய்யப் பட்டார் என்பது. (திருத்தூதர் பணிகள் 21:27 - 37)
> - தலைமைச்சங்கத்தின் முன் பவுல் விசாரிக் கப்பட்டார் என்பது. (திருத்தூதர் பணிகள் 22 : 20 - 23 : 10)

- உரோமை ஆளுநர் பெலிக்சு முன் பவுல் விசாரிக்கப்பட்டார் என்பது (திருத்தூதர் பணிகள் 24 : 1 - 27)
- சீசரின் முன் விசாரணைக்கு செல்ல பவுல் விண்ணப்பித்தார் என்பது. (திருத்தூதர்பணிகள் 25 : 1 - 12)
- அகிரிப்பா, பெர்னிக்கியிடம் பவுல் கொண்டு வரப்பட்டு விசாரிக்கப்பட்டார் என்பது திருத்தூதர் பணிகள் 25 : 13 - 27)
- கிறிஸ்தவ பணிக்காக பவுல், கைதியாக இருந்த போது பல்வேறு துன்பங்களையும் எதிர்கொண்டார் என்பது.
- பவுலைப் போல துன்பங்களை எதிர் கொண்டு கிறிஸ்தவ பணியை நாமும் இன்றைய சூழ்நிலையில் தொடர வேண்டும்.

**படி 2.6.2** :

- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழு ஆய்வுக்கான செயற்பாட்டுப் படிவம், டிமை கடதாசி, நிறப்பேனா பவுலின் கைதி வாழ்வை சித்தரிக்கும் படங்கள் என்பவற்றை வழங் குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டுக்கும், உதவி யும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டையும் உறுதிப் படுத்துங்கள்.

(45 நிமிடங்கள்)

**படி 2.6.3** :

- ஒவ்வொரு குழுவும் வகுப்பறைக்கு முன்னால் வந்து தங்கள் அறிக்கையை வழங்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழுவின் அறிக்கை சமர்ப்பித்து முடிந்ததும், அதே குழுவினர் தமது கருத்துக்களை தெரி வித்து குறைநிரப்பு கருமத்தை செய்ய இடமளி யுங்கள்.
- ஏனைய குழுக்கள் ஆக்கபூர்வமான கருத்துக் களை ஆரோக்கியமான முறையில் பகிர சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை கட்டியெழுப்பும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- தேவையேற்படுமிடத்து சாவையும் எதிர் கொள்ள பவுல் தயாராகவேயிருந்தார் என்பது.

- நீதிச்சட்டத்துக்கும், கோவிலுக்கும், மக்களுக்கும் எதிராக கற்பிப்பதுடன் கிரேக்கரை கோவிலுக்குள் கூட்டிவந்து கோவிலை கறைப்படுத்தியவர் எனும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு பவுல் எருசலேம் கோவிலில் கைது செய்யப்பட்டார் என்பது.
- பிரிவினையை பாவித்து இறையாட்சிக்காக அழைப்பது தவறு என்பது
- தலைமைச் சங்கத்தின் முன் பவுல் விசாரிக்கப்பட்டபோது பரிசேயர் சதுசேயர் பிரிவினையை பாவித்து "இறந்தோர் உயிர்த்தெழுவர்"எனும் தனது சிந்தனையை முன்வைத்து பரிசேயரின் ஆதரவையும் பெற்றார் என்பது.
- விசாரனைகளை பாவித்து பவுல் கிறிஸ்து பற்றி சான்று பகாந்தார் என்பது.
- பவுல் நித்தமும் கிறிஸ்துவுக்கு உண்மையாக நடக்க சான்று பகர தன்னை தயார் படுத்திக் கொண்டாரேயன்றி தான் எதிர் கொள்ளும் துன்பங்களைப் பற்றி அதிக முக்கியத்துவம் செலுத்தவில்லை என்பது.
- இலங்கையராக துன்பங்களுக்கு மத்தியில் நாம் வாழ்ந்தாலும் துன்பத்தைவிட வாழ்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது.
- கிறிஸ்துவின் விருப்பம் நிறைவேற பவுல் செயற்பட்டதுபோல நித்தமும் பணிசெய்ய நாம் தயாராக இருக்கவேண்டும் என்பது
- தேவையேற்படுமிடத்து துன்பங்களை எதிர் கொண்டு வாழும் மறைசாட்சிகளாக செயற்பட கடவுள் அழைக்கிறார் என்பது.

(60 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. "சிறைக்கைதி பவுல்" எனும் தலைப்பில் ஒரு கலந்துரையாடலில் குழுக்கள் வாரியாக மாணவர்கள் ஈடுபடுவர்.
2. வாழும் மறை சாட்சிகளாக செயற்பட தீர்மானித்து அதனை முன்வைப்பார்..
3. இன்றைய இலங்கை சூழ்நிலையில் "கைதியாக்கப்பட்ட அப்பாவிகள்" பற்றி நாம் எப்படிப்பட்ட சிந்தனைகளை கொண்டிருக்கவேண்டும் என விளக்குவர்.
4. கிறிஸ்துவுக்காக எதையும் பவுலைப்போல தாங்கிக் கொள்ளத் தேவையான விழிப்புணர்வையடைய எத்தகைய நடவடிக்கைகளை எடுக்க கடமையுணர்வையும் ஏற்படுத்த வேண்டும் என பட்டியலிடுவர்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டுப் படிவத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் குழுவுக்கு தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுங்கள்.
- இணைப்பு 2.6.2 பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குவர்.
- கலந்துரையாடலில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களை குறித்துக் கொள்ளுங்கள்.
- வகுப்பறையில் அவற்றை முன்வைக்கத் தயாராகுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 2.6.1**

புனித பவுல் அடிகளாரின் வாழ்வும் பணிகளும் உண்மையான சீடத்துவம் சார்ந்தது. கிறிஸ்துவுக்காக வாழ்வதற்காக அவர் எதையும் இழக்கத் தயார்படுத்திக் கொண்டார். கிறிஸ்துவுக்காக கைதியாக வாழவேண்டிய நிலை ஏற்பட்டபோதும் அதனை தாங்கிக்கொண்டார்.

பவுல் தனது நிலையை நினைத்து பெருமைப்படவோ, அல்லது கவலைப்படவோ அதிக காலத்தை செலவழிக்கவில்லை. மாறாக தனது நிலையைப் பாவித்து எவ்வாறு கிறிஸ்துவுக்கு பணி செய்யலாம் என்றே திட்டமிட்டார். இறைபலத்துடன் துணிவாக செயற்பட்டார்.

பல விசாரணைகளை பவுல் எதிர்கொண்டாலும் அவை ஒவ்வொன்றையும் கிறிஸ்து பற்றி தனது சாட்சியத்தை பகிர்ந்து கொள்ள கிடைத்த வாய்ப்பாக பாவித்துக் கொண்டார். சிறைவாழ்வு பவுலுக்கு நெருக்கடி நிலையாக இருந்தாலும், அதனையிட்டு விரக்தியடையாமல் இறைபலத்துடன் சிறைவாழ்வை பாவித்து தனது பணியைத் தொடர்ந்தார்.

## வாழும் மனசாட்சி

ஆழ் மன விசுவாசத்துடன் ஒருவர் வாழ்ந்து கடவுளுக்காகத் துன்புற்று சாவதே மறைசாட்சி எனப்படும். துன்பங்களுக்கும் சாவுக்கும் உன்னத இடம் வழங்கி "கடவுளுக்காகச் சாக வேண்டும்" என பறைசாற்றுவது பொருத்தமானதல்ல. கடவுளின் விருப்பத்தின்படி இறையாட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் வாழ்ந்து, சவால்களைத் துணிவுடன் உறுதியாக எதிர்கொண்டு பற்றுதியுடன் தொடர்ந்து வாழ்வதே வாழும் மறைசாட்சி வாழ்வாகும்.

## தகவல் கோவை

**இணைப்பு 2.6.1**

கிறிஸ்துவுக்குள் தனிப்பட்ட மட்டத்தில் பெறும் அனுபவமானது மிக முக்கியமானது. இது வெறுமனே உணர்ச்சிமட்டும் சாரந்த ஒன்றல்ல. கிறிஸ்த்துவுக்குள் இணைந்த நிலையில் வாழ்பவரின் வாழ்க்கை முறையே அவரின் நிலையான அனுபவத்திற்குச் சான்றாகும். கிறிஸ்து வுக்குள் வாழ்பவர் தீமை செய்வோரை சவாலுக்குள்ளாக்கும் ஆற்றல் கொண்டிருப்பார் (லூக் 10:16). உடல் ரீரியாக மட்டுமல்ல உளரீதியாகவும் தூய்மையாக வாழ்வார் (1கொரி 6:12-20). அவரின் வாழ்க்கை முறை சிறப்பானதாக அமைந்திருக்கும் (11 கொரி 13:1-11, கொலோ 2:6,7). முக்கியமாக உள்ளார்ந்த ரீதியிலும் வெளிப்படையாகவும் வாழும் வாழ்க்கையில் முற்றிலும் வாழும் கிறிஸ்துவாக இருப்பார்.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 2.6.2**

**குழு 1** : புனித பவுல் எச்சந்தர்ப்பத்திலும் கிறிஸ்தவ வாழ்வையும் பணியையும் முன்னெடுத்தவர் எனக் கூறுங்கள்.

**குழு 2** : புனித பவுல் சிறைவாழ்வை கிறிஸ்துவுக்கு பணி செய்யும் வாய்ப்பாக பாவித்தார் என்பதை அவர் எதிர்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் விளக்குங்கள்.

**குழு 3** : இன்று புனித பவுல் எம் சூழ்நிலையில் கிறிஸ்துவுக்காக பணியாற்றினால் எத்தகைய வாழ்வு வாழ்ந்திருப்பார் என்பது பற்றி மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**குழு 4** : சிறைக்கைதி பவுலின் அனுபவங்களை மையமாகக் கொண்டு நீதிக்காக துன்புறும் அப்பாவி சிறைக்கைதிகளுக்கு ஒரு கடிதம் வரையுங்கள்.

**தேர்ச்சி 2.0** : புனித பவுலின் வாழ்வு, பணி என்பவற்றின் அடிப்படையில் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து பணிகளைச் செய்வர்

**தேர்ச்சி மட்டம் 2.7** : பணியின் சவால்களை சந்தர்ப்பத்துக்கு ஏற்ப எதிர்கொள்வர்.

**செயற்பாடு 2.7** : நாம் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப பணியின் சவால்களை எதிர்கொள்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 2.7.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 2.7.2 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- திருவிவிலியம், பவுலின் உரோமைப் பயண வரைபடம்
- நிறப்பேனா
- டிமை கடதாசிகள்
- பிளாற்றினம் பேனைகள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு படிமுறை 2.7.1**

- இணைப்பு 2.7.1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் வாசித்து விளங்கிக்கொள்ள சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பவுல் தான் வாழ்ந்த சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி எல்லா சவால்களையும் எதிர்கொண்டு கிறிஸ்து வுக்காக வாழ்ந்து பணியை செய்தார் என்பது தொடர்பாக மாணவர்களின் கருத்துப் பகிர் வுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கீழ்வரும் கருத்துக்களை மையப்படுத்திய ஒரு கலந்துரையாடலுக்கு வழிகாட்டுங்கள்.

> - சீசரிடம் விசாரணைக்கு செல்லவேண்டும் எனும் பவுலின் விண்ணப்பத்தின்படி பவுல் உரோமைக்கு அனுப்பப்பட்டார் என்பது. திருத்தூதர் பணிகள் 25-9-12
> - யூலியு எனும் நூற்றுவர் தலைவர் பவுலை மனித நேயத்துடன் நடாத்தினார் என்பது. (திருத்தூதர் பணிகள் 27: 1-4)
> - மால்த்தா தீவில் புப்பிலியுவினது தந்தையை நலமாக்கினார். நோயுற்ற பலருக்கு நலம் கொடுத்தார். மால்த்தா தீவினர் கப்பல் பயணத்துக்கு தேவையான பொருள்களை கொடையாக வழங்கினார் என்பது. (திருத்தூதர் பணிகள் 28 : 1 - 10)

- பவுல் உரோமையில் நற்செய்தி அறிவிப்பதில் ஈடுபட்டார் என்பது. (திருத்தூதர் பணிகள் 28 : 17 - 37)
- நாமும் பவுலைப் போன்று கிறிஸ்தவப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்பது

**படிமுறை 2.7.2** :
- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழு ஆய்வுக்கூடாக செயற்பாட்டு படிவம், எழுது கடதாசிகள், டிமை கடதாசிகள், பிளாற்றினம், பவுலின் உரோமைப் பயண வரைபடம் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டுக்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டையும் உறுதிப் படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 2.7.3** :
- ஒவ்வொரு குழுவும் வகுப்பறைக்கு முன்னால் வந்து தங்கள் அறிக்கையை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழுவின் அறிக்கை சமர்ப்பித்து முடிந்ததும், அதே குழுவினர் தமது கருத்துக்களை தெரிவித்து குறை நிரப்பு செயற்பாட்டில் ஈடுபட இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை ஆரோக்கியமான முறையில் பகிர சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை கட்டியெழுப்பும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- உரோமைக்கு கப்பலில் போகும்போது அவரோடு பயணித்தவர்களுடன் நல்லுறவைப் பேணினார் என்பது.
- கப்பல் புயலில் சிக்கியபோது அனைவரும் நம்பிக்கை இழந்து விரக்தியுற்றபோது ஆறுதலும் நம்பிக்கையும் ஊட்டினார் என்பது.
- மால்த்தா தீவில் நிகழ்ந்த சம்பவங்களினூடாக இறையரசு வெளிப்படுத்தப்பட்டது என்பது.
- உரோமைக்கு சென்றதும் கடவுளுக்கு நன்றி செலுத்தினார் என்பது.
  (திருத்தூதர் பணிகள் 28 : 15)
- பவுல் உரோமையில் வீட்டுச் சிறையில் இருந்த வண்ணம் இரண்டு ஆண்டுகள் இறையாட்சி பற்றி சான்றுபகர்ந்தார். (திருத்தூதர் பணிகள் 28 : 23) தம்மிடம் வந்த அனைவரிடமும் நல்லுறவு கொண்டார் என்பது.

- பவுல் உரோமையிலிருந்து திருமுகங்களை எழுதினார் என்பது.
- கி.பி 64 இல் தலை வெட்டப்பட்டு மறை சாட்சியாக இறந்தார் என்பது.
- இன்று நாமும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பிரதிச் செயற்பாடுகளை காட்ட வேண்டும் என்பது.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. "சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி கடவுளுடைய ஆட்சிக்காக செயற்படும் பவுல்" எனும் தலைப்பில் கலந்துரையாடலில் மாணவர்கள் குழுக்களாக ஈடுபடுங்கள்.
2. புயலில் சிக்கி தவித்தவர்களுக்கு அதே நிலையிலிருந்த பவுல் எவ்வாறு ஆறுதலும் நம்பிக்கையும் அளித்தார் என்பதன் அடிப்படையில் எமது சூழ்நிலையில் துன்புறும் மக்களுக்கு நாம் எப்படி ஆறுதலும் நம்பிக்கையும் அளிக்கலாம் என விளக்குவர்.
3. சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப செயற்பட்டாலும் இறையாட்சியின் விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டே செயற்படவேண்டும் எனும் நிலைப்பட்டில் எந்த இழுபறி நிலையும் காணப்படக்கூடாது எனக் குறிப்பிடுவர்.
4. நீர் கற்கும் உமது பாடசாலைச் சூழ்நிலையில் எப்படிப்பட்ட முறையில் கிறிஸ்துவை பின்பற்றி வாழலாம் என்பதை நாடகம் மூலம் விளக்குவர்.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டுப் படிவத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்களை கவனமாக குறித்துக் கொள்ளுங்கள்.
- கலந்துரையாடி பெற்ற கருத்துக்களை குறித்துக் கொள்ளுங்கள்.
- வகுப்பறையில் அவற்றைச் சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

**தகவல் கோவை**

**இணைப்பு 2.7.1**

பவுல் சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றபடி செயற்படும் ஒருவர் என்பதற்கு அவரது செயல்களே சான்றுகள் ஆகும். பயந்தவர்களுக்கு நம்பிக்கையூட்டினார். நோயிலுள்ளோரை சுகமாக்கினார்.சந்தர்ப்பத்தைப் பாவித்து கிறிஸ்துவுக்குச் சான்றாக வாழ்ந்தார்.

நாமும், நாம் வாழும் சூழ்நிலையில் எதைச் செய்வது பொருத்தமாக இருக்கும் என திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும்.

**செயற்பாட்டுப் படிவம்**

**இணைப்பு 2.7.2**

1. சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பவுல் செயற்பட்டார் என்பதை வலியுறுத்தும் விவிலியப்பகுதிகளை அட்டவணைப்படுத்துக.
2. சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பவுல் கருத்துக்களை வித்தியாசமாக வெளியிட்டார் என்பதை உதாரணங்களுடன் விளக்குவர்.
   உ+ம் : உரோமையர் 16 : 1, 2. 1 தீமோத்தேயு 2 : 1, 12
3. சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப எமது கருத்துக்களையும் சிந்தனைகளையும் மாற்றிக்கொள்வது எத்தகைய சாதகமான பாதகமான விளைவுகளை எமக்குத் தரும் எனக் கூறுவர்.
4. சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப எம்மை மாற்றிக் கொள்வதை இயேசு எப்படி நோக்குவார் என கற்பனை செய்வர்.

**தேர்ச்சி 3.0** : கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து அனைவரோடும் நல்லுறவைப் பேணுவர்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : தனிப்பட்ட மட்டத்தில் கிறிஸ்துவுக்குள் வாழ்வர்.

**செயற்பாடு 3.1** : தனிப்பட்ட மட்டத்தில் கிறிஸ்துவுக்குள் வாழ்வோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 3.1.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 3.1.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- விவிலியம்
- எழுது கடதாசி
- நிறப் பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.1.1** :

- கிறிஸ்துவுக்குள் வாழ்தல் என்றால் என்ன என அறிய இணைப்பு 3.1.1. இலுள்ள தகவல் கோவையை நன்கு வாசியுங்கள்
- இணைப்பு 3.1.2 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும்படி ஓரிரு முறை தெளிவாக வாசியுங்கள்.
- மாணவர்களுக்கு தனிப்பட்ட மட்டத்தில் கிறிஸ் துவுக்குள் ஏற்பட்டுள்ள அனுபவத்தை கலந் துரையாடல் மூலம் வெளிப்படுத்த சந்தர்ப்ப மளியுங்கள்.
- கீழ் குறிப்பிடப்பட்ட கருத்துக்களை மையப் படுத்தி ஒரு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- கிறிஸ்துவுக்குள் வாழ்கின்றவர்கள் தனிப் பட்ட ரீதியில் கிறிஸ்துவை உறுதியுடன் பின்பற்றுவர் என்பது.
  (உரோமையர் 8:3, 1 கொரிந்தியர் 11:1)
  நிக்கதேமு (யோவான் 3), சமாரியப் பெண் (யோவான் 4)
- கிறிஸ்துவுக்குள் வாழ்கின்ற பலர் தனிப்பட்ட ரீதியில் கிறிஸ்துவை உறுதியுடன் பின்பற்றியமையைத் தொடக்க கால திருச்சபையில் காணலாம் என்பது
  பர்னபா (திருத்தூதர் பணிகள் 5:36,37)
  தீமோத்தேயு (திருத்தூதர்பணிகள் 16:1-5)
- கிறிஸ்துவுக்குள் தனிப்பட்ட ரீதியில் கிறிஸ்தவ வாழ்வு வாழ்ந்த பலரை நமது வரலாறு உறுதிப்படுத்துகின்றது.
  உதாரணம்:
  – மைக்கல் ரொட்ரிகோ
  – ஈவ்லின் கன்னி
  – மியூரியல் ட்சின்ஸ்
  – சுய நலமின்றி கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து, நாம் கிறிஸ்துவை எமது இன்றைய இலங்கைச் சூழ்நிலையில் பின்பற்ற வேண்டும் என்பது

**படி 3.1.2** :
- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 3.1.1 இலுள்ள செயற்பாட்டுப் படிவத்தை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- நிறப்பேனா, எழுது கடதாசி என்பனவற்றை தேவை யான அளவு வழங்குங்கள்.
- மாணவரின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

**படி 3.1.3** :
- ஒவ்வொரு குழுவும் வகுப்பறைக்கு முன்னால் வந்து தங்களது அறிக்கையை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழுவின் அறிக்கை சமர்ப்பித்து முடிந்ததும் அதே குழுவினர் தமது கருத்துக்களை தெரிவித்து குறைநிரப்பு செயற்பாட்டில் ஈடுபட இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை ஆரோக்கியமான முறையில் பகிர சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - கிறிஸ்துவுக்குள் தனிப்பட்ட மட்டத்தில் வாழ்பவர் ஓநாய்க்கு மத்தியில் வாழும் ஆடு போல வாழ வேண்டும் என்பது (லூக்கா 10:16)
> - கிறிஸ்துவுக்குள் வாழும்போது வாழ்க்கை முறை சிறப்பாக இருக்கும் என்பது (1கொரி 13:1-11, கொலோசி 2:6,7)
> - கிறிஸ்துவுக்குள் தனிப்பட்ட மட்டத்தில் வாழ்பவரது வாழ்வு தூய்மையாக இருக்க வேண்டும் என்பது.
> - கிறிஸ்துவுக்குள் வாழும்போது தனிப்பட்ட அளவில் உள்ளார்ந்த உறுதியுடன், பிறரை நல் விழுமியங்களுடன் வாழச் செய்யவும் முடியும் என்பது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. தனிப்பட்ட மட்டத்தில் கிறிஸ்துவுக்குள் வாழ்தல் எனும் தலைப்பில் கலந்துரையாடலில் மாணவர்கள் குழுக்களாக ஈடுபடுவர்.
2. தனிப்பட்ட ரீதியில் கிறிஸ்துவுக்குள் வாழும் ஒருவர் எப்படி தனிப்பட்ட அனுபவம் மூலம் கிறிஸ்துவை பின்பற்றும் உறுதியை பெற்றுக் கொண்டார் என மற்றவர் களுக்குக் கூறுங்கள்.
3. கிறிஸ்துவுக்குள் பெற்றுக் கொண்ட தனிப்பட்ட அனுபவம், கடவுளுடைய ஆட்சியின் விழுமியங்கள் மனித விழுமியங்கள் என்பனவற்றை உறுதிப்படுத்த கட்டாயம் உதவும் எனக் குறிப்பிடுங்கள்.
4. நீர் வாழும் இன்றைய இலங்கை சூழ்நிலையில் எப்படிப்பட்ட முறையில் தனிப்பட்ட மட்டத்தில் கிறிஸ்துவுக்குள் வாழலாம் எனக் கலந்துரையாடி கருத்துக்களைச் சேகரியுங்கள்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டு படிவத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்களைக் கவனமாகக் குறித்துக் கொள்ளுங்கள்
- நீங்கள் கலந்துரையாடி பெற்றுக் கொண்ட கருத்துக்களை குறித்துக் கொள்ளுங்கள்
- வகுப்பறையில் அவற்றைச் சமர்பிக்கத் தயாராகுங்கள்.
- அண்மைக்காலத்தில் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தவர்களின் - புகைப்படங்கள் சேகரியுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 3.1.1**

கிறிஸ்துவுக்குள் (in Christ ) வாழ்வு என்பது புனித பவுல் முன்வைக்கும் முக்கியமான சிந்தனை. இந்நிலையில் வாழும் போது புதுவாழ்வு ஒன்றை அனுபவிக்க முடியும். உடல் உளத் தூய்மை வாழ்வில் காணப்படும். இந்த நிலையில் எந்த வேறுபாடுகளுக்கும், சமத்துவமின்மைக்கும் இடமில்லை (கலாத் 3:26-28). அன்பின் அடிமைகளாக வாழ வேண்டும் ஒருவரை ஒருவர் அழிக்கக்கூடாது (கலாத்தியர் 5:15). ஒருவர் மற்றவருடைய சுமைகளை தாங்கிக் கொள்ள வேண்டும். (கலாத்தியர் 6:2) கிறிஸ்துவுக்குள் தீமைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட கடவுள் அருள் தருகின்றார் (எபேசியர் 6:10-20). கிறிஸ்துவில் இணைந்து வாழும்போது அமைதியை அனுபவிக்க முடியும் (பிலிப்பியர் 4:67). கிறிஸ்துவில் நிறைவான வாழ்வை நாம் அனுபவிக்க வேண்டும். (கொலோசியர் 2:6-20). இந்த வாழ்வு மனித இயல்பை புதிப்பித்து நற்பண்புகளை கொண்டிருக்கும். (கொலோசியர் 3:1-17). ஒழுக்கம் குடும்ப வாழ்வு ... போன்றவை நன்றாக அமையும் (கொலோ 3:18-25). கிறிஸ்துவுக்குள் வாழும் ஒருவராக பவுல் தீமோத்தேயுவை நோக்கினார் (1 கொரிதியர் 4: 17, 18) என்பது குறிப்பிடத்தக்கது. நாம் கிறிஸ்துவுடன் இணைந்த நிலையில் வாழ்ந்தாலும் இறந்தாலும் கடவுளுக்கு உகந்தவர்களாக வாழ வேண்டும் என்பது (11 கொரிந்தியர 5:9) மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தது.

எனவே கிறிஸ்துவுக்குள் வாழ்தல் என்பதன் கருத்து கிறிஸ்துவின் விருப்பப்படி இறையாட்சி விழுமியங்களின் அடிப்படையில் வாழும் வாழ்க்கை முறையாகும்.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 3.1.2**

1. கிறிஸ்த்துவுக்குள் தனிப்பட்ட மட்டத்தில் வாழ்பவர்கள் எப்படிப்பட்ட பண்புகள் கொண்ட வாழ்க்கை முறையை கொண்டிருக்க வேண்டும் என் விலியப்பகுதிகளின் அடிப்படையில் பட்டியலிடுங்கள்.
2. கிறிஸ்தவ வாழ்வின் சிந்தனை செயற்பாடுகள் என்பன கிறிஸ்துவுடையது போலிருக்கும் என்பதை சிலருடன் கலந்துரையாடிய பின் உதாரணங்களுடன் விளக்குவர்.
3. கிறிஸ்துவுக்குள் வாழ்பவரின் போராட்டம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எப்படி நம்பிக்கை யூட்டும் எனக் கூறுங்கள்.
4. கிறிஸ்துவுக்குள் தனிப்பட்ட ரீதியில் இறையாட்சியின் விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு வாழும் வாழும் போது ஏற்படும் சவால்களை விளக்குங்கள்.

**தேர்ச்சி 3.0** : கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து அனைவரோடும் நல்லுறவைப் பேணுவர்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : கிறிஸ்துவுக்குள் நிலையான குடும்ப வாழ்வை வாழ்வர்.

**செயற்பாடு 3.2** : குடும்பங்களாக கிறிஸ்துவுக்குள் குடும்ப வாழ்வை ஒப்புரவாக்கி வாழ்வோம்.

**நேரம்** : 120 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 3.2.1 இலுள்ள தகவல் கோவையை
- இணைப்பு 3.2.2 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- திருவிவிலியம்.
- எழுது கடதாசிகள் நிறப்பேனா, திருக்குடும்பத்தின் சுவரொட்டி

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 3.2.1**

- இணைப்பு 3.2.1 இலுள்ள தகவல் கோவை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் வாசிக்க சந்தர்ப்பம் அளியுங்கள்.
- திருக்குடும்பத்தின் சுவரொட்டிப் படத்தை மாணவர்கள் பார்த்து அவர்களின் பண்புகளை பகிர்ந்து கொள்ள இடமளியுங்கள்.
- திருக்குடும்பத்தின் பண்பு அடிப்படையிலும் கீழ்க் குறிப்பிடப்படும் கருத்துக்களை மையப் படுத்தியும் ஒரு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்

- கடவுள் அனைத்து குடும்பங்களையும் படைத்து அவரது விருப்பப்படி வாழ பணித்திருக்கின்றார் என்பது
- கடவுளின் விருப்பப்படி பல குடும்பமாக வாழ்ந்தார்கள் என்பதை திருவிலியத்திலிருந்து அறியலாம். என்பது
  உதாரணம். எல்க்கானா- அன்னா குடும்பம் (1 சாமுவேல் 1,2)
- கிறிஸ்துவுக்குள் வாழும் பல குடும்பங்களை நாம் இன்றும் சந்திக்கலாம். என்பது
- கிறிஸ்துவுக்குள் நாம் நற்குடும்பங்களாக வாழும்போது சவால்களுக்கு மத்தியில் வாழ வேண்டிய நிலை ஏற்படும் என்பது

**படி 3.2.2** :
- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழு ஆய்வுக்கான செயற்பாட்டுப்படிவம் எழுது கடதாசி நிறப்பேனா திருக்குடும்பத்தின் சுவரொட்டி என்பனவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டிற்கும் உதவி களையும் ஆலோசனைகளையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டையும் உறுதிப் படுத்துங்கள்.

**படி 3.2.3** :
- குழு ஒவ்வொன்றும் தமது அறிக்கையைச் சமர்ப் பிக்க இடமளியுங்கள்.
- அறிக்கை சமர்ப்பித்தவுடன் குறைநிரப்பு செயற் பாட்டில் ஈடுபட அதே குழுவை சார்ந்தவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான விமர்சனக் கருத்துக்களை முன்வைக்க ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை கட்டியெழுப்பும் வண்ணம் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

| |
|---|
| • இறை சாயலில் படைக்கப்பட்ட மனுக்குலம் நற்குடும்பங்களில் வாழ வேண்டும் என்பது<br>• சம உரிமை மதிப்பளித்தல், ஏற்றுக் கொள்ளல், அன்பு போன்றவை குடும்ப அங்கத்தவர்களில் (தாய், தந்தை , பிள்ளைகள் வயதானவர்கள் ஏனையவர்கள் அனைவரோடும்) பகிரப்பட வேண்டும் என்பது (எபேசியர் 5:25-33)<br>• குடும்பத்திலேயும் குடும்பங்களுக்கிடையேயும் ஏற்படும் நெருக்கடி நிலை கடவுளின் ஆட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும்.<br>• பணத்தின் அடிப்படையில் அல்ல என்பது. பிரிஸ்சில்லா ...அக்கில்லா... போன்ற அடிப்படையில் நாமும் இன்றைய மாதிரிக் குடுபங்களாக வாழ்ந்து இன்றைய சூழ்நிலையில் சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என்பது. |

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

1. "கிறிஸ்துவுக்குள் நல்ல குடும்பங்களாக வாழ்தல்" எனும் கருத்தியல் பற்றிக் கூறுங்கள்.
2. கிறிஸ்துவுக்குள் நற்பண்புகளுடன் வாழும்போது குடும்பத்துக்கு உள்ளேயும் குடும்பங் களுக்கு இடையேயும் பல்வேறு சிக்கல்கள், பிரச்சினைகள் என்பனவற்றை எதிர் கொள்ள வேண்டியுள்ளது என ஏற்றுக் கொள்ளுங்கள்.

3. கிறிஸ்துவுக்குள் வாழும் குடும்பங்கள் பற்றிய தேடல் ஒன்றில் ஈடுபட்டு நற்குடும்பங்களின் செயற்பாடுகளை சூழ்நிலைக்குப் பொருத்தமா என்பதை விளக்குங்கள்.
4. கிறிஸ்துவுக்குள் வாழும் மாதிரி குடும்பத்தைப் பற்றி உமது சூழ்நிலையில் பொருத்த மானவர்களிடம் கலந்துரையாடி கருத்துக்களைச் சேகரியுங்கள்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டுப் படிவத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.
- குழுவினரோடு கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.
- குழுவினரது கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்பிக்கத் தயாராகுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 3.2.1**

மனுக்குலத்தின் இருப்பு குடும்பவாழ்வில் தங்கியுள்ளது. குடும்பங்கள் சமுதாயத்தின் அடிப்படையாக அலகாக செயற்படுகின்றன. முக்கியமாக கிறிஸ்துவுக்குள் வாழும் குடும்பங்கள் நல்ல ஒரு புதிய உலகத்தை உருவாக்க வேண்டிய பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

கடவுள் ஆணையும் பெண்ணையும் சமத்துவமாகத் தனது உருவிலும் சாயலிலும் படைத்து உலகைப் பொறுப்புடன் பண்படுத்தவும் பாதுகாக்கவும் வழிநடத்தினார் (தொடக்கநூல் 1:26, 27). குடும்ப உறவு மிகவும் முக்கியமானது.

ஆண் பெண் சேர்க்கை, கூட்டுறவு, இல்லறம் அனைத்தும் கடவுளின் திட்டத்திற்குட் பட்டவை (தொடக்கநூல் 2:23-25). கணவன் மனைவியின் அன்பு குழந்தை நோக்கப்பட வேண்டும். குழந்தைகளை இன்றைய இயேசுக்களாக வளர்ப்பதும் திருக் குடும்பங்களாக வாழ்வதுமே குடும்பங்களின் நோக்கமாக அமைய வேண்டும். (உரோமை 12:10; (லூக்கா1,2).

கிறிஸ்துவுக்குள் வாழும் குடும்பங்களிலுள்ள அங்கத்தவர்களிடையே நெருக்கடிகள் ஏற்படும் போது கடவுளின் ஆட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் அவற்றைத் தீர்க்க வேண்டும். குடும்ப அங்கத்தவர்கள் ஒருவரையொருவர் மதிக்கவேண்டும். வன்முறையைப் பாவிப்பது, மனித ஆளுமையை உதாசீனம் செய்வது, மனித உரிமைகளை மீறுவது போன்றவை தவிர்க்கப்பட வேண்டும். குடும்ப வளர்ச்சிக்காக எனும் பெயரில் போதை பொருட்கள் இலஞ்சம், சீதனம், சாதியம், ஆணாதிக்கம் போன்றவற்றை அனுமதிக்க முடியாது.

தனிமையிலும், விரக்தியிலும், வாழும் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் குடும்பங்களை மனித மாண்புகளோடு வாழச் செய்ய நாம் முன்வர வேண்டும். கிறிஸ்துவுக்குள் இணைந்த நிலையில் வாழும் போது அனைத்துப் பிரச்சினைகளையும் நெருக்கடி நிலைகளையும் உறுதியோடு எதிர்கொள்ளலாம். கிறிஸ்துவுக்குள் வாழும் குடும்பமாக, மாதிரிக் குடும்பமாக ஒவ்வொரு குடும்பமும் வாழ வேண்டும் என்பதே இன்றைய தேவை. (கொலோசியர் 3:18) (எபேசியர் 5:22)

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 3.2.2**

1. வாழ்க்கை முறையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்துவுக்குள் வாழும் குடும்பங்களில், கிறிஸ்துவுக்குள் வாழாத குடும்பங்களில் (கிறிஸ்தவ குடும்பங்கள்) உள்ள வேற்றுமைகளை அட்டவணைப்படுத்துவர்.
2. கிறிஸ்துவுக்குள் வாழும் குடும்பங்கள் எதிர் கொண்ட சிக்கல்களை திருவிவிலியத்தி லிருந்து கூறுவர். (உதாரணம் : லீதியாள் குடும்பம் திபா 16:15)
3. ஒவ்வொரு குடும்பங்களுக்கும் திருக்குடும்பத்தினை (எண்ணம், நோக்கு, வாழ்க்கை முறை) பின்பற்றி எமது நாட்டுச் சூழ்நிலையில் வாழ வேண்டும் எனக் கூறுவர்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 3.0** | : | கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து அனைவரோடும் நல்லுறவைப் பேணுவர் |
| **தேர்ச்சி மட்டம் 3.3** | : | சமூக மட்டத்தில் கிறிஸ்துவுக்குள் வாழ்வர். |
| **செயற்பாடு 3.3** | : | 'சமூகமாக கிறிஸ்துவுக்குள் வாழ்வோம்' |
| **நேரம்** | : | 80 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | : | • இணைப்பு 3.3.1 இலுள்ள தகவல் கோவை<br>• இணைப்பு 3.3.2. இலுள்ள செயற்பாட்டுப்படிவம்<br>• திருவிவிலியம்<br>• எழுது கடதாசிகள்<br>• நிறப்பேனா |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 3.3.1**

- இணைப்பு 3.3.1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் வாசித்து விளங்கிக் கொள்ளும் வகையில் ஓரிரு முறை வாசியுங்கள்.
- கிறிஸ்துவுக்குள் வாழும் சமூகத்தின் பண்புகள் வெளிப்படும்படி அமைதி ஊர்வலத்தை நடத்துங்கள்.
- கீழ்வரும் கருத்துக்களை மையப்படுத்திய ஒரு கலந்துரையாடலுக்கு மாணவர்களை நெறிப்படுத்தி வழிகாட்டுங்கள்.

> - நாம் வாழும் சமூகம் மனித விழுமியங்களை விட்டு விலகி வாழுகின்றது என்பது
>   உதாரணம்: இலஞ்சம், எரிச்சல், சுயநலம்
> - கிறிஸ்துவுக்குள் வாழும் சமூகம் இத்தகைய தீய செயற்பாட்டுகளுடன் ஒத்துவாழ முடியாது என்பது,
> - இத்தகைய தீமையான சமூகத்தை நீதியான சமூகமாக மாற்ற நாம் செயற்பட வேண்டும் என்பது
> - நீதியான சமூகம் பின்வரும் பண்புகளை மையமாகக் கொண்டிருக்கும் என்பது
>   உதாரணம் : அன்பு, நீதி, சமத்துவம் விவேகம்

**படி முறை 3.3.2.** :

- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழுக்களுக்கு செயற்பாட்டுபடிவம், எழுது கடதாசி, நிறப்பேனா என்பனவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டுக்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டையும் உறுதிப் படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி முறை 3.3.3** :

- ஒவ்வொரு குழுவும் வகுப்பறையில் முன்வந்து தங்கள் அறிக்கையை சமர்ப்பிக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் அறிக்கை சமர்ப்பித்து முடிந்ததும் அதேகுழுவினர் தத்தமது கருத்துக் களைத் தெரிவித்து குறை நிரப்பு செயற்பாட்டில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுவின் ஆக்கபூர்வமான கருத்துக்களை விமர்சனப் பார்வையில் பகிர இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களைக் கட்டியெழுப்பும்படி கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - கிறிஸ்வுக்குள் வாழும் சமூகம் எப்போதும் நீதியான சமூகமாக இருக்கும் என்பது (திப 34:35)
> - சமூகப்பணியில் நாம் ஈடுபட வேண்டும் என்பது (மத்தேயு 25: 31-46)
> - நிறைவாழ்வு நோக்கிய விடுதலைப் பயணத்தை விழிப்புணர்வுடன் நடத்தி சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது
> - சமூக மாற்றத் தொடர்நிலை தொடர, காந்தி அம்பேத்கார்..போல நாமும் இன்று சவால் களை எதிர்கொண்டு செயற்பட வேண்டும் என்பது

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. கிறிஸ்துவுக்குள் வாழும் சமூகத்தின் பண்புகளை விளக்குங்கள்.
2. கிறிஸ்துவுக்குள் வாழும் சமூகம் சமூகப்பணியில் ஈடுபட வேண்டும் எனக் குறிப்பிடுங்கள்.
3 சமூகமாற்றத்தின் தொடர்நிலையில் ஈடுபடாத மட்டும் கிறிஸ்துவுக்குள் வாழும் சமூகமாக செயற்பட முடியாது என விளக்குங்கள்.
4 கிறிஸ்துவுக்குள் வாழும் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பட்டியலிட்டு மாற்றங்களை கூறுங்கள்.

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டுப் படிவத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்களை கவனமாகக் குறித்துக் கொள்ளுங்கள்.
- வகுப்பறையில் அவற்றை சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

### தகவல் கோவை

**இணைப்பு 3.1.1**

கிறிஸ்துவுக்குள் சமூகமாக வாழ்வது இன்றைய, சூழ்நிலையில் முக்கியமானது. எனக்கு மட்டும் இரட்சிப்பு கிடைத்துவிட்டது எனக் கூறி தனிமைப்படுத்திக் கொண்ட பரிசேய மனப்பான்மையுடன் வாழாமல் சமூகமாக நாம் வாழ வேண்டும். சமூக வாழ்வில் தனியாட் களாகவும் குடும்பங்களாகவும் கூட எங்கள் பங்கைச் செய்ய வேண்டும்.

மனித பண்புகள், மனித நேயம் என்பவற்றை மதிக்கும் நீதியான சமூகம் நோக்கிய போராட்டமாக, கிறிஸ்துவுக்குள் வாழும் சமூகத்தின் விடுதலைப் பயணம் அமையும். சமூகப் பணியில் ஈடுபடுவது சமூகத்தில் துன்புவோருக்கு உதவியாக சமூகத்தில் துன்புறு வோரில் கிறிஸ்துவை தரிசித்து உதவுவது மிகவும் தேவையான ஒன்றாகும். (மத்தேயு 25:31-46). ஆனால் சமூகப் பணியுடன் மட்டும் எமது செயற்பாடுகள் முற்றுப் பெற்று விடக்கூடாது. சமூக மாற்றம் ஏற்படும் போது மட்டுமே நீதியான சமூகம் முழுமையாக உருவாகும்.

சமூக மாற்றத்துக்கான செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். தொடக்கக் கால திருச்சபையின் வாழ்க்கை முறை சமத்துவ மையமான நீதியான சமூகமாக காணப்பட்டது. (திருத்தூதர் பணிகள் 4:32-35). எனினும் தொடர்ந்தும் உழைக்காமல் செபத்தில் மட்டும் தரித்திருந்து, இயேசுவின் இரண்டாம் வருகையை உடனடியாக எதிர்பார்த்ததால் சமத்துவ சமூகம் தொடரவில்லை. இன்றும் கிறிஸ்தவ சமூகம் ஒரு நிறுவன மயமாக்கப்பட்ட சமூகமாக மாறிவிட்டது. இந்நிலையில் தொடர்ந்தேட்சையான சமூகமாற்றம் ஏற்படுவது அவசரமான தேவையாகும்.

இறையாட்சி பற்றிய விழுமியங்களை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். சமூகத்தின் தற்போதைய நிலையை அனைவரும் புரிந்து கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

விழிப்புணர்வு பெற்ற சமூகம் நீதியான சமூகம் நோக்கிய விடுதலைப்பயணத்தில் ஈடுபட வேண்டும். இதற்கு இறையருள் நிச்சயம் புத்துணர்வும் உறுதியும் தரும்.

### செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 3.2.2**

பின்வரும் தலைப்புகளின் கீழ் குறிப்புகளை குழுக்களாக விவாதத்தில் ஈடுபடுத்துங்கள்.

**குழு 1.2** : சமூக சேவைப்பணி கிறிஸ்துவுக்குள் வாழும் சமூகத்தின் பணியாகும். சமூக மாற்றப்பணி கிறிஸ்துவுக்குள் வாழும் சமூகத்தின் பணியாகும்.

**குழு 3.4** : சமூக மாற்றத்திற்கான விடுதலைப் பயணத்துக்கு விழிப்புணர்வு அனைவருக்கும் தேவை, தேவையில்லை.

**தேர்ச்சி 3.0** : கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து அனைவரோடும் நல்லுறவைப் பேணுவர்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : இறையாட்சியின் விழுமியங்களை கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்வுக்கூடாக பகிர்ந்து கொள்வர்.

**செயற்பாடு 3.4** : இறையாட்சியின் விழுமியங்களை எமது வாழ்வுக் கூடாக பகிர்ந்து கொள்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடு** :

- இணைப்பு 3.4.1. இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 3.4.2 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசிகள், நிறப்பேனா, எழுதப்பட்ட Flash Cards இறையாட்சியின் விழுமியங்கள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு :**

**படி 3. 4. 1**

- இணைப்பு 3.4.1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும்படி ஓரிரு முறை வாசிக்க இடமளியுங்கள்.
- இறையாட்சியின் விழுமியங்கள் என எழுதப்பட்ட Flash card ஐ அவதானிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்
- இறையாட்சியின் விழுமியங்களை பகிர்ந்து கொள்வது தொடர்பான கருத்துக்களை வெளிப் படுத்த மாணவர்களுக்கு இடமளியுங்கள்.
- கீழ்வரும் கருத்துக்களை மையப்படுத்திய ஒரு ஆழமான கலந்துரையாடலுக்கு வழிகாட்டுங்கள்.

> - இறையாட்சியின் விழுமியங்களை பகிர்ந்து கொள்வது கிறிஸ்தவர்களாக வாழும் ஒவ் வொருவரதும் கடமை என்பது
> - விவிலிய மரபில் வாழ்ந்தவர்களும், இயேசுவும் இறையாட்சியின் விழுமியங்களின்படி வாழ்ந்த தலைவர்கள் என்பது,
>   (உதாரணம்: திருமுழுக்கு யோவான், பேதுரு இயேசு)
> - சமகாலத்திலும், இறையாட்சியின் விழுமியங் களை தம் வாழ்வு மூலம் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்த தலைவர்கள் பலர் பகிர்ந்தனர்.
>   பேரருட்பணி லக்ஷ்மன் விக்கிரமசிங்க
>   அருட் கலாநிதி டொனால்ட் கனகரட்னம்
> - இன்று இயேசு எம் நாட்டுக்கு வந்தால் பொருத்தமான முறையில் இறையாட்சியின் விழுமியங்களை பகிர்ந்து கொள்வார் என்பது

(10 நிமிடங்கள்)

படி 3. 4. 2 :

- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்
- குழு ஆய்வுக்கான செயற்பாட்டுப்படிவம் எழுது கடதாசி, நிறப்பேனா, என்பனவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் உதவியையும் ஆலோசனையையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டை உறுதிப் படுத்துங்கள்.

படி 3. 4. 3 :

- ஒவ்வொரு குழுவும் வகுப்றையில் முன் வந்து தங்கள் அறிக்கையை சமர்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழுவின் அறிக்கை சமர்ப்பித்து முடிவடைந்ததும் அதே குழுவினர் தமது கருத்துக்களை தெரிவித்து குறை நிரப்பு செயற்பாட்டில் ஈடுபட இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை ஆரோக்கியமான முறையில் பகிர சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை கட்டியெழுப்பும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- இறையாட்சியின் விழுமியங்களை எமது வாழ்க்கைக்கு ஊடாக மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் (மனுவுருவாதல் மாதிரி - யோவான் 1:1-15) என்பது
- வேறுபட்ட சூழ்நிலைகளில் பொருத்தமான முறையில் இறையாட்சியின் விழுமியங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது
  இயேசு - கிரேக்கர் (யோவான் 12:20-27)
  நூற்றுவர் தலைவர் (மத்தேயு 8:5-13)
  பவுல்- ஏதென்ஸ்- (திருத்தூதர்பணி 17:16-34
  மால்தா - (திருத்தூதப்பணி 28:1-10)
- கிறிஸ்துவுக்குள் இறையாட்சியின் விழுமியங்களை நாம் எமது சூழ்நிலைக்குப் பொருத்தமான முறையில் வலியுறுத்த வேண்டும் என்பது
- நாம் கிறிஸ்துவுக்குள் இறையாட்சியின் விழுமியங்களை, பொருத்தமாகப் பகிரும் தொடர்நிலை இலங்கைக் கிறிஸ்துவில் முழுமையடையும் என்பது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. இறையாட்சியின் விழுமியங்களைப் பகிர்ந்து வாழ்வது எமது கடமை என விளக்குவர்.
2. வேறுபட்ட சூழ்நிலையில் பொருத்தமான முறையில் இறையாட்சியின் விழுமியங்களைப் பகிர்ந்து கொள்ள எடுக்க வேண்டிய முறைகளைப் பற்றி பலருடனும் கலந்துரையாடி பொருத்தமான கருத்துக்களை தொகுப்பர்.
3. இறையாட்சியின் விழுமியங்களின்படி எமது சூழ்நிலையில் சவால்களுக்கு மத்தியில் வாழுவேன் என தீர்மானம் எடுத்து பிறருடன் பகிர்ந்து கொள்வர்.
4. இலங்கைக் கிறிஸ்துவின் பண்புகளை இன்றைய தமது பாடசாலை சூழ்நிலையில் அட்டவணைப்படுத்துவர்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- குழு ஒவ்வொன்றும் தமது செயற்பாட்டுப்படிவம் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.
- உங்கள் குழுவினருடன் கலந்துரையாடி செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.
- உங்கள் குழுவினது கருத்துக்களை அறிக்கையாக்கி அதனை வகுப்பில் சமர்ப்பிக்க தயாராகுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 3.2.1**

இறையாட்சியின் விழுமியங்களான அன்பு, நீதி, இரக்கம், விடுதலை ... போன்றன பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். சூழ்நிலைக்குப் பொருத்தமான முறையில் இவற்றை பகிர வேண்டும். இயேசுவின் சீடர்கள் போன்றோர் தமது வாழ்வுக்கூடாக மனுவுருவாதல் மாதிரியின் ஊடாக இதனை செய்தனர்.

கடவுள் மனுவுரு எடுத்து உலகிற்கு வந்து வாழ்ந்தார். உலகில் காணப்பட்ட தீமைகளை எதிர்த்து நன்மையும் நீதியுமான சமூகத்தை உருவாக்க செயற்பட்டார். இயேசுவின் செயற்பாடுகளும் சாதாரண மனிதர்களுக்கு பொருத்தமானது. எனவே இங்கு இயேசு காட்டிய மாதிரி, மனுவுருவாதல் மாதிரி எனப்படும்.

எமது நாட்டின் சூழ்நிலைக்குப் பொருத்தமான முறையில் இறையாட்சியின் விழுமியங்கள் பகிர்ந்து கொள்ளப்பட நாம் எமது சூழ்நிலையை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். வேறுபட்ட இனங்கள் (தமிழர், சிங்களவர்), வேறுபட்ட மொழிகள் (தமிழ், சிங்களம், ஆங்கிலம்), வேறுபட்ட கலாச்சாரங்கள் ... மத்தியில் வாழும் மக்கள் மத்தியில் இறையாட்சி விழுமியங்கள் பகிரப்படவேண்டும். தொழில்நுட்ப வளர்ச்சியைப் பாவித்து வானொலி, தொலைக்காட்சி.. திரைப்படங்கள், நாடகங்கள், தெருக்கூத்து, நாட்டுக்கூத்து போன்றவற்றின் மூலம் மற்றும் சுவரொட்டிகள் என்பனவற்றைப் பாவித்தும் இறையாட்சியின் விழுமியங்களை பகிர்ந்து கொள்ளலாம்.

இறையாட்சியின் விழுமியங்களை பகிர்ந்து கொள்ளும் தொடர்நிலை செயற்பாடு இலங்கைக் கிறிஸ்துவை முழுமையாக வெளிப்படுத்தும் போதே நிறைவு பெறும்.

இயேசு கிறிஸ்து பலஸ்தீனாவில் வாழ்ந்து வந்தார். அவரது போதனை, செயற்பாடு அனைத்தும் அவர் வாழ்ந்த காலத்திற்கும், பிரதேசத்திற்கும் மிகவும் பொருத்தமாயிருந்தது. இயேசு இன்று எமது இலங்கைச் சமூகத்திற்கு வருகை தந்தால் என்ன கூறுவார்? என நாம்

அறிவோம். இதன் அடிப்படையில் எமக்கு இலங்கைக் கிறிஸ்துவை இனங்காண முடியும். வரலாற்றிலே பலஸ்தீனாவிலே நாம் கண்டதைப் போன்று இலங்கைக் கிறிஸ்துவையும் எமது அன்றாட வாழ்வில் சந்திப்பது மிக முக்கியமாகும். நாம் அனைவரும் இலங்கைக் கிறிஸ்துவை இனங்காணும் போது இறையாட்சி விழுமியங்களைப் பகிர்ந்து கொள்வது பூரணமடையும்.

**இணைப்பு 3.2.1**

கீழ்க்காணும் விடயங்களை கலந்துரையாடிய பின் முன்வைக்கவும்.

1. இறையாட்சி விழுமியங்களைப் பகிர்ந்து கொள்வது பற்றி திருவிவிலிய சிந்தனையில் தேடிப்பாருங்கள்.
2. நாம் எவ்வாறு இறையாட்சி விழுமியங்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமென்பதைக் கலந்துரையாடி பட்டியல்படுத்துங்கள்.
3. இறையாட்சி விழுமியங்களை இன்று எமது நாட்டில் பகிர்ந்து கொள்வது தொடர்பாக ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் பற்றிக் கலந்துரையாடி தீர்மானமெடுத்து மற்றவர்களுக்கு கூறுங்கள்.

   உ+ ம் : நாம் பாடவேண்டிய பாடல்கள். எமது ஆடை, அணிகலன்கள் ஆலயத்தை அழகுபடுத்தும் முறை. நாம் உபயோகிக்க வேண்டியவை, வேண்டப்படாதவை

*தேர்ச்சி 3.0* : *கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து அனைவரோடும* நல்லுறவைப் பேணுவர்

**தேர்ச்சி மட்டம் 3.5** : கிறிஸ்துவுக்குள வறுமையை எதிர் கொள்வர்

**செயற்பாடு 3.5** : வறுமை ஒழிப்பை, கிறிஸ்துவுக்குள் எதிர் கொள்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 3 . 5. 1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 3 . 5 . 2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசிகள் , நிறப்பேனா

**கற்றல் கற்ப்பித்தல் செயலொழுங்கு**

**படி 3. 5 . 1** :
- இணைப்பு 3 .5 .1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் வாசித்து விளங்கிக் கொள்வதற்காக சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வறுமைக்கான காரணங்களை மாணவர்கள் வெளிப்படுத்த இடமளியுங்கள்.
- கீழ்வரும் கருத்துக்களை மையப்படுத்தி ஒரு கலந்துரையாடலுக்கு வழி காட்டுங்கள்.
- வறுமையின் காரணங்களையும், வறுமையின் விளைவுகளையும் பற்றிக் கலந்துரையாட மாணவர்களுக்கு இடமளியுங்கள்.

- எமது நாட்டில் பெரும்பாலான மக்கள் வறுமையில் துன்புறுகின்றனர் என்பது
- வறுமையில் வாடி துன்புறுவோருக்கு உதவி செய்வது மிகவும் முக்கியமானது என்பது
- பல நிறுவனங்களும், தனிப்பட்டவர்களும் வறுமையில் வாடி துன்புறுவோருக்கு உதவி செய்து வருகின்ற போதும் வறுமை குறைவடையவில்லை என்பது.
- நாம் வறுமையில் வாடுவோருக்கு உதவி செய்து அவர்கள் வாழ உதவ வேண்டும் என்பது

**படி 3.5.2** :
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்
- குழு ஆய்வுக்கான செயற்பாட்டுப்படிவம் எழுது கடதாசி நிறப்பேனா என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டுக்கு உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டை உறுதிப் படுத்துங்கள்.

படி 3.5.3 :

- ஒவ்வொரு குழுவும் வகுப்பில் முன்வந்து தமது அறிக்கையை சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழுவின் அறிக்கை சமர்ப்பித்து முடிந்ததும் அதே குழுவினர் குறை நிரப்பு செயற்பாட்டில் ஈடுபட இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் ஆக்க பூர்வமான கருத்துக்களை ஆரோக்கியமான முறையில் பகிர சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தும் வகையில் கலந்ததுரையாடலில் ஈடுபடுங்கள்.

> - கடவுள் அனைவரையும் சமத்துவத்துடன் படைத்தார் என்றும் சிலரின் பகிராமையாலும் சுரண்டி கொள்ளையடிக்கும் செயல்களாலும் பலர் ஏழைகளாகி துன்புறுகின்றனர் என்பது.
> - ஏழைகளுக்கு உதவி செய்வது மட்டும் (உரோமை 15:26, 11 கொரிந்தியர் 8:1-2, கலா 2:10) போதாது மாறாக நீதியான சமத்துவம் மிக்க சமூகம் உருவாக செயற்பட வேண்டும் என்பது
> - வறுமைக்கு பலியாக்கப்பட்ட ஏழைகளே இறையாட்சியின் வாரிசுகள் (மத்தேயு 5:3, லூக்கா 6:20) செல்வந்தர்கள் ஏழைகளின் வாழ்வுக்காக உழைப்பதன் மூலமும், தம்மை ஏழைகளுடன் அடையாளம் காட்டுவதன் மூலமும் மட்டுமே கடவுளுடைய ஆட்சிக்குள் செல்லலாம் என்பது
> - சிலர் இறையாட்சிக்கான பணியில் தாமாகவே வறுமையை (Voluntary poverty) தெரிந்தெடுத்தோராக வாழ்கின்றனர் என்பது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. "உலகவளங்கள் மனித தேவைகளுக்கு, போதுமானது. உலக வளங்கள் மனித பேராசைக்கு போதுமானவையல்ல என்னும் மகாத்மா காந்தியின் கூற்றின் அடிப்படையில் மற்றவர்களுக்கு விளக்குங்கள்."
2. "ஏழைகளுக்கு உதவது நல்லது ஆனால் ஏழைகளுக்கு உதவுவது மட்டும் போதாது" என்பது பற்றி ஏழைகளுடன் கலந்துரையாடி கருத்துக்களைச் சேகரிப்பர்.
3. "ஏழைகள் வாழ கிறிஸ்துவுக்குள் வாழும் சமூகம் மேற் கொள்ளவேண்டிய ஒரே பணி நிறைவாழ்வு மைய விடுதலைப் பயணம்" என்பதை உரியவர்களுடன் கலந்துரையாடிய பின் கருத்துத் தெளிவுடன் முன்வைப்பர்.
4. "செல்வந்தர்கள் மட்டும் கற்பதற்காகப் பாடசாலைகளை நடத்துவது தவறு" எனும் கூற்றுத் தொடர்பாக கலந்துரையாடுவார்.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டுப்படிவத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்களைக் கவனமாக குறித்துக் கொள்ளுங்கள். செயற்பாட்டுப்படிவத்தை பெற்றுக் கொளுங்கள்.
- வகுப்பறையில் அவற்றை சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

**தகவல் கோவை**

**இணைப்பு 3.5.1**

வறுமை எனும் அவல நிலை கடவுளால் படைக்கப்பட்ட ஒன்றல்ல. மாறாக வறுமைமையானது சிலரின் பகிராமை சுரண்டல், ஏமாற்று நடவடிக்கைகள் கொள்ளை என்பவற்றினால் பெரும்பான்மை மனுக்குலத்தின் மீது திணிக்கப்பட்ட ஒன்றாகும். அடிப்படை மனித உரிமைகளை பூர்த்தி செய்ய முடியாமல் துன்புறுவோர் அனைவரையும் ஏழைகள் எனக் கூறலாம். போதிய அன்பு பகிரப்படாமல் துன்புறுகின்ற மக்களை ஏழைகளிலும் ஏழைகள் என அழைக்கலாம்.

ஏழைகளுக்கு உதவி செய்வது நல்ல ஒரு சமூக சேவையாகும். எனினும் சமூக மாற்றம் ஏற்பட்டு நீதியான சமத்துவ சமூகம் உருவாகும் போது மட்டுமே ஏழைகள் வாழ்வு பெறலாம்.

செல்வந்தர்கள் மனம் மாறி தம்மிடம் இருப்பதை ஏழைகளுடன் பகிர்ந்து கொண்டு (லூக்கா 12:13-21, 16: 19-31, 18:18-30, 19:1-10) வாழும் போது மட்டுமே கடவுளின் ஆட்சிக்குள் செல்லலாம். ஏழைகளே கடவுளின் ஆட்சியின் வாரிசுகளாவர் (மத்தேயு 5:3 லூக்கா 6:20). எனினும் அவர்கள் இறையாட்சியின் விழுமியங்கின்படி வாழ வேண்டும் (மத்தேயு 22:1-14). செல்வந்தர்கள் ஏழைகளுடன் தம்மை அடையாளம் காட்டுவதன் மூலம் மட்டுமே கடவுளின் ஆட்சிக்குள் செல்லலாம்.

ஏழைகள் எப்போதும் கடவுளில் தங்கி வாழ்கின்றனர். சிறுவர்கள் எப்படிப் பெற்றோரில் தங்கி வாழ்கின்றனரோ, அதே போல ஏழைகள் கடவுளை முழுமையாக நம்பி வாழ்கின்றனர். உணவை எங்களுத்துத் தாரும் (மத்தேயு 6:11) என மன்றாடுகின்றமை ஏழைகளின் ஆன்மீகம் கடவுளால் முழுமையாக சார்ந்திருக்க வேண்டும் எனும் சிந்தனையில் எழுகின்றது.

எளிமையாக வாழுவோரும் வறுமையை தம் வாழ்க்கை முறையாகத் தெரிந்து கொண்டோரும் (Voluntary poverty) சிலர் இருக்கின்றனர். இவர்கள் ஏழைகளின் ஆன்மீகத்துடன், கடவுளில் தங்கி, இறைபணியில் ஈடுபடுகின்றனர்.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 3.5.2**

பின்வரும் தலைப்புகளில், ஒவ்வொரு குழுவும் தம் குழுவை இரண்டாகப் பிரித்து விவாதத்தில் ஈடுபடுங்கள்.

**குழு 1 :** ஏழைகள் துன்புற காரணம் செல்வந்தர்களின் பகிராமையும் ஒடுக்கு முறையுமே. / ஏழைகள் துன்புற காரணம் எழைகளின் சோம்பறித்தனமும், திட்ட மிடாமையுமே.

**குழு 2 :** செல்வந்தர்களுக்கு மட்டும் பாடசாலைகள் நடத்துவது தவறு / சரி

**குழு 3 :** கடவுளில் தங்கி வாழும் ஏழைகளின் ஆன்மீகமே சிறந்தது/ சிறந்ததல்ல

**குழு 4 :** ஏழைகளின் நிலையை மாற்ற நீதியான சமத்துவ சமூகம் நோக்கிய விடுதலைப் பயணமே சிறந்த வழி.
ஏழைகளின் நிலையை மாற்ற நீதியான சமத்துவ சமூகம் நோக்கிய விடுதலைப் பயணம் சிறந்த வழியல்ல.

**தேர்ச்சி 3.0** : கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து அனைவரோடும் நல்லுறவைப் பேணுவர்.

**தேர்ச்சி மட்டம் 3.6** : இயற்கை அழிவுகளை, கிறிஸ்துவுக்குள் எதிர் கொள்வர்.

**செயற்பாடு 3.6** : இயற்கை அழிவுகளை கிறிஸ்துவுக்குள் எதிர் கொள்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 3.6.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 3.6.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசிகள், நிறப்பேனா
- புதினப் பத்திரிகை நறுக்குகள், புகைப்படங்கள்

**கற்றல் கற்ப்பித்தல் செயலொழுங்கு :**

**படி 3.6.1** :
- இணைப்பு 3.6.1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்கள் வாசித்து விளங்கிக் கொள்ள சந்தர்ப்பம் அளியுங்கள்.
- இயற்கை அழிவுகள் முக்கியமாக சுனாமி தொடர்பான புதினப் பத்திரிகை நறுக்குகளை பகிர்ந்து அவதானியுங்கள்.
- இயற்கை அழிவுகள் பற்றி மாணவர்கள் நினைப்பதை பகிர்ந்து கொள்ள இடமளியுங்கள்.
- கீழ்வரும் கருத்துக்களை மையப்படுத்தி ஒரு கலந்துரையாடலுக்கு வழிகாட்டுங்கள்.

> - இயற்கை அழிவுகளால் ஏற்படும் இழப்புக்களை ஈடு செய்வது மிகவும் கடினமானது எனினும் அவற்றை உறுதியுடன் எதிர்கொள்ள வேண்டும்.
> - இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு எம்மை அடையாளம் காட்டுவதும் அவர்களுக்கு உதவிகள் செய்வதும் சிறந்தது.
> - தொடக்க கால திருச்சபை இயற்கை அழிவுகளை எதிர்கொண்டு பாதிக்கப்பட்டோருக்கு உதவினர்.
>   (திருப்பணி 11:27-30)
> - இயற்கை அழிவுகளால் வரும் பாதிப்புக்களை குறைவுறச் செய்ய நாம் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

**படி 3.6.2** :

- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்
- குழு ஆய்வுக்கான செயற்பாட்டு படிவம், எழுது கடதாசிகள், நிறப்பேனா புதினப் பத்திரிகை நறுக்குகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்பாட்டுக்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டையும் உறுதிப் படுத்துங்கள்.

**படி 3.6.3** :

- ஒவ்வொரு குழுவும் வகுப்பறைக்கு முன்னால் வந்து தங்கள் அறிக்கையை சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழுவின் அறிக்கை சமர்ப்பித்து முடிந்ததும் அதே குழுவினர் தமது கருத்துக்களை தெரிவித்து குறைநிரப்புச் செயற்பாட்டில் ஈடுபட இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் ஆக்கபூர்வமான கருத்துக் களை ஆரோக்கியமான முறையில் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்குங்கள்
- பின்வரும் விடயங்களைக் கட்டியெழுப்பும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - கடவுளால் படைக்கப்பட்ட இயற்கையை இயற்கைச் சமநிலையுடன் பண்படுத்தி பாதுகாப்பது மனுக்குலத்தின் பொறுப்பாகும் என்பது
>   ( தொடக்கநூல் 2:15)
> - மனுக்குலத்தின் பொறுப்பற்ற செயல்கள் இயற்கை அழிவுகள் ஏற்பட அல்லது ஏற்படும் இயற்கை அழிவுகளை தீவிரப்படுத்த இடமளிக்கின்றன ... என்பது
> - மனுக்குலத்தின் பொறுப்பற்ற செயல்களாலும் மனுக்குலத்தின் அறிவைக் கடந்த நிலை யிலுள்ள காரணங்களாலும் இயற்கை அழிவுகள் ஏற்பட்டாலும் கடவுள் படைப்பு களை புதுபித்துக் கொண்டு வருகின்றார் என்பது
> - நாம் கடவுளின் படைப்பு. புதுப்பிக்கும் பணிக்கு கைகொடுப்பதும், இயற்கை அழிவு களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய புது வாழ்வு தரும் பணிகளிலும் ஈடுபட வேண்டும் என்பது

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. சுனாமி போன்ற இயற்கை அழிவுகளை ஏற்படுத்தி தீயவர்களை கடவுள் அழிக்கின்றார் எனும் கூற்று தவறானது என கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
2. பாதிக்கப்பட்டவர்களுடன் உறவை ஏற்படுத்தி அதனைப் பகிர்ந்து மற்றவர்களுக்குச் சொல்லுங்கள்
3. இயற்கை அழிவுகளால் ஏற்படும் பாதிப்புக்களை தடுக்க பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்பதை உரியவர்களுடன் கலந்துரையாடி சேகரித்துக் கொள்ளுங்கள்
4. இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்டோருக்கு புது வாழ்வு கொடுக்கும் பணிகளில் ஈடுபடவேண்டும் என தீர்மானித்துக் குறிப்பிடுங்கள்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டுப் படிவத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்களை கவனமாக குறித்துக் கொள்ளுங்கள்.
- கலந்துரையாடி பெற்ற கருத்துக்களை குறித்துக் கொள்ளுங்கள்.
- வகுப்பறையில் அவற்றை சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 3.2.1**

மனித குலம் எதிர் கொள்ளும் அழிவுகளை இயற்கை அழிவுகள் செயற்கை அழிவுகள் என வகைப்படுத்தலாம். இயற்கையாகவே அழிவுகள் இயற்கையாக ஏற்படுகின்றன. செயற்கை அழிவுகள் மனித குலத்தின் பொறுபற்ற செயல்களால் ஏற்படுத்தப்படுகின்றன . தொடக்க கால திருச்சபைகளில் இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்டோருக்காக உதவினர் (திருப்பணி 11:27-30) என்பது குறிப்பிடத்தக்கது. இயற்கை அழிவுகள் ஏற்பட பொறுப்பற்ற மனித செயல்கள் மறைமுகமான காரணங்களாக அமைந்திருக்கலாம் எனும் கருத்து ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மனிதர்கள் அடிப்படை வசதிகளுடன் உரிய பாதுகாப்புடன் வாழ்ந்தால் இயற்கை அழிவுகளால் ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து பாதிக்கப்படுவதை குறைத்துக் கொள்ளலாம். சுனாமி போன்ற இயற்கை அழிவுகள் பற்றிய முன்னறிவிப்புக்களை உரிய நேரத்துக்குள் உரிய இடங்களுக்கு அறிவிக்க வேண்டும் என்பதில் உரியவர்கள் கவனமெடுக்க வேண்டும்.

இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்டோரை மனித மாண்போடு கவனிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். முகாம்களில் பெரும் தொகையான மக்கள் தங்கியிருக்கும் போது ஏற்படும் ஒழுக்கவீனப் பிரச்சினைகள் இடவசதிப் பிரச்சனைகள் மற்றும் மனிதாபிமானப் பிரச்சனைகள் போன்றவற்றை கவனமாகக் கையாள வேண்டும். இழப்புகளால் பாதிக்கப்டோரின் மனநிலையை தமக்கு சாதகமாக பாவித்து சிறுவர், பெண்கள் ஒடுக்கப்படுகின்றமை, மதம் மாற்றுதல், திருமணம், போன்றவற்றில் ஈடுபடக்கூடாது.

இயற்கையான அழிவுளால் பாதிக்கப்பட்டோருக்கு நட்ட ஈடு வழங்குவதும் ஆறுதல் அளிக்கும் உளவள திட்டங்களில் ஈடுபடுவதும் நல்லது. இறை விசுவாசத்தை ஆழமாக்கி கொள்வதும் அவசியமாகும். இயற்கை அழிவு ஏற்படும்போது எப்படி செயற்பட வேண்டும் என்பது பற்றியும் கூறி அவர்களை தயார்படுத்தி தம்மில் தங்கி செயற்பட உதவவேண்டும்.

இயற்கை அழிவுகள் கடவுளால் மனித குலத்தை திருத்த எடுக்கப்படும் நடவடிக்கை என கூறுவது தவறு. ஏனெனில் இயற்கை அழிவுகளால் அப்பாவிக் குழந்தைகளும் இறந்திருக்கின்றனர். இந்த அப்பாவிகளை கடவுள் அழித்தார் என கூறுவது தவறு. அது கடவுளின் பண்புகளுடன் ஒன்றிப் போகும் சிந்தனையல்ல. ஏனெனில் கடவுள் அன்பே உருவானவர்.

**தேர்ச்சி 3.0** : கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து அனைவரோடும் நல்லுறவைப் பேணுவர்

**தேர்ச்சி மட்டம் 3.7** : ஒடுக்கு முறையை கிறிஸ்துவுக்குள் எதிர் கொள்வர்.

**செயற்பாடு 3.7** : ஒடுக்குமுறையை கிறிஸ்துவுக்குள் எதிர் கொள்வோம்

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 3.7.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 3.7.2 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசிகள் , நிறப்பேனா
- சமகாலத்தில் ஒடுக்கு முறையினால் ஏற்படும் துன்பங்களை வெளிப்படுத்தக் கூடிய ஒலி, ஒளி பேழை

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**
**படி 3.7.1** :

- இணைப்பு 3.7.1 இலுள்ள தகவல் வேலையை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும்படி ஓரிரு முறை வாசியுங்கள்.
- ஒடுக்குமுறையினால் ஏற்படும் துன்பங்களை ஒலி - ஒளி பேழையிலுள்ள படத்தை பார்த்த பின்னர் பகிர்ந்து கொள்ள மாணவர்களுக்கு இடமளியுங்கள்.
- கீழ்வரும் கருத்துக்களை மையப்படுத்தி ஒரு கலந்துரையாடலுக்கு வழிகாட்டுங்கள்.

- ஒடுக்குமுறைகளினால் மனுக்குலம் அதிகமான துன்பங்களை எதிர்கொண்டு நடைப்பிணங்களாக வாழுகின்றது என்பது
- கடவுள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்கின்றார் அல்லது செபங்களை கேட்கின்றார் என்பது.
- ஒடுக்கு முறை நிறுத்தப்பட வேண்டும் என்பது
- ஒடுக்குமுறை நிறுத்தப்பட நாமும் உழைக்க வேண்டும்.

**படி 3.7.2** :

- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்.
- குழு ஆய்வுக்கான செயற்பாட்டுப் படிவம் எழுது கடதாசி, நிறப்பேனா ஒடுக்குமுறையினால் ஏற்படுத் தப்பட்ட துன்பங்களை வெளிக்காட்டும் ஒலி ஒளி பேழை உபகரணங்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டுக்கும் உதவியும் ஆலோசனையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டையும் உறுதிப் படுத்துங்கள்.

**படி 3.7.3** :

- ஒவ்வொரு குழுவும் வகுப்பறைக்கு முன்னால் வந்து தங்கள் அறிக்கையை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் அதே குழுவை சேர்ந்தவர்கள் தமது கருத்துக்களை தெரிவித்து குறை நிரப்பு செயற்பாட்டினால் ஈடுபட இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை ஆரோக்கியமான முறையில் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை கட்டியெழுப்பும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - மனுக்குலம் கடவுளின் திட்டப்படி மனித மாண்போடு வாழ வேண்டும் . கடவுளின் திட்டத் திற்கு எதிராக எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளிலும் ஒடுக்குமுறை என கருதப்பட வேண்டும் என்பது
> - கடவுள் ஒடுக்கப்பட்ட மக்களின் துன்பங்களை துடைப்பது மட்டும் போதாது, ஒடுக்கு முறைக்கான காரணங்களை அடையாளம் கண்டு ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராட வேண்டும் என்பது
> - ஒடுக்கப்பட்ட மக்களின் துன்பங்களைத் துடைப்பது மட்டும் போதாது ஒடுக்கு முறைக் கான காரணங்களை அடையாளம் கண்டு ஒடுக்குமுறைக்கு எதிராக அகிம்சை ரீதியில் போராட்டங்கள் விழிப்புணர்வுடன் ஆரம்பிக்க வேண்டும் என்பது
>
>   உதாரணம் : மார்ட்டின் லூத்தர்கிங், மகாத்மா காந்தி
> - எமது சூழ்நிலையில் காணப்படும் ஒடுக்கு முறையை அடையாளம் கண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தி விடுதலைக்காக செயற்பட வேண்டும் என்பது

### கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

1. ஒடுக்கு முறையால் மனுக்குலத்திற்கு ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி குழுக்களாக மாணவர்கள் கலந்துரையாடலில் ஈடுபடுவர்.
2. ஒடுக்கப்பட்ட இஸ்ரேயல் மக்களின் விடுதலைப்பயணத்தை கடவுள் வழிநடத்தி தன்னை ஒடுக்கப்பட்ட மக்களின் கடவுள் என உறுதிப்படுத்தினார் என்பதை விவிலிய உதாரணங்களில் கூறுக.
3. மகாத்மா காந்தி, மார்ட்டிங் லூத்தரில் போல அகிம்சை போராட்டங்கள் மூலம் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களை நாம் முன்னெடுக்கவேண்டும் என்பது பற்றி உரியவர்களுடன் கலந்துரையாடி கருத்துக்களை சேகரித்துக் கொள்ளவும்.
4. துப்பாக்கிக் கலாச்சாரம் மத்தியில் வாழும் நாம் அகிம்சை போராட்டங்களை நடத்து வதில் எதிர்நோக்கும் சவால்களையும் ஆயுதப் போராட்டம் மூலம் ஏற்படும் சவால்களை யும் ஒப்பிட்டு கிறிஸ்துவுக்குள் இறையாட்சி விழுமியங்களின் அடிப்படையில் உமது சிந்தனைகளை முன்வையுங்கள்.

### குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டுப் படிவத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்களை கவனமாக குறித்துக் கொள்ளுங்கள்.
- கலந்துரையாடி பெற்ற கருத்துக்களைக் குறித்துக் கொள்ளுங்கள்
- வகுப்பறையில் அவற்றை சமர்பிக்கத் தயாராகுங்கள்.

### தகவல் கோவை

**இணைப்பு 3.7.1**

கடவுள் மனுக்குலத்தை மனித மாண்போடும் மனித நேயத்தோடும் வாழும்படி படைத்தார். மனிதத்தை மதிக்காமல் எடுக்கப்படும் அணைத்து செயற்பாடுகளும் ஒடுக்குமுறையாகும். இதனுடன் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கைகாக பல்வேறுபட்ட சிக்கல்களுக்கு உள்ளாகின்றன.

ஆதி காலத்தின் ஒடுக்குமுறை வெள்ளையர்களால் கறுப்பர் மீது நிற அடிப்படையில் திணிக்கப்பட்ட ஒடுக்குமுறை, இனவாதம் காரணமாக ஏற்படுத்தப்படும் ஒடுக்கு முறை, மற்றும் மொழி, ஆண் - பெண் , செல்வர்-ஏழை , முதலாளிவர்க்கம் தொழிலாளர் வர்க்கம் கட்சி அரசியல் தனிப்பட்ட விரோதம் வர்க்கம் பிரதேசவாதம் என்பன அடிப்படையில் எமது நாடு உட்பட பல இடங்களிலும் ஒடுக்குமுறை இன்று கட்டவிழ்க்கப்பட்டுள்ளது.

ஒடுக்கு முறை காரணமாக பேச்சு உரிமை, எழுத்து உரிமை, வாழ்க்கைக்கான உரிமை, சுதந்திரமாக நடமாடும் உரிமை .. போன்ற பல உரிமைகள் அதிகாரம் கொண்டோரால் பறிக்கப்படுகின்றன. ஒடுக்கப்பட்ட சூழ்நிலையில் வாழும் மக்கள் மனிதத்தை இழந்து வாழ வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

விடுதலை நோக்கிய போராட்டங்கள் ஒடுக்கப்பட்ட சூழ்நிலையில் எழுகின்றன. கடவுள் எப்போதும் ஒடுக்கப்பட்ட மக்களுடன் அவர்களுக்கு அடையாளப்படுத்தி அவர்கள் விடுதலைக் காக உழைக்கின்றனர். அகிம்சைப் போராட்டங்களை கிறிஸ்துவுக்குள் கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டும். மகாத்மா காந்தி பிரித்தானியா ஆதிக்கவாதிகளுக்கு எதிராக முன்னெடுத்தது போல போராட வேண்டும்.

அகிம்சைப் போராட்டங்களில் ஈடுபட்டு விடுதலைக்காக உழைக்காமல் தப்பிக் கொள்ளும் நோக்குடன் சுய நலவாதிகளாக வாழ்வது கிறிஸ்துவுக்குப் பொருத்தமான வாழ்க்கை முறையல்ல. ஆயுதப் போராட்டங்கள் கிறிஸ்துவுக்குள் பொருத்தமான வாழ்க்கை முறையல்ல.

ஆயுதப் போராட்டங்களை கிறிஸ்துவுக்குள் இறையாட்சியின் விழுமியங்களின் அடிப்படையில் முன்னெடுக்க முடியுமா எனும் கேள்வி நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு வருகின்றது.

நாம் ஒடுக்குமுறைக்கு எதிராக கிறிஸ்துவுக்குள் போராட வேண்டும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 3.5.2**

பின்வரும் தலைப்பின் அடிப்படையில் குழுக்களுக்குள்ளே தொடங்கி பின்பு குழுக்களுக் கிடையேயும் பின்னர் வெற்றி பெறும் குழுக்ககிடையேயும் விவாதம் நடத்துவர்.

1. ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராட்டாங்கள் தேவையா? தேவையில்லையா?

அல்லது

2. ஒடுக்கு முறைக்கு எதிராக ஆயுதப் போராட்டங்கள் அகிம்சை போராட்டமாக மேற் கொள்ளப்பட வேண்டும்.

**தேர்ச்சி 4.0** : பன்மைச் சூழலில் இணைந்து வாழ்வர்.

**தேரச்சி மட்டம் 4.1** : யூத சமுதாயத்திடமிருந்து நல்ல விழுமியங்களைப் பெற்று எமது இன்றைய வாழ்வுக்குப் பயன் படுத்துவர்.

**செயற்பாடு 4.1** : யூத சமூகத்திடமிருந்து நல்ல விழுமியங்களைப் பெற்று எமது இன்றைய வாழ்வுக்குப் பயன் படுத்துவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 4.1.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 4.1.2. இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா
- அறிக்கைத் தாள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு படிமுறை 4.1.1** :
- இணைப்பு 4.1.1 இலுள்ள தகவல் கோவையை வாசித்து விளங்கிக் கொள்ள இடமளியுங்கள்.
- யூத சமூகத்தின் நல்ல விழுமியங்களை திருவிவியத்தைப் பாவித்து அறிக்கைத் தாளில் முன்வைக்கும்படிக் கூறுங்கள்
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந் துரையாடுங்கள்.

- எல்லாச் சமூங்களையும் போல யூத சமூகத்திலும் ஆரோக்கியமான விழுமியங் களும் ஆரோக்கியமற்ற விழுமியங்களும் காணப்பட்டன என்பது
- ஆரோக்கியமான யூத சமூக விழுமியங் களுக்கு உதாரணங்கள் என்பது
  ஆழமான இறைபற்று
  விருந்தோம்பல் (தொடக்க நூல் 18)
  நிலம் விற்கப்படுவதில்லை வழிமரபினரிடம் பகிரப்படும். (1 அரசர் 21)
  யூபிலி ஆண்டு (லேவியர் 25:39-55)
  பின்வருவன ஆரோக்கியமற்ற யூத சமுக விழுமியங்களுக்கு உதாரணம் என்பது
  யூத இனவாதம் (திருப்பாடல்கள் 137)
  யூத மன்றாட்டு விளக்கும் ஆணாதிக்கமும் இனத்தவராகவும்
  "கடவுளே என்னை ஒரு பெண்ணாகவும் ஒரு புற இனவாதமும் படைக்காமைக்கு உமக்கு நன்றி"
- ஆரோக்கியமான யூத சமூக விழுமியங் களை நாம் பாவிக்க வேண்டும் என்பது

**படிமுறை 4.1.2** :
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்
- இணைப்பு 4.1.2 இலுள்ள செயற்பாட்டுப் படிவத்தை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்
- நிறப்பேனா, எழுது கடதாசி என்பனவற்றைத் தேவையான அளவு வழங்குங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து அதை உறுதி செய்யுங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 4.2.3** :
- தாம் கலந்துரையாடி பெற்ற தகவல்களைச் சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குறை நிரப்புச் செயற்பாட்டில் ஈடுபட அதே குழுவுக்கு இடமளியுங்கள்.
- மற்றக் குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக் களை வெளிக்கொண்டு வாருங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக் கொண்டு வரும் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - யூத சமுகத்தில் நல்ல விழுமியங்கள் இனம் காணப்பட வேண்டும் என்பது.
> - யூத சமூகம் பன்மைத் தன்மை மிக்கதக்க தாக காணப்பட்டது என்பதை உறுதிப்படுத் தலாம் என்பது.
> - உலகிற்கு நற்பேறு வழங்க வேண்டிய இஸ்ரயேலரை கடவுள் தெரிந்து கொண்டார். (தொடக்க நூல் 12:3, இணைச்சட்டம் 7:6,7)
> - நல்ல விழுமியங்களை உலகெங்கும் பரப்பத் தவறிய போது இறைவாக்கினர் களால் கண்டிக்கப்பட்டனர்.
>   ஆமோஸ் 3,7 : 9:7 எசாயா 19:13 -25
> - பாரசீக அரசன் சைரசு, கடவுளின் அருள் பொழிவு பெற்றவராக கருதப்பட்டார். (எசாயா 44:28, 45:1-4)
> - பாபிலோனிய பொது வாழ்வில் கலந்து வாழும் படி அழைக்கப்பட்டனர் என்பது கடவுளால் முக்கியத்துவப்படுத்தப்பட்டது.
>   (ஏரேமியா 29:5-7)
> - யூத இனவெறி கொண்டோரின் மனமாற்றம் கடவுளால் முக்கியப்படுத்தப்பட்டது. (யோனா, ரூத்)
> - இயேசு யூத சமுக விழுமியங்களைப் பாவித்து சீர்திருத்தியது போல (ஓய்வு நாளில் ஓய்வாக இருப்பதைவிட மனித நேயப்பணி செய்வதே பொருத்தமானது.) நாமும் எமது சூழ்நிலையில் செயற்பட வேண்டும் என்பது

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- யூத சமூகத்தில் ஆரோக்கியமான விழுமியங்களுக்கும் ஆரோக்கியமற்ற விழுமியங்களுக்கும். இடையேயுள்ள இழுபறி நிலையை வகைப்படுத்திக் கூறுவர்.
- யூத சமூக விழுமியங்களாக விளக்கி திருப்தி காண்பர் மற்றவர்களுக்கு விளக்குவர்.
- யூத சமய விழுமியங்களை எமது நாளாந்த வாழ்வுக்குரிய படிப்பினைகள் என ஏற்று மற்றவர்களுக்கு விளக்குவர்.
- விழுமியங்கள் பொது நன்மைக்காக பாவிக்கப்படும் போது மட்டுமே ஆரோக்கியமான விழுமியங்களாகும் என உறுதிப்படுத்தி வெளிப்படுத்துவர்.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- குழுச் செயற்பாட்டுப் படிவத்தைப் பெற்று அதில் கவனம் செலுத்துங்கள்.
- அறிக்கையை குழுவின் கருத்துக்களின் அடிப்படையில் தயார் செய்யுங்கள்.
- அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

**தகவல் கோவை**

**இணைப்பு 4.1.1**

யூத சமூகத்தின் விழுமியங்களை ஆரோக்கியமான விழுமியங்கள் (உதாரணம்: இறைபற்று விருந்தோம்பல், மனித நேயத்துடன் மற்றவர்களை நோக்குதல் , வட்டிவாங்காமை, ஏழைகளை கவனித்துக் கொள்ளுதல் ...) ஆரோக்கியமற்ற விழுமியங்கள் (உதாரணம: யூத இனவெறி, ஆணாதிக்கம் ...) என வகைப்படுத்தலாம். ஆரோக்கியமான விழுமியங்களை உறுதிப்படுத்த இறைவாக்கினர்கள் பெரும் பங்கு ஆற்றியுள்ளனர். (ஆமோஸ் 9:7 எரேமியா 29:5-7). யூத இனவாதிகளின் மனமாற்றம் மூலம் (யோனா) பன்மைத்துவம் உறுதிப்படுத்தப்படுகின்றது. அனைவரோடும் இணைந்த நிலையில் வாழ்வதே இயற்கையாக கருத்துமிக்க வாழ்வு என்பது தெளிவுபடுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்படுகிறது. (ருத்)

**செயற்பாட்டுப் படிவம்**

**இணைப்பு 3.5.2**

**குழு 1 :** யூத சமுகத்தில் காணப்படும் நல்ல விழுமியங்களை வகைப்படுத்தி விளக்குங்கள்.

**குழு 2 :** விவலியத்தில் கூறப்பட்டவாறு பின்வரும் இறைவாக்கினர் இன்று இல்லா திருந்தால் சிந்தனைகளை முன்வையுங்கள்
ஆமோஸ்
எரேமியா
ஏசாயா

**குழு 3 :** பன்மைச் சூழலில் ஆரோக்கியமான விழுமியங்கள் என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்திப் பின்பற்றுவோம் என உறுதிப்படுத்துங்கள்.

**குழு 4 :** யூத சமூக விழுமியங்களை இனவாதம் கடந்து வாழ இலங்கைக்குரிய விழுமியங்களாக விளக்குங்கள்.

**தேர்ச்சி 4.0** : பன்மைச் சூழலில் இணைந்து வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : தொடக்ககால திருச்சபை சமூகத்திடமிருந்து நல்ல விழுமியங்களைப் பெற்று இன்றைய வாழ்வுக்காகப் பயன்படுத்துங்கள்.

**செயற்பாடு 4.2** : தொடக்க கால திருச்சபை சமூகத்திடமிருந்து நல்ல விழுமியங்களைப் பெற்று எமது இன்றைய வாழ்வில் பயன்படுத்துவோம்.

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 4.2.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 4.2.2. இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு படி 4.2.1** :

- இணைப்பு 4.2.1 இலுள்ள தகவல் கோவையை வாசித்து விளங்கிக் கொள்ள இடமளியுங்கள்.
- தொடக்கால திருச்சபை சமூகத்தின் ஆரோக் கியமான விழுமியங்களை விவிலியத்தைப் பாவித்து முன்வைக்கும்படி கூறுங்கள்
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந் துரையாடுங்கள்.

> - தொடக்ககால திருச்சபைகளிடமிருந்து நல்ல விழும்மியங்கள் காணப்பட்டன என்பது
>   உதாரணம் யோவா 20:17 இயேசுவை குறித்த சான்று தி.தூ பணி 2:42
>   தி.தூ பணி 4:32
> - கிறிஸ்தவம் மட்டுமே பொருத்தமானது என்பதால் மற்றவைகள் நிராகரிக்க வேண்டும் எனும் கருத்து தொடக்ககால திருச்சபைகளிடமிருந்து காணப்பட்டது என்பது
>   (திருத்தூதர்பணி 4:12)
> - பேதுரு, பவுல் போன்றோர் ஏனைய மக்களை ஏற்றுக் கொண்டனர் என்பது
>   (திருத்தூதர்பணிகள் 10:34,35, 14:12-17 17:22-30)
> - தொடக்ககால திருச்சபை சமூகத்தின் சமத்துவமான வாழ்கை முறையை நாம் பொருத்தமான முறையில் பின்பற்ற வேண்டும் என்பது
>   (திருத்தூதர் பணிகள் 2:42-47)

**படி 4.2.2** :
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- இணைப்பு 4.2.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவத்தை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- நிறப்பேனா எழுது கடதாசி என்பனவற்றைத் தேவையான அளவு வழங்குங்கள்.
- நிறப்பேனா எழுது கடதாசி என்பனவற்றைத் தேவையான அளவு வழங்குங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து அதை உறுதி செய்யுங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 4.2.3** :
- தாம் கலந்துரையாடி பெற்ற தகவல்களைச் சமர்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குறை நிரப்புச் செயற்பாட்டில் ஈடுபட அதே *குழுவுக்கு இடமளியுங்கள்.*
- மற்றக் குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக் களை வெளிக் கொண்டு வாருங்கள்.

> - தொடக்ககால திருச்சபை சமுகத்திடம் யூத சமுகம் போலவே ஆரோக்கியமாக விழுமியங் கள் காணப்பட்டன என்பது (திருத்தூதபணிகள் 4:32-37, 5:1-11)
> - தொடக்ககால திருச்சபை சமுகம் மறைபரப்பும் பணியை மையமாகக் கொண்டிருந்தமையே பன்மைபோக்கு நிராகரிப்பது போன்ற சிந்தனை வரக் காரணம். என்பது
> - பன்மைப்போக்கு இல்லாவிட்டால் வாழ முடியாது என்பது
> - மறைப்பரப்பு பணிகள் மத்தியிலும் நன்மை களை நன்மை என உறுதிப்படுத்தியமை இயேசுவின் சீடர்களின் ஆரோக்கியமான விழுமியமாகும் என்பது. யூதருக்கு நீதிச்சட்டம் போல புற இனத்தாருக்கு மனச்சான்றே அடிப்படை (உரோமை 2:14:15)
> - புதிய விண்ணத்திலும் புதிய மண்ணகத்திலும் சமய வேறுபாடுகளுக்கே இடமில்லை என்பது (திருவெளிப்பாடு 21:1-3,24)
> - நாம் வேறுபாடுகளின் மத்தியிலும் ஒற்றுமையை ஏற்படுத்தலாம் என்பது
> - போது மட்டுமே பண்பை சூழலில் வாழ முடியும் என்பது. (1கொரி. 12:12-31)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- தொடக்ககால திருச்சபை சமூக வாழ்க்கை முறை ஆரோக்கியமான விழுமியங்களைக் கொண்டிருந்தது எனினும் அதன் வீழ்ச்சிக்குக் காரணம் என்ன என விளக்குவர்.
- 1கொரிந்திர் 12:12-31 பவுல் முன்வைக்கும் சிந்தனை பன்மைத்துவத்தை உறுதிப்படுத்துவதிலும் என்பதை உரியவர்களின் கலந்துரையாடலில் உறுதிப்படுத்தி மற்றவர்களுக்குக் கூறுங்கள்.
- தொடக்க கால திருச்சபை சமூக விழுமியங்களை விமர்சனக் கண்ணோட்டத்துடன் நோக்கி சிந்தனைகளைத் தொகுப்பர்.
- விழுமியங்கள் சமய ஒளியின் அடிப்படையில் பறைசாற்றப்படும் போது ஆரோக்கியமற்ற விழுமியங்கள் எது என்பதை வெளிப்படுத்துங்கள்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- குழுச் செயற்பாட்டுபடிவத்தைப் பெற்று அதில் கவனம் செலுத்துங்கள்
- அறிக்கையை குழுவின் கருத்துக்களின் அடிப்படையில் தயார் செய்யுங்கள்.
- அறிக்கையை வகுப்பில் சமர்பிக்கத் தயாராகுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 3.5.1**

யூத இனத்தவரான இயேசு வேற்று இனத்தவரின் நற் செயல்களையும் விழுமியமாக நோக்கினார் (மத்தேயு 8:5-13, 15:21-28 லூக்கா 7:1-10). யூத சமுகத்தால் தள்ளி வைக்கப்பட்ட சமாரியரிடம் காணப்பட்ட நல்ல விழுமியங்களைப் புகழ்ந்தார் (யோவான் 4: லூக்கா 10:25-37, 17:11-19). இயேசுவை, தொடக்க திருச்சபையும் வரைபுக்குற்பட்ட அளவில் பின்பற்றினர். பேதுரு, இறைபயத்துடன் நீதியாக வாழ்வோரை கடவுளுக்கு ஏற்புடையவர்களாகக் கருதினார் (திருத்தூதர் பணிகள் 10:34,35). மனிதர்களையும் பொருள்களையும் வழிபடாமல் அவற்றை படைத்த கடவுளை வழிபட வேண்டும் என பவுல் கருதினார் (திருத்தூதபணிகள் 14:12-17). தொடக்க கால திருச்சபை சமூகத்தின் வாழ்க்கை முறை அன்பை மையமாகக் கொண்டிருந்தது. அவர்கள் திருத்தூதர் கற்பித்தல்களிலும் நட்புறவுவிலும் அப்பம் பிடுவதிலும் இறை வேண்டலிலும் உறுதியாய் நிலைதிருந்தார்கள். உடமைகளை பொதுவாக வைத்திருந்தனர். நிலபுலன்களையும் பிற உடமைகளையும் விற்று அனைவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப பகிர்ந்தளித்தனர். எளிமையான வாழ்க்கை முறையோடு வீடுகள் தோறும் அப்பத்தைப் பிட்டு உறவைப் பகிர்ந்து உண்டனர்.

பிரச்சினை ஏற்பட்ட போது பாதிக்கப்பட்டவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற பாதிக்கப் பட்டவர்களிடமிருந்து திருத்தொடர்களை ஏற்படுத்தினார் (திருத்தூதர்பணிகள் 6:1-7). மனித அதிகாரத்தை விட்டு கடவுளுக்குத் கீழ்ப்படிந்து வாழ்ந்தனர் (திரு 4:1-22) இந்த வாழ்க்கைமுறை திருச்சபையில் தொடரவில்லை. மாறாக நிறுவனமயமாக்கப்பட்ட திருச்சபைகளையே இன்று காணமுடிகின்றது.

மனுக்குலத்தை தனி முதல் போக்கு (Exclusive) உள்ளடக்கும்போக்கு (inclusive) பன்மைப்போக்கு எனும் கருத்தியல் கொண்டோராக வகைப்படுத்தலாம். - ''நான் மட்டும் சரி, நீ தவறு'' என்னும் கருத்தியல் தனி முதல் போக்குவாதியர் கொண்டிருப்பர். உன் கருத்து கொஞ்சம் சரி என் கருத்து முழுக்க முழுக்க சரி எனவே என்னை பின்பற்று'' எனும் கருத்தை உள்ளடக்கும் போக்குவாதிகள் கொண்டிருப்பர். பன்மை வாதிகள்- ''நானும்

சரி, நீயும் சரி, வா இணைந்து செயற்படுவோம் என்றோ அல்லது நானும் தவறு நீயும் வா திருத்திக் கொள்வோம் என்றோ அதற்கு நான் தவறு நீ சரி எனவே உங்களை பின்பற்றுகிறேன் என்றோ அல்லது எனது கருத்து சரி நீ யோசித்துவிட்டு தனது கருத்து சரி எனின் என்னோடு வா என்றோ'' கூறுவர்.

பவுல் கூறும் உடலும் உறுப்புக்களும் (1 கொரிந்தியர் 12:12-31) சிந்தனை பல்வேறுபட்ட வர்களாலும் இருப்பையும் சிந்தனையையும் செயற்பாட்டையும் அங்கீகரித்து இணைந்து வாழ்வதை உறுதிப்படுத்துகின்றோம். இன்றைய பின் நவீனத்துவ காலத்தில் நாம் பன்மையை ஏற்று அங்கீகரித்து வாழ்வது அவசரமான தேவையாகும்.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 3.5.2**

**குழு 1 :** தொடக்ககால திருச்சபை சமூகத்தில் காணப்பட்ட நல்ல விழுமியங்களை வகைப்படுத்தி விளக்குவர்.

**குழு 2 :** மறைபரப்பு பணிகளுக்கு மத்தியிலும் பண்மைக் சூழலில் இணைந்து வாழ வேண்டும் எனும் சிந்தனையை பேதுருவும் பவுலும் தம் வகைகளுக் கேற்ப கொண்டிருந்தனர். என்பது பற்றி கலந்துரையாடி விபரிப்பர்.

**குழு 3 :** தொடக்க கால திருச்சபை சமுக விழுமிய வாழ்க்கை முறை இன்றுவரை முழுமையாக திருச்சபைகளிடம் தொடக்கமாக பற்றி உரியவர்களிடம் கலந்துரையாடி கருத்துக்களை தொகுக்கவும்.

**குழு 4 :** தொடக்க கால திருச்சபைகள் விழுமியங்களுடன் இயேசு கற்பித்த விழுமியங்கள் ஒப்பிட்டு இயேசுவில் விழுமியங்களை இன்னும் நாம் பின்பற்ற வேண்டும் என தீர்மானித்து பிறருக்க முன்வைப்பர்.

**தேர்ச்சி 4.0** : பன்மைச் சூழலில் இணைந்து வாழ்வார்

**தேர்ச்சி மட்டம்** : சமாதானம் ஒப்புரவு போன்ற நல்விழுமியங்களின் அடிப்படையில் இன்றைய சமுகத்தில் வாழ்வார்.

**செயற்பாடு 4:3** : சமாதானம் ஒப்புரவு போன்ற நல்விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வோம்

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 4.3.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 4.3.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 4.3.1** :
- இணைப்பு 4.3.1 இலுள்ள தகவல் கோவையை வாசித்து விளங்கிக் கொள்ள இடமளியுங்கள்
- சமாதானம் ஒப்புரவு போன்ற விழுமியங்களை திருவிவிலியத்தை பாவித்து முன்வைக்கும்படி கூறுங்கள்
- பின்வரும் விடயங்களை காயப்படுத்தி கலந் துரையாடல்கள்.

- விவிலிய அடிப்படையிலும் பொது வாழ் விலும் சமாதானமும், ஒப்புரவும் மிகவும் முக்கியமான ஆரோக்கியம் நிறைந்த மனித விழுமியங்களாகும் என்பது
- அனைவரும் கடவுளுடைய பிள்ளைகள் என்பது (திருத்தூதபணிகள் 10:1-23)
- பன்மை சூழ்நிலையிலும் வாழ்பவர்களுக்கு சமாதானத்தை வழங்கி ஒப்புரவை ஏற்படுத் துவது இயேசுவின் பணியாகும். (எபேசியர் 2:11-23)
- மனித மாண்பில் மனிதர்களை மனிதர்களாக மதிக்கும் அடிப்படையில் சமாதானமும் ஒப்புரவும் ஏற்படுவதே பொருத்தமானது என்பது
- நாம் மனித மாண்பு மலர செயற்பட வேண்டும்.

**படி 4.3.2** :

- மாணவர்களை குழுக்களாக பிரிப்பர்
- இணைப்பு 4.3.2 இலுள்ள செயற்பாட்டுப் படிவத்தை ஒவ்வொரு முன்னர் வழங்குங்கள்
- நிறப்பேனா, எழுது கடதாசி என்பனவற்றை தேவை யான அளவுக்கு வழங்குங்கள்
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து அதை உறுதி செய்யுங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 4.3.3.** :

- தாம் கலந்துரையாடி பெற்ற தகவல்களை சமர்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்
- குறை நிரப்பு செயற்பாட்டில் ஈடுபட அதே குழுவுக்கு இடமளியுங்கள்
- மற்றக் குழுக்களில் ஆக்கபூர்வமான கருத்துக் களை வெளிக்கொண்டுவாருங்கள்
- பின்வரும் விடயங்களை வெளிக் கொணரும் விதமாக கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - ஒப்புரவு, வேறுபாடுகளைக் கடந்த உண்மை யான சகோதரத்துவத்தை கொண்டது என்பது
>   கிரேக்கர் - யூதர்
>   ஆண்-பெண்
>   அடிமைகள் - உரிமையுடையோர்
>   (1 கொரிந்தியர் 12:13, கலாத்தியர் 3:28 கொலோசியர் 3:11)
> - ஒப்புரவு புதிய அடையாளத்தை ஏற்படுத்தும் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர்
>   அரச குருக்களின் கூட்டத்தினர்
>   தூய மக்களினத்தினர்
>   கடவுளின் உரிமை சொத்தை மக்கள் கடவுளின் பின்காலால் (1பேதுரு 2:9 யோவான் 8:14-17)
> - கடவுளோடும் அவைகளோடும் ஏற்படும் ஒப்புரவு பாவம் சட்டம் போன்றவற்றிலிருந்து விடுதலையை தரும் என்பது (கலாத்தியர் 5:1,13, உரோமை 6:7,14, 18 -22 , 7:6-18-25 , 8:2 கொலொ 1:13)
> - நாட்டில் எங்களையும் சமயங்களின் வரைபு களையும் கடந்த மனித மாண்பு உறவுகள் முறியாமை அடிப்படை ஒப்புரவில் ஏற்படும் என்பது.
> - கடவுளோடும் படைப்புகளோடும் ஒப்புரவாதல் என்பது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- பன்மை சூழ்நிலையில் இணைந்து வாழ சமாதானமும் ஒப்புரவும் அவசியமானது என்பதை விளக்கிக் கூறுவர்
- சமாதானம் ஒப்புரவு மனித மாண்பை ஏற்படுத்தும் போது மட்டுமே அரத்தம் பெறும் என விளக்கி கூறுவர்
- பாவம், சட்டம் போன்ற வரையறைகளைக் கடந்து அனைத்து மட்டத்திலும் முறிவடையாத உறவினை ஒப்புரவு ஏற்படுத்தும் என உறுதிப்படுத்தி வெளிப்படுத்துங்கள்.
- எமது நாட்டுக்கு பன்மை சூழ்நிலையில் இணைந்து வாழ்வோம் பொருத்தமாகும் என தீர்மானித்து விளக்குவர்.

## குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

- குழுச் செயற்பாட்டுக்கான படிவத்தை பெற்று அதில் கவனம் செலுத்துங்கள்.
- அறிக்கையை குழுவின் கருத்துக்களின் அடிப்படையில் தயார் செய்யுங்கள்.
- அறிக்கையை வகுப்பில் சமர்பிக்கத் தயாராகுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 3.7.1**

வாழ்க்கை என்பது ஒரு தனிமையான தீவல்ல. மாறாக பலரும் இணைந்து வாழும் உலகக்கிராமம். இங்கு ஒவ்வொருவரும் தனிமைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டு பின்தள்ளப்படக் கூடாது.

பன்மைச் சூழ்நிலையில் வளம் ஏற்பட வேறுபட்ட ஒவ்வொருவரும் முக்கியப்படுத்தப்படுகின்றனர். கிரேக்கர் யூதர் ஆண் பெண் அடிமை உரிமைக் குடிமக்கள் ... என அனைவரும் (1 கொரிந்தியர் 12:13 கலா 3:28, கொலோ 3:11) ஒதுக்கப்படாமல் புதிய அடையாளம் பெறுகின்றார் (1பேதுரு 2:9 உரோமை 8:14-17). இந்நிலை மனுக்குலத்திற்கு மட்டுமல்ல முழு இயற்கைக்கும் ஏற்படும் (உரோமை 8:20-22). இந்த யதார்த்த நிலையானது பாவம், சட்டம், போன்றவற்றிலிருந்து விடுதலை பெற்று நிறைவான உறவுகளை ஏற்படுத்தும் நிலையாக காணப்படும் (கலாத்தியர் 5:1,13 உரோமை 6:7,14 18-22, 7:6,18-25, 8:2 கொலோ 1:13). ஒருவர் தனக்குள்ளும் கடவுளோடும், பிறரோடும், முழுபடைப்புடனும் நல்லுறவில் இணைந்து வாழ்வார்.

இத்தகைய வாழ்கையானது மனித மாண்பை வெளிக்கொணரும்; முக்கியமாக பிரிவினைகளை தகர்த்தெறியும் (எபேசியர் 2:11-23). எனவே நாம் எமது சூழ்நிலைகளிலும் கூட வேறுபாடுகளை ஏற்று, மதித்து, இணைந்து மாண்புடன் வாழலாம்.

### செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 4.3.2**

**குழு 1 :** சமாதானம் ஒப்புரவு போன்றவை ஆரோக்கியமான விழுமியங்கள் ஒடுக்கு முறை துணை போகாதவை என்பதை உதாரணங்களில் விளக்குங்கள்

**குழு 2 :** எபேசியர் 2:11-22 இன் அடிப்படையில் இனவாதம் கடந்த இலங்கை வாழ்வு பற்றி பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதுவர்

**குழு 3 :** மனுக்குல இருப்புக்கு பன்மைச் சூழலே மிகவும் பொருத்தமானது வளம் நிறைந்தது என பறைசாற்றுவார்கள்.

**குழு 4 :** மனித மேம்பாட்டுக்கு பன்மைச் சூழலை வகைப்படுத்தலாம் கருத்துக்களை சேகரித்து தொகுத்து கொள்ளுங்கள்.

**தேர்ச்சி 5.0** : கிறிஸ்தவ (மனித) விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வார்

**தேர்ச்சி மட்டம் 5.1** : அன்பு மைய வாழ்க்கை வாழ்வார்.

**செயற்பாடு 5.1** : நாம் செயற்படும் அன்பை மையமாகக் கொண்டு வாழ்வோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 5.1.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 5.1.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 5.1.1** :

- இணைப்பு 5.1.1 இலுள்ள தகவல் கோவையை சுயமாக முன்வரும் மாணவர் ஒருவரை கொண்டு வாசித்து மாணவர்களை விளங்கச் செய்யுங்கள்
- செயற்படும் அன்பு பற்றிய கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும்படி மாணவர்களுக்கு இடமளியுங்கள் வினாவுக
- பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் விதமாக கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

| |
|---|
| • மனுவுருவாதல் நிகழ்வு கடவுள் மனுக்குலம் மீது கொண்டிருந்த அன்பை விளக்கு கின்றது என்பது<br>• கடவுளின் மீட்பின் அன்பிற்கு பதிலாக அமைவதே மனித அன்பு ஆகும் என்பது (மாற்கு 12:30-34: மத்தேயு 22:34-40)<br>• கடவுளில் அன்பு செலுத்துகின்றோம் என்பது கடவுளில் சார்ந்த வாழ்வு மட்டுமே<br>• நாம் எம்மிலும் மற்றவர்களிடமும் கடவுளிலும் அன்பு செலுத்த வேண்டும். |

**படி முறை 5.1.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- செயற்பாட்டுப்படிவம் எழுது கடதாசி, நிறப்பேனா ஆகியவற்றை சிறு குழுக்களுக்கு பகிர்ந்தளியுங்கள்
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து அதை உறுதி செய்யுங்கள்

(30 நிமிடங்கள்)

**படி முறை 5.1.3** :

- தாம் கலந்துரையாடி பெற்ற தகல்களை சமர்பிக்கப் ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்
- குறைநிரப்பு செயற்பாட்டில் ஈடுபட அதே குழுவுக்கு இடமளியுங்கள்
- மற்றக் குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக் களை வெளியிட இடமளியுங்கள் ளெவளிக் கொணருங்கள்
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் கலந்துரையாடலை மேற்க் கொள்ளுங்கள்.

> - அன்பு, அற நெறி அடிப்படையும் செயல் முறையும் சார்ந்த என்பது
>   (பிலிப் 2:1, எபேசியர் 3:17 -19 1 கொரி 13, உரோமை 12:9-14
> - அன்பு சேவைப்பணி மூலம் வெளிப்படுத்தப் படுகின்றது என்பது
>   (மத்தேயு 25:31-46, யாக்கோபு 2:1-13)
> - அன்பு கிறிஸ்வர்களின் இருப்புக்கு முக்கியமானது என்பது (1யோவான்3:11-24)
> - சீடத்துவம் வாழ்க்கை முறையிலிருந்து வெளிப்படும் (யோவான் 13:35)
>   (1யோவான் 4:16)
> - பிறரை மையமாகக் கொண்டு நாம் எம்மிடம் இருப்பதை பகிர்ந்தளிப்பதே அன்பின் ஆற்றலாகும் என்பது
>   லூக்கா 10:25-37
>   மத்தேயு 19:16-25

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- தமது சூழ்நிலைக்கு பொருத்தமானபடி 1 கொரி 13ஐ திருத்தி எழுதுவர்
- அன்பு பணி பிறர் மையமானது என்பதை விளக்கி இருரதி காண்பார்.
- அன்பு சீடத்துவத்தின் வெளிப்பாடு என்பதை உரியவர்களோடு கதைத்து தீரமானித்து பிறருக்கு கூறுவர்.
- கடவுளிடம் தங்கி வாழ்ந்து சேவையைப் பணிகளில் ஈடுபடுவதே இன்றைய தேவை என்பதைப் பற்றி கருத்துக்களை சேகரிக்க.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- குழுச் செயற்பாட்டுப்படிவத்தை பெற்று அதில் கவனம் செலுத்துங்கள் அறிக்கையை குழுவின் கருத்துக்களின் அடிப்படையில் தயார் செய்து கொள்ளவும்.
- அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 3.5.1**

மனுக்குலம் வாழ்வின் இருப்பு அன்பிலேயே தங்கியுள்ளது ஒருவர் தன்னிலும் பிறரிலும் கடவுளிலும் இயற்கையிலும் அன்பு கொண்டு வாழும் போதே வாழ்வு பூரணமடைகின்றது. கிரேக்க மொழியில் புதிய ஏற்பாட்டில் (திருவிவிலியம்) வேறுபட்ட பல சொற்கள் வேறுபட்ட அன்பை விளக்க பாவிக்கப்பட்டுள்ளன.

1. எப்பிதூமியா (Epithumia) இது ஆசையை குறிக்கும். (லூக்கா 22:15, மத் 5: 28)
2. எரோஸ் (Eros )
   இது மனவெழுச்சி மேலிட ஏங்கியிருந்தல் என பொருள்படும். ஆசை நிறைந்த அன்பு என கூறலாம்.
3. பிலியா (Philia)
   நண்பர்களிடையே, கணவன்- மனைவியிடையே உள்ள அன்பை குறிக்கும்
   பிலைன் (Philein) எனும் வினைச்சொல் தந்தையும், தாயும், மகனும் மகளும் தம்மிலுள்ள அன்பை குறிக்க பாவிக்கப்பட்டுள்ளது. (யோவான் 11:3, 36 , 20:2)
4. அகாப்பே (Agape)
   அன்பின் உயர்நிலை இங்கு குறிப்பிடப்பகின்றது. கடவுள்: தனது மகனை மனுக்குலத்துடன் அன்போடு பகிர்ந்து கொண்டார். கடவுளின் அன்பை விளக்க 'அகாப்பே' பாவிக்கப்படுகின்றது. (யோவான் 4:8, மத்தேயு 5:43-48)

இந்த அடிப்படையில் சாதாரண உறவிலும், கடவுள் மனித உறவிலும். அன்பு மிகவும் முக்கியத்தும் பெறுகிறது.

கடவுள் மனித மீட்பில் காட்டிய அன்புக்கு மனிதர் காட்டும் பதிலே அன்பாகும். இந்த அன்பு சுயநலமாக செயற்படமாட்டாது. எப்போதும் எமது நலத்துக்காகவே செயற்படும். முக்கியமாக நல்ல சமாரியர் விவிலியப் பகுதியில் நல்ல சமாரயரின் நல்ல, அன்பு மனநிலை, என்னுடையதெல்லாம் உன்னுடையது எனும் கருத்தில் காணப்பட்டது. ஆனால் கள்வர் உன்னுடையதெல்லாம் என்னுடையது எனவும், குருவும் லேவியரும் உன்னுடையது உனக்கு என்னுடையது எனக்கு என எண்ணி, அன்பற்ற சுயநல மனப்பாங்கை கொண்டு காணப்பட்டனர் என்பதை புரிந்து கொள்ளலாம். தேவையுள்ளவர்களுக்கு உதவுவதே மனித பாண்பாக இருக்க வேண்டும் (மத்தேயு 25: 31-46)

பிலிப்பிய - 2:1
எபேசி- 3:17-19
1 கொரி 13
ரோமர் 12:9-14

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 5.1.2**

- உங்களுக்கு கிடைத்த கட்டரையை நன்றாக வாசியுங்கள் அதன்படி கீழ்காணும் வினாக்காளுக்கு விடை அளியுங்கள்.

1. அன்பை செயற்படுத்துவது எவ்வாறு என்பதை விளக்குக
2. விவிலியத்தில் காணப்படும் அன்பின் கருத்துக்களை அட்டவணைப்படுத்துக
3. நாம் கடவுளின் அன்பிற்கு எவ்வாறு பிரதிபலனைக் காட்டலாம். இப்பிரதிபலன்களைக் கலந்துரையாடி தீர்மானம் செய்து வெளிப்படுத்துங்கள்.
4. இலங்கையின் இனப்பிரச்சினைகளின் மேலாக செல்லும் அன்பை வெளிப்படுத்த எவ்வாறு செயல்படுவீர் கலந்துரையாடி கருத்துக்களைக் கூறுங்கள்.

**தேர்ச்சி** : கிறிஸ்தவ (மனித) விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர்

**தேர்ச்சி மட்டம் 5.2** : அமைதி வாழ்க்கை வாழ்வார்.

**செயற்பாடு 5.2** : நீதியோடும் கூடிய அமைதியின் அடிப்படையில் வாழுவோம்.

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 5.2.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 5.2.2 இலுள்ள புனிதர் பிரான்ஸ்சின் மன்றாட்டு
- இணைப்பு 5.2.3 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி
- நிறப் பேனா
- கழுத்து நெரிக்கப்பட்ட புறாவின் படம்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி முறை 5.2.1** :
- இணைப்பு 5.2.1லுள்ள தகவல் கோவையை சுயமாக முன்வரும் மாணவர் ஒருவரைக் கொண்டு வாசித்து மாணவர்களுக்கு விளங்கச் செய்யுங்கள்
- கழுத்து நெரிக்கப்பட்ட புறாவின் படத்தை காட்டி நீதியை அமைதி பற்றிய கருத்துக் களை பகிர்ந்து கொள்ளும்படி மாணவர்களை வினாவுக
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் விதமாக கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - கடவுளே அமைதியை தருபவர் என்பது
> - அமைதிக்காக செபம் பண்ண வேண்டும் என்பது
> - அமைதி நீதியின் அடிப்படையில் உருவாக வேண்டும் என்பது அமைதி ஏற்படுத்தியவர்களை செயற்பட வேண்டும் என்பது ( மத்தேயு 5:9)

**படி முறை 5.2.2.** :
- வகுப்பிலுள்ள மாணவர்களை குழுக்களாக பிரிக்கவும்
- செயற்பாட்டுப்படிவம் எழுதுகடதாசி நிறப்பேனா ஆகியவற்றை சிறு குழுக்ளிடமிருந்தே பகிர்ந் தளியுங்கள்
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து அதை உறுதி செய்யுங்கள்.

**படிமுறை 5.2.3** :

- தாம் கலந்துரையாடி பெற்ற தகவல்களை சமர்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குகள்
- குறை நிரப்பு செயற்பாட்டில் ஈடுபட அதே குழுவுக்கும் இடமளியுங்கள்
- மற்றக் குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக் களை வெளிக்கொண்டிருங்கள்
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடல் ஒன்றை மேற்க் கொள்ளுங்கள்.

> - நல்வாழ்வு தரும் அமைதி என்பது (ஏசாயா 2:1, 4,11, மீக்கா 4:1-4)
> - அமைதி விரும்பிகளுக்கும் போர்விரும்பிகளுக் கும் இடையே பிரிவினை ஏற்பட்டால் மட்டுமே உண்மையான அமைதி ஏற்பட வாய்ப்பிருக்கும் என்பது. (மத்தேயு 10:24)
> - சமூகமாகவும் தனிமையாகவும் நிலைமையை ஆய்வு செய்து சமநிலை அமைதி ஏற்படு வதற்கு முழுமையாக முயுற்சி செய்து கொண்டு கடவுளிடம் மன்றாட்டு தேவையானது என்பது
> - எமது நாட்டுக்கு தேவையாவது நீதிமையமான அமைதி. நீதி இதனை வன்முறை மூலம் ஏற்படுத்த முடியாது என்பது.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

- புனித பிரான்சிஸ் அமைதிக்கான மன்றாட்டை சேரத்து எடுப்பார்.
- சமாதானத்தை உருவாக்க பிறரின் சிந்தனைகளை மாற்றியமைக்க உங்களின் கருத்துக்களை வெளிப்டுத்துங்கள்
- இலங்கையில் அமைதி, நீதியின் அடிப்படையில் கிடைக்க உழைக்க வேண்டும் என கூறி மற்றவர்களை சேர்த்துக் கொள்வர்.
- அமைதி எதிர்பார்ப்புக்களின் சிந்தனைகளை எமது நாட்டுச் சூழ்நிலையில் அட்டவணைப்படுத்தி, அவற்றை அகற்ற என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என உரியவர்களிடம் உரையாடி வெளிப்படுத்துவர்.
- அனைவரோடும் இணைந்து இறையாட்சியின் மனிதாபிமான விழுமியங்களை அமைதியை ஏற்படுத்த, சவால்களை சந்திக்கத் தயார் என தீர்மானமெடுத்து வெளிபடுத்துவார்.

**குழுச் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

- குழுச் செயற்பாட்டுப்படிவத்தை பெற்று அதில் கவனம் செலுத்துங்கள்
- அறிக்கையை குழுவின் கருத்துக்களின் அடிப்படையில் தயார் செய்து கொள்ளுங்கள்.
- அறிக்கையை வகுப்பில் சமர்பிக்க தயாராகுங்கள்.

**இணைப்பு 5.2.1**

அமைதியை, குறிப்பிட்ட திருவிலியத்தில் வாழ்வோம் எனும் எபிரேய சொல்லில் 'நிறைவாழ்வு' எனும் கருத்திலும், ஐரேனே எனும் கிரேக்கச் சொல் போரில்லாமை எனும் கருத்திலும் பாவிக்கப்பட்டுள்ளன இதற்கு முழு நலம் அல்லது சுகம் (2 சாமுவேல் 18:29), இரு தரப்பினருக்குள் நிலவும் நட்பு, ஒற்றுமை ஒத்துழைப்பு உடனமைந்த உறவு (எசாயா 54:10) போரில்லாத திருத்தூதர்களின் நிலை (திருப்பணியாளர்கள் 12:20) எனும் நேரடிப் பொருள் உண்டு.

எசாயா (2:1-4) மீக்கா (4:1-5) இறைவாக்கினரின் சிந்தனைப்படி நிலையான அமைதி விளக்கப்படுகின்றது. போருக்கான ஆயத்தம் நிறுத்தப்பட்டு பொருளாதார வளர்ச்சிக்குரிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் (மீக்கா 4:3). பொருளாதார மேம்பாடும் அபிவிருத்தியும் நல்லவாழ்வு தரும். மதவாதம் நீக்கப்பட்டு மதச்சுதந்திரம் வழங்கப்படும். (4:5) இத்தகைய போரற்ற பொருளாதார, சமூகவளர்ச்சி எமது நாட்டுக்கு மிகவும் பொருத்தம். பன்மைச் சூழல் அங்கிகீகரிக்கப்படும்போது முடிவில்லாத அமைதி நிச்சயம் ஏற்படும்.

அமைதியை வாழ்த்தாக பரிமாறுவது விவிலியத்தின் மரபாகவுள்ளது. அத்துடன் அமைதிக்காக மன்றாடுவது மட்டும் போதாது, அமைதிக்காக செயற்பட வேண்டும். அதாவது அமைதி ஏற்படுத்துபவர்களாக இருக்க வேண்டும். (மத்தேயு 5:9)

அமைதியானது நீதியின் அடிப்படையில் தோன்ற வேண்டும். புதை குழிகளின் மத்தியில் நிலவும் அமைதி போன்ற ஒன்றையல்ல நாம் இங்கு எதிர்பார்க்கின்றோம். உரோமையின் இராயுவ அமைதியை (Pax Roma) அமைதி என நாம் கூறமுடியாது. ஏனெில் உரோமையை இராணுவத்தின் பயமுறுத்தல் அமைதிகாக்கப்பட்டது. இதனாலே இயேசு அமைதிக்கும் முன்னர் வரவேண்டிய பிரிவினையை வலிறுத்துகின்றார். அமைதி விரும்பிகளுக்கும் போர் விரும்பிகளுக்கும் இடையே பிரிவினை ஏற்பட வேண்டும். (மத்தேயு 10:34)

இலங்கைக்கு அமைதி எற்பட வேண்டும் என்பது அனைத்து மக்களின் நல்ல எண்ணமாகும். எனினும் இனவாதிகள், மதவாதிகள் , சுயநலவாதிகள் வன்முறைவாதிகள் ... போன்றோர் அமைதி ஏற்படுவதை தடுத்து வருகின்றனர். இனம் மதம் மொழி ... போன்றவற்றைக் கடந்து அமைதியை உண்மையாக விரும்பி செயற்படும் போது மட்டுமே அமைதி ஏற்படும்.

போரும் போர் பற்றிய செய்தியும் எமது அன்றாட அனுபவமாகிவிட்டது. இவை இயேசுவின் இரண்டாம் வருகைக்கு அடையாளம் என சிலர் தவறாக சிந்திக்கின்றனர் (மாற்கு 13:7).

இயேசு இன்று இலங்கையில் வாழ்ந்து கொண்டிருப்பாராயின் போர் நடைபெறும் போதும், போர் பற்றிய செய்திகளைக் கேட்கும் போதும், இது எனது வருகைக்கு அடையாளம் எனக் கூறுவாரா? எமது இயேசு ஒருநாளும் போரை அங்கீகரிக்கமாட்டார் என சிறுவனுக்கே தெரியும். எனவே, போர் வேண்டாம், அமைதி வேண்டும். இனவாதம் வேண்டாம், உரிமைகள் பகிரப்பட பறைசாற்ற வேண்டும்.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 5.2.3**

குழு 1 : இலங்கையில் நடைபெறும் போருக்கு காரணம் என்ன என்பதை கேட்டறிந்து குறித்துக் கொள்ளுங்கள்

குழு 2 : அமைதியை இலங்கையில் ஏற்படுத்த என்ன செய்ய வேண்டும் என்பதை அட்டவணைப்படுத்துங்கள்

குழு 3 : அமைதி இலங்கை உட்பட அகிலமெங்கும் வேண்டும் என மன்றாடுங்கள்

குழு 4 : அமைதி விரும்பிகளை பாடசாலைகளில் ஏற்படுத்த என்ன உரியவர்களிடம் செய்யலாம் என உரையாடி பிறருக்கு கூறுங்கள்.

**தேர்ச்சி 5.0** : கிறிஸ்தவ (மனித) விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 5.3** : 'வேற்றுமையில் ஒற்றுமை' மைய வாழ்வு வாழ்வர்

**செயற்பாடு 5.3** : நாம் வேற்றுமையில் ஒற்றுமையாக வாழ்வோம்

**நேரம்** : 80 நிமிடம்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 5.3.1 இலுள்ள தகவற் கோவை
- இணைப்பு 5.3.2 இலுள்ள செயற்பாட்டுப்படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசிகள்
- நிறப்பேனா
- வானவில்லின் படம்
- வேறுபட்ட பூக்கள் வைக்கப்பட்ட பூச்சாடி

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு படி முறை 5.3.1** :

- இணைப்பு 5.3.1 இலுள்ள தகவல் கோவையை மாணவர்களில் ஒருவரை கொண்டு வாசித்து அனைவரும் விளங்கிக் கொள்ள இடமளியுங்கள்.
- வேற்றுமையில் ஒற்றுமை (Unity in diversity) என்பதை பலவர்ணப் பூக்கள் கொண்ட பூச்சாடி வேறுபட்ட நிறங்கள் கொண்ட வானவில்லின் படம் என்பவற்றை காட்டி விளக்குங்கள்.
- வேற்றுமையில் ஒற்றுமை என்றால் என்ன என தம் சிந்தனைகளை வெளிப்படுத்த மாணவர் களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வண்ணம் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> - வேறுபட்டவைகள் ஒன்றாக செயற்படுவதே இயற்கை என்பது
>
>   உதாரணம் :
>
>   (1) ஐந்து விரல்களும் வேறுபட்டவை எனினும் பாத்திரத்தை தூக்க இணைந்து உதவும்.
>
>   (2) கறி சமைக்கும் போது வேறுபட்ட பொருட்கள் பல வேறுபட்ட அளவு களில் சேர்க்கப்படுகின்றன அப்போது தான் கறி சுவையாக இருக்கின்றது.
>
>   (3) வேறுபட்ட பாடங்களை கற்கின்றோம். இதன் மூலம் நிறைவான கல்வி நோக்கி பயணிக்க முடிகிறது.

- வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே பன்மைச் சூழல் கற்றுத்தரும் பாடம் என்பது
- 'வேறுபட்ட உடல் உறுப்புகளும் உடலும்' பற்றிய (1கொரி 12:12-31) பவுலின் சிந்தனையானது வேற்றுமையில் ஒற்றுமை காண வழிகாட்டுகின்றது என்பது.

(10 நிமிடங்கள்)

**படி முறை 5.3.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களை குழுக்களாக பிரிக்கவும்.
- செயற்பாட்டுப் படிவம் எழுதுகடதாசி, நிறப்பேனா, ஆகியவற்றை சிறு குழுக்களிடையே பகிரந்து அளியுங்கள்
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உதவி செய்து ஆலோசனை வழங்கி உறுதிப் படுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 5.3.3** :

- தாம் கலந்துரையாடலில் பெற்றுக் கொண்ட தகவல்களை சமர்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்
- குறை நிரப்பு செயற்பாட்டில் ஈடுபட அதே குழுவுக்கு இடமளிங்கள்
- மற்றக் குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளிக் கொணர இடமளியுங்கள்
- பின்வரும் விடயங்களின் வெளிக் கொணரும் வண்ணம் கலந்துரையாடலை மேற்க்கொள்ளுங்கள்.

- ஒற்றுமை அல்லது ஐக்கியம் அல்லது கூட்டுறவு என்பது கடவுளுடைய பிள்ளைகளிடம் காணப்பட வேண்டிய நல்ல விழுமியமாகும் என்பது
- இயேசு அவருடைய சீடர்களும் ஒற்றுமையாக (ஒன்றாக) இருக்க வேண்டும் என விரும்பினார் என்பது (யோவான் 17)
- பவுல் இயேசுவை பின்பற்றுவோரை ஒருமைப்பாட்டில் வாழும்படி அழைத்தார் என்பது (எபேசியர் 4:1-16, 1 கொரி 12:12-32
- எருசலேம் சங்கம் வேற்றுமைகளுக்கு மத்தியிலும் ஒற்றுமையை ஏற்படுத்த நடைபெற்ற ஒன்றே என்பது. திருத்தூதர்பணிகள் 15
- வேற்றுமைகள் மத்தயில் ஒற்றுமை அங்கீகரிக்கப்பட்டதாலேயே மனுக்குலமும் கிறிஸ்தவரும் சிக்கல்களுக்கு மத்தியிலும் வாழ்ந்து வருகின்றது என்பது.

### கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ஒற்றுமை ஒருமைப்பாடு பற்றி விளக்குங்கள்.
- 'வேற்றுமையில் ஒற்றுமை' அங்கீகரிக்கபடாவிட்டால் மனுக்குலம் / கிறிஸ்தவம் அழிந்து விடும் என்று உரியவர்களுள் கலந்துரையாடிய பின் நிறுவுவர்.
- ஒரே தன்மையில் ஒற்றுமை என்பதையும் வேற்றுமையில் ஒற்றுமையையும் ஒப்பிட்டு இவற்றால் கிடைக்கும் நன்மை தீமைகளை சேகரிப்பார்.
- பன்மைச் சூழ்நிலைக்கு வேற்றுமையில் ஒற்றுமையே பொருத்தம் என தீர்மானம் எடுத்து வெளிப்படுத்துவர்.

### குழுச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்

- குழுச் செயற்பாட்டுப் படிவத்தை பெற்று அதில் கவனம் செலுத்தவும்
- அறிக்கையை குழுவின் கருத்துக்களின் அடிப்படையில் தயார் செய்து கொள்ளுங்கள்
- அறிக்கையை வகுப்பில் சமர்பிக்கத் தயாராகுங்கள்.

### தகவல் கோவை

**இணைப்பு 5.3.1**

ஒற்றுமை கடவுளுடைய ஆட்சியின் விழுமியமாகும், ஒற்றுமை மூலம் நன்மை நிச்சயம் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

ஒற்றுமையை ஒரே தன்மையின் ஒற்றுமை, வேற்றுமையில் ஒற்றுமை என இருவகைப்படுத்தலாம்.

தொடக்ககால திருச்சபைகள் சமூகத்தில் சீடர்கள் பொது உடைமைகளோடு ஒன்றாக வாழ்ந்தனரா? (திருத்தூதர்பணிகள் 4:32-35) அல்லது வித்தியாசமாக ஒற்றுமையோடு வாழ்ந்தனரா? என நாம் சிந்திக்க வேண்டும். ஒற்றுமையில் ஒரு புதிய அடையாளத்து வத்தையும் (எபேசியர் 2:15,16 கலாத்தியர் 3:29 மிகவும் நெருங்கிய ஒரேமாதிரியான அல்லது ஒரே தன்மையான ஒற்றுமையை (யோவான் 17: 20-23) சிலர் முன்வைக்க நினைக்கின்றனர். எனினும் வேறுபாடுகள் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் காணப்படும் ஒற்றுமையே இயற்கை யானது. பொருத்தமானது. யதார்த்தமானது. (உரோமையர் 12:1-8, 1 கொரிந்தியர் 12-31 எபேசியர்4:1-14) எனவும் வேறு சிலர் கூறுகின்றனர்.

மனுக்குலம் வேறுபட்ட மனிதர்கள், வேறுபட்ட சிந்தனைகள் வேறுபட்ட கலாசாரங்கள் என எல்லாவிதத்திலும் வேறுபட்டவற்றால் இணைக்கப்பட்டுள்ளது. வேற்றுமை அங்கீகரிக்கப்படா விட்டால் ஒற்றுமையாக வாழ்ந்து யதார்த்தங்களுக்கு ஒத்துவராது ஆயுத கலாச்சாரத்ததுடன் திணிக்கப்படும் சர்வாதிகார ஆட்சிகள் குறித்த ஆட்சியமைப்பின் விருப்பமும் சிந்தனைகளும் மட்டுமே அரங்கேற வழியமைந்துள்ளது. எனினும் காலப்போக்கில் வேறு சிந்தனைகளோடும் மதிக்கப்பட வேண்டும் என எதிர்ப்பு ஏற்படுவதை உலகலரவது எமக்கு தெரிவிக்கின்றது

இதனாலேயே வேறுபட்ட சிந்தனைகள் செயற்பாடுகள் மத்தியிலும் ஒற்றுமையாக வாழ்வது மனுக்குலத்தின் இருப்புக்கு பொருத்தமானது எனும் கருத்து வலுப் பெறுகின்றது.

கடவுளின் ஆட்சியின் விழுமியமான ஒற்றுமையை யதார்த்தங்களுடன் பொருத்தமான தாகும். வேற்றுமையின் மத்தியில் ஒற்றுமையாக யதார்த்தத்துடன் பொருத்தி செயற்படுவது பன்மைச் சூழலுக்கு மிகவும் பொருத்தமாகும்.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 5.3.2**

- குழுக்களிடையே விவாதம் நடத்துங்கள்
- ஒரே தன்மையான ஒற்றுமையா? வேற்றுமையில் ஒற்றுமையா எமக்கு நாட்டுக்கு பொருத்தமானது?

**தேர்ச்சி 5.0** : கிறிஸ்தவ (மனித) விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர்

**தேர்ச்சி மட்டம் 5.4** : மன்னிப்பு மைய வாழ்க்கை வாழ்வர்

**செயற்பாடு 5.4** : நாம் மன்னிப்பு மைய வாழ்வை வாழ்வோம்

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 5.4.1 இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 5.4.2 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசி
- நிறப்பேனா

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**
**படிமுறை 5.4.1** :
- இணைப்பு 5.4.1 இலுள்ள தகவல் கோவையை ஓரிருமுறை வாசித்து மாணவர்கள் விளங்கிக் கொள்ள இடமளியுங்கள்.
- மன்னிப்பு என்னும் தலைப்பில் ஒரு தியானத்தை நடத்துங்கள்.
- மன்னிப்பு பற்றிய மாணவர்கள் கருத்துக்கள் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படும் விதமாக கலந்துரையாடலை மேற்கொள் ளுங்கள்.

> - மன்னிப்பு கடவுளுடைய ஆட்சியின் விழுமியம் என்பது
> - கடவுள் மன்னிக்கும் இயல்புடையவர் அதனாலேயே நாம் வாழ்கின்றோம் என்பது (லூக்கா 15:11-32)
> - பிறரை மன்னித்துவிட்டு கடவுளிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்பது
> - எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களை மன்னியும் என்பது (இயேசுவின் மன்றாட்டு - மத்தேயு 6:12)
> - நாம் மன்னிப்பு மூலம் உறவுகளை புதுப்பித்து வாழ வேண்டும் என்பது.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 5.4.2** :
- வகுப்பிலுள்ள மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்
- செயற்பாட்டுப்படிவத்தையும் எழுது கடதாசி நிறப்பேனா என்பவற்றையும் சிறு குழுக்களுக்கு வழங்குங்கள்
- மாணவர்களின் குழுச் செயற்பாடுகளை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்

(30 நிமிடங்கள்)

**படிமுறை 5.4.3.** :
- தாம் கலந்துரையாடி பெற்ற தகவல்களை சமர்ப் பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்
- குறை நிரப்பு செயற்பாட்டில் ஈடுபட அதே குழுவுக்கு இடமளியுங்கள்
- மற்றக் குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக் களை வெளிக்கொணரும்படி செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக் கொணர சந்தர்ப்பம் வழங்குங்கள் வகையில் கலந்துரையாடலை மேற் கொள்ளுங்கள்.

- மன்னிப்பு கடவுளின் கொடை. இது வாழ் வதற்கு இன்னொரு சந்தர்ப்பம் வழங்குகின்றது என்பது (யோவான் 8:1-11)
- மன்னிப்பளிப்பது மன்னிப்பு பெறுவது முக்கிய மானவை என்பது (மத்தேயு 18:23-35, 6:12) லூக்கா 6: 37)
- மன்னிப்பை பெற்றவர்கள் மாற்றம் பெற வேண்டும் என்பது
  லூக்கா 7:36-50
  லூக்கா 15:11-32
- மன்னிப்பு பெற மனமாற்றமும் (மன்னிப்பு பெறுகிறவர்) பரிவுள்ளமும் / இரக்கமும் (மன்னிப்பளிபவர்) தேவை என்பது
- மன்னிப்பு வரையறுக்கப்பட்டது என்பது லூக்கா 17:4)
- மன்னித்தலும் மன்னிப்பு பெறும் எமது சமுகத்தை நாம் வாழச் செய்ய வேண்டும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- மன்னிப்பதே முட்டாள் தனம் என சிந்திக்கும் சமுதாயத்தில் மன்னிப்பது புது வாழ்வு தரப்படும் ஒரு சந்தரப்பம் என்பதை விளக்கி ஒரு கட்டுரை வரைவர்.
- மன்னிப்பு இயலாமையின் வெளிப்பாடல்ல, மாறாக பொறுப்பின் வெளிப்பாடு என மனுகுல மேம்பாட்டை அடிப்படையாக கொண்டு கலந்துரையாடி தீர்மானிப்பது விளக்குவர்.
- மன்னிப்பு பெறுவதும் வாழ்வதும் இறையாட்சி நோக்கி பயணத்தின் வாழ்க்கை முறை என திருப்தியடைந்து உறுதிப்படுத்துங்கள்

### குழுச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்

- குழுச் செயற்பாட்டுப்படிவத்தை பெற்று அதில் கவனம் செழுத்துங்கள்.
- அறிக்கையை குழுவின் கருத்துக்களின் அடிப்படையில் தயார் செய்து கொள்ளுங்கள்.
- அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

### தகவல் கோவை

**இணைப்பு 5.4.1**

மன்னிப்பு எனும் வார்த்தை தமிழ் அகராதியிலிருந்தே நீக்கப்பட வேண்டும். மன்னிப்பு எந்த நன்மையையும் தருவதில்லை. மன்னிப்பை தவறு செய்ய வழங்கப்படும் இன்னொரு சந்தர்ப்பம் எனசிலர் கருதுகின்றார். இந்தச் சிந்தனை ஆரோக்கியமான ஒன்றல்ல.

கடவுளுடைய மன்னிப்பையும் மற்றவர்களின் மன்னிப்பும் கிடைக்காவிட்டால் எவராலும் வாழவே முடியாது. ஏனெனில் வாழ்க்கை என்பது ஒருவர் தவறுகளிருந்து நல்லவற்றை நோக்கி சிந்தனைகள் செயற்பாடுகளில் வளர்ச்சி மூலம் செல்லும் ஒரு பயணம். இந்த பயணத்தில் வீழ்ச்சியுடன் மன்னிக்க முடியாது. எழுச்சியும் தவிர்க்க முடியாதவை. வாழ்க்கை வீழ்ச்சியுடன் முடிவடைவதில்லை. எழுச்சிக்காக தரப்படும் சந்தர்ப்பமே மன்னிப்பாகும். இது ஒரு தொடர்நிலையாகும்.

கடவுளுடன் நெருங்கிய உறவு ஏற்படுத்தி செய்யவும் கடவுளில் தங்கி வாழவும் மன்னிப்பு மிகமிக தேவைப்படுகின்றது. சிலர் தீமையில் நிலைத்திருந்து நன்மையை தொடர்ந்து புறக்கணிக்க முயலுகின்றார். இது கடவுளுக்கே (தூய ஆவியான) எதிராக இழைக்கப்படும் தவறாகும்.

இதனை மன்னிக் முடியாது (மாற்கு 3:29)
எனக்கூறி மன்னிப்பின் அவசியத்தின் அவசரம் விளக்கப்படுகின்றது.

நாங்களோ, எம்மைச் சார்ந்தவர்களோ தவறுகள் தீவிரமாக மேற்க்கொள்ளப்படும் போது பல அப்பாவிகள் பாதிக்கப்படுகின்றனர். இந்த சந்தர்ப்பங்களில் நாம் பாதிக்கப்பட்டடவர்களிடம் மன்னிப்பு கேட்டு அவர்களில் வாழ்வின் மேம்பாட்டுக்காக உழைக்க வேண்டும்.

மன்னிப்பு நிகழ தவறியவரின் மனமாற்றமும் பாதிக்கப்பட்டவர்களின் மாற்றமும் இரக்கமும் அவசியம். மன்னிப்பின் அனுபவத்தை பெற்றவர்கள் மன்னிப்பை வழங்க தயங்காது முன்வர வேண்டும்.

மன்னிப்பு புதுவாழ்வுக்காக தரப்படும் ஒரு சந்தர்ப்பமாக கருதப்படவேண்டும். இச்சந்தர்ப் பத்தை பாவித்து இன்றும் தவறு செய்ய திட்டமிடுவார்கள் மனிதத்துவத்துக்கு எதிராக வாழ்கின்றனர். இதனை தடுக்க விழிப்புணர்வுத் திட்டங்கள் முன் வைக்கப்படவேண்டும்.

### செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 5.4.2**

- மனுக்குல உயர்வுக்கு மன்னிப்பே காரணம். குழுக்கள் மட்டத்தில் விவாதிக்கலாம்.

**தேர்ச்சி 5.0** : கிறிஸ்தவ (மனித) விழுமியங்களின் அடிப்படையில் வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 5.5** : நம்பிக்கை - எதிர்பார்ப்பு மைய வாழ்க்கை வாழ்வர்

**செயற்பாடு 5.5** : நாம் நம்பிக்கையோடு வாழ்வோம்

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 5.1.1. இலுள்ள தகவல் கோவை
- இணைப்பு 5.1.2 இலுள்ள செயற்பாட்டுப் படிவம்
- திருவிவிலியம்
- எழுது கடதாசிகள்
- நிறப்பேனா
- வெட்டப்பட்ட அடி மரத்திலிருந்து துளிர் வருவதை காட்டும் படம் அல்லது மரம்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படிமுறை 5.5.1** :
- இணைப்பு 5.1.1 இலுள்ள தகவல் கோவையை ஓரிருமுறை வாசித்து விளங்கிக் கொள்ள மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்
- நம்பிக்கை எதிர்பார்ப்பு பற்றி மாணவர்கள் கருத்துக்களை வெட்டப்பட்ட அடிமரத்திலிருந்து துளிர்வரும் காட்சியை பார்த்து (படம் உண்மை காட்சி ) பகிர்ந்து கொள்ள இடமளியுங்கள்
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வண்ணம் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்

> - வாழ்க்கையின் அடிப்படை நம்பிக்கை என்பது
> - மனுக்குலத்தின் வரலாற்றுப்பயணம் நம்பிக்கையிலிருந்து நம்பிக்கையின்மையிலிருந்து நோக்கி இட்டுச் செல்கின்றது என்பது
> - கடவுளின் அருள் புதுவாழ்வு தரும் நம்பிக்கை என்பது (திருப்பாடல் 49:15)
> - துன்பம், பிரச்சினை, விரக்தி போன்றவற்றுக்கு மத்தியிலும் நம்பிக்கையோடு எதிர்காலம் நோக்கி பயணிக்க வேண்டும் என்பது.

**படிமுறை 5.5.2** :

- வகுப்பிலுள்ள மாணவர்களை குழுக்களாக பிரியுங்கள்.
- செயற்பாட்டுப்படிவம் , எழுது கடதாசி நிறப் பேனா, துளிர்வரும் வெட்டப்பட்ட அடிமரத்தின் படம் ஆகியவற்றை சிறு குழுக்களிடம் பகிரந் தளியுங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து அதை உறுதி செய்யுங்கள்.

**படிமுறை 5.5.3** :

- தாம் கலந்துரையாடி பெற்ற தகவல்களை சமர்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குறை நிரப்பு செயற்பாட்டில் ஈடுபட அதே குழுவுக்கு இடமளியுங்கள்.
- மற்றக் குழுக்களின் ஆக்கபூர்வமான கருத் துக்கள் பகிரப்பட இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள் ளுங்கள்.

> - இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவ வாழ்வின் நம்பிக்கை மையம் என்பது. யோவான் 11:17-27 1 பேதுறு 1:3 1 தீமோத்தேயு 1:1 1 தெசலோ 4:13 உரோமை 5:2 1 தீமோத்தேயு 4:10
> - கடவுளுடன் இணைந்து வாழும் போது நாம் நம்பிக்கையுடன் இறையாட்சியின் விருந்தில் பங்கு கொள்வதற்காக நம்பிக்கை தரும் முன்சுவையே திருவிருந்து என்பது
> - கடவுள் தரும் அருட்கொடை நம்பிக்கை யுடன் வாழ வேண்டும் என்பது. (11 தெ 2:16 லூக்க 17:6 மாற்கு 1:15)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- தனிப்பட்டவர்களாகவும் சமுகமாகவும் இன்றைய சூழ்நிலையில் எமக்குள்ள நம்பிக்கையை அட்டவணைப்படுத்துவர்.
- கடவுளிலும், கடவுளின் ஆட்சியின் விழுமியங்களிலும் நம்பிக்கை வைக்கும் போது நாம் எழுவோம் என உறுதிப்படுத்தி மற்றவர்களுக்கு நம்பிக்கை யூட்டுவர்.
- “உயிர்ப்பு நம்பிக்கையூட்கின்றது” என விளக்குங்கள்.
- இறை நம்பிக்கையும் பிறர் நம்பிக்கையும் மனுக்குலத்தை வாழச் செய்யும் என விளக்கி பற்றுறுதியறிக்கையை எழுதுவர்.

## குழுச் செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்

- குழுச் செயற்பாட்டுப் படிவத்தை பெற்று அதில் கவனம் செலுத்தவும்.
- அறிக்கையை குழுவின் கருத்துக்களின் அடிப்படையில் தயார் செய்து கொள்வர்.
- அறிக்கையை வகுப்பில் சமர்பிக்க தயாராகுங்கள்.

## தகவல் கோவை

**இணைப்பு 5.4.1**

வாழ்க்கையின் அடிப்டைகளில் முக்கியமானது நம்பிக்கையாகும். நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இல்லாவிட்டால் எம் வாழ்வு அர்த்தம் மிகவும் இருக்க மாட்டாது.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழ்நிலை வாழ்வின் இருப்பை கேள்விக் குறியாக்கி விடுகின்றது. எனினும் விரக்தி, கவலை, இழப்பு, நம்பிக்கையின்மை போன்றவற்றில் நாம் மூழ்கிப் போய்விடக்கூடாது. நாம் கடவுளில் வைக்கும் நம்பிக்கை, மற்றவர்களில் வைக்கும் நம்பிக்கை எதிர்காலம் பற்றிய நம்பிக்கை, கடவுளின் ஆட்சியில் வைக்கும் நம்பிக்கை போன்றவை எம்மை எச்சத்தலிருந்து எழச் செய்யும்.

வரலாறு எமக்கு நம்பிக்கையை ஊட்டுகின்றது. மனித அவயவங்களிருந்து மனித மாண்பு நோக்கிய பயணமே வாழ்க்கை. இதில் எமது பங்கை தனிப்படோராகவும் சமூகமாகவும் நிறைவேற்றும் போது நம்பிக்கை மிக்க சமுகம் நிச்சயம் தோன்றும்.

## செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 5.4.2**

**குழு 1 :** நம்பிக்கையற்ற சூழிநிலையில் நம்பிக்கை ஊட்டுவதே இறைவாக்குப்பணி என்பதை விளக்குங்கள்

**குழு 2 :** கடவுளுடைய ஆட்சியின் விழுமியங்களில் நம்பிக்கை கொண்டு செயற் படுவோம் என்பதை தீர்மானித்து பறைசாற்றுங்கள்.

**குழு 3 :** நம்பிக்கை நிச்சயம் "புது வாழ்வையும் தரும்" என்பதை அடிப்படையாக கொண்டு சம்பவங்களை திரட்டுங்கள்.

**குழு 4 :** சாவுக்கு பின்வரும் வாழ்வில் (மோட்சம்) நம்பிக்கை வைப்பதா? சாவுக்கு முன்புள்ள வாழ்வில் நம்பிக்கை வைப்பதா? ( இன்றைய உலக வாழ்வில்) சிறந்தது என விவாதியுங்கள்.

# பகுதி - III

11.3.0 கணிப்பீடும் மதிப்பீடும்

11.3.1 கணிப்பீடும் மதிப்பீடும் விளக்கம்

11.3.2 கற்றல் - கற்பித்தலை மேலும் விரிவுபடுத்தலுக்கான கருவிகள்

11.3.3 மாதிரி வினாப்பத்திரம்

### 11.3.1 கணிப்பீடும் மதிப்பீடும் விளக்கம்

கற்றல்- கற்பித்தல் மூலம் எதிர்பார்க்கப்படும். கற்றற் பேறுகளைத் தெளிவாகப் பெற்றுக் கொள்வதற்கும், மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக வகுப்பறையில் இலகுவாகச் செயற்படுத்த முடியுமான, ஒன்றுக்கொன்று தொடர்புட்ட இரண்டு வேலைத்திட்டங்களாக் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் கருதலாம். கணிப்பீடு சரியான முறையில் நடைபெறுமெனின், வகுப்பில் கற்கும் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியின் (நிபுணத்துவத்தின்) அண்மிய மட்டத்தையாவது பெற்றுக் கொள்வது கடினமல்ல. மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பிள்ளைகள் பெற்றுக் கொண்ட தேர்ச்சி எம்மட்டத்தில் காணப்படு கிறது என்பதைக் கண்டுகொள்வதாகும்.

கணிப்பீட்டைச் செயற்படுத்தும்போது ஆசிரியர் மாணவர்களுக்கு இரண்டு விதமாக வழிகாட்டல்களை வழங்கலாம். இவ்வழிகாட்டல்கள் இரண்டும் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back) முன்னோக்கிய ஊட்டல் (Feed Forward) என அழைக்கப்படுகின்றன. மாணவர்களின் பலவீனம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவர்களிடம் காணப்படும் கற்றல் தொடர்பான பிரச்சினைகளை நீங்கிக் கொள்வதற்குப் பின்னூட்டலையும், மாணவர்களின் பலம், இயலாமை என்பவற்றை இனங்கண்டு கொண்ட பின், அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு முன்னோக்கிய ஊட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையோடு சார்ந்த பொறுப்பாகும்.

கற்றல் - கற்பித்தல் செய்கையின் வெற்றி, பாடத்திட்டத்திலுள்ள தேர்ச்சிகளில் எத்தேர்ச்சிகளை மாணவர்கள் எந்த மட்டத்தில் அடைந்துள்ளனரா என்பதை அறிவதன் மூலம் இனங்காணப்படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செய்கையின்போது, மாணவர்கள் அடைந்த தேர்ச்சி மட்டங்களை அளவிடுவது எதிர்பர்க்கப்படுவதோடு, அடைந்த தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விபரங்களைப் பெற்றோர் உள்ளிட்ட மற்றும் உரிய நபர்களுக்கும் தொடர்பாடல் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

உங்களிடம் முன் வைக்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம் மாணவர் மையமான (Student Centered) தேர்ச்சி மட்ட (Competancy - Based) செயற்பாடு சார்ந்த (Activity -Oriented) பிரவேசத்தைக் கொண்டது. வாழ்வைக் கருத்துள்ளதாக்கிக் கொள்வதற்கு, செயற்பாட்டினூடாகக் கற்றல் என்பது ஆசிரியரின் உருமாற்றப் பங்களிப்பில் காணப்படும் பிரதான அம்சமாகும்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளின் தொடரகத்தின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இப்பாடத்திட்டமானது, கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டினை, கணிப்பீடு - மதிப்பீடு என்பவற்றோடு ஒன்றிணைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பட்டிலும் அதன் இரண்டாம் படியில் மாணவர்கள், குழுவாக ஆய்வில் ஈடுபடும்போது அவர்களைக் கணிப்பீடு செய்வதற்கும் செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் தமது கண்டுபிடிப்புக்கள், பேறுகள் என்பவற்றைச் சமர்ப்பிக்கும்போது மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஆசிரியருக்கு முடியுமாகின்றது. மாணவர்கள் குழுவாக ஆய்வில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களினூடே சென்று அவர்களது வேலைகளை அவதானிப்பதன் மூலம், மாணவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை வகுப்பறையில் தீர்ப்பதற்குரிய வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை இலகுவாகக் கொள்வதற்கு ஐந்து பொது நியதிகள் முன்வைக்கப்டுகின்றது. இந்நியதிகளில் முதன் மூன்று நியதிகளும் உரிய தேர்ச்சி மட்டத்தோடு தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும், அடுத்த இரண்டு நியதிகளும் வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான இரண்டு திறன்களை

விருத்தி செய்து கொள்வதற்கானதாகவும் இருத்தல் வேண்டும். இந்த ஐந்து நியதிகளுடன் இணைந்ததான நடத்தை மாற்றங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படுகின்றதா என்பதைக் கண்டு கொள்வதற்கு ஆசிரியர் முயற்சி எடுக்க வேண்டியதோடு கணிப்பீட்டின் மூலம் கண்டு கொள்ளப்படும் மாணவர்கள் பெற்றுள்ள இத்திறன்களின் அளவை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர் அளந்து கொள்ள வேண்டும்.

கணிப்பீடு தொடர்பான வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் கற்றல் கற்பித்தற் செய்கையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்காக முதலில் செயற்பாட்டுத் தொடரகத்தில் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கணிப்பீட்டு வகைகளை அடிப்படையாகக் கொண்டதான தொகுதிகளாக வேறாக்கிக் கொள்ளுங்கள்.

மாணவர்களின் கற்றலை மலரச் செய்யக்கூடியதாக, உரிய பாட விடயத்துடன் தொடர்பான செயற்பாட்டைத் தெரிவு செய்யுங்கள். இனி, உரிய கற்றல் - கற்பித்தல் செய்கைக்கான சாதனங்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு செயற்பாட்டின் ஆரம்பத்தில் உரிய உபகரணங்களைக் குழுக்களுக்கு வழங்க வேண்டும். கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை விரிவாக்கும் போது அவை அமையக்கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- ❖ எண்ணக்கருப்படம் (Concept Maps)
- ❖ சுவர்ப்பத்திரிகை (Wall News papers)
- ❖ புதிர்ப்போட்டி (Quizzes)
- ❖ வினாவிடைப்புத்தகம் (Question and Answer Books)
- ❖ மாணவர் செயற்பாட்டுக் கோவை (Portfolios)
- ❖ கண்காட்சி (Exhibitions)
- ❖ விவாதம் (Debates)
- ❖ குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- ❖ கருத்தரங்கு (Seminars)
- ❖ சமயோசிதப் பேச்சு (Impromptu Speech)
- ❖ நடிபங்கு (Role plays)
- ❖ இலக்கியக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தல் (Presentation of Literature Reviews)
- ❖ வெளிக்களப் புத்தகம் / தினக் குறிப்புப் புத்தகம் / வேலைப் புத்தகம் (Field Books / Nature Diaries)
- ❖ செய்முறை சோதனை (Practical Tests)

பாட வழிகாட்டியின் மூன்றாம் பகுதி, உத்தேசக் கற்றல் - கற்பித்தற் செய்கைகளை விரிவாக்கும் வகைகளைக் கொண்ட செயற்பாடுகளையும் அதற்கான கற்றல் - கற்பித்தற் சாதனங்களையும் அறிமுகஞ் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளினுள் கணிப்பீடும், அதனோடு தொடர்பான மதிப்பீடும் இணைக்கப்பட்டுள்ளதால், கற்றல் - கற்பித்தல் செய்கை மேலும் விரிவாக்கப்பட்டுள்ளதோடு, மாணவர்கள் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் கற்றலில் ஈடுபடுவதற்கு முடியும்.

## 11.3.2. கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

01. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும் :- முதலாந்தவணை -01

02. உள்ளடக்கப்பட வேண்டிய தேர்ச்சி மட்டம் :- 2.1, 2.2

03. உள்ளடக்கப்படவேண்டிய பாட விதானம். :-
- பவுலின் பணித்தளப்பின்னணி
- உண்மை வாழ்வின் / மனமாற்றம் அழைப்பு

04. உபகரணத் தன்மை :-
- பவுலின் பணியின் செயற்பாடுகளைப் பற்றி ஆழமாக அறிந்து கொள்வதற்காக உடனடி உரை ஒன்றை முன்வைப்பர்.

05. உபகரணத்தின் குறிக்கோள் :-
- பவுலின் பின்னணி, அழைப்பு / மனமாற்றம் பற்றிய விபரங்களைத் தேடிப்பார்ப்பார்.
- இந்த விபரங்கள் அவரின் பணிக்காக பயன்பட்ட முறையை ஆழமாக அறிவர்.
- சேகரித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உடனடி உரையாக நிகழ்த்துவதற்கு ஆயத்தமாவர்

06. உபகரணங்களை செயல்படுத்த ஆசிரியர்களுக்கான அறிவுரை :-
- செயற்பாட்டு முறையோடு வகுப்பை ஆரம்பிக்கும் முன்நியதிகளை வகுப்பிற்கு அறிமுகம் செய்யுங்கள்
- குழுக்களாக விபரங்களை சேகரித்து அதை உடனடி உரைமூலம் முன்வைப்பதுடன் நிறைவு பெறும் என்பதை மாணவர்களுக்கு அறிவியுங்கள்
- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்
- குழுக்களுக்கு கொடுத்த தலைப்புகளில் தமது குழுவுக்கு பொருத்தமான தலைப்பை குறிப்பு புத்தகத்தில் குறித்துக் கொள்ளக் கூறுங்கள்
- விபரங்களைப் பெற்றுக்கொள்ள பரீசீலிக்கப்பட்ட அடிப்படை விபரங்களை தேடிப் பெற்றுக் கொள்ள ஊக்குவியுங்கள்.
- சேர்த்துக் கொள்ளப்பட்ட விபரங்களை பொதுக் குழுவுடன் கலந்துரையாட இடமளியுங்கள்.
- குழுக்கள் இப்போது உடனடி உரையை நிகழ்த்தும் மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு வழங்குங்கள்.
- உடனடி உரையை நிகழ்த்தும் தினத்தை மாணவர்களுக்கு அறிவியுங்கள்.

முதலாம் குழு :- பவுலின் வாழ்க்கைப் பின்னணி.

1) பவுலின் குடும்பப் பின்னணி
2) அப் பின்னணி பணிக்குதவியமை
3) நமது பின்னணி பணிக்கு உதவுதல்

இரண்டாம் குழு :- வாழ்வின் மாற்றம்

1) தமஸ்கு செல்லு முன் பவுலின் செயற்பாடுகள்.
2) பவுலின் மனமாற்றமும் / அழைப்பும் மாற்றத்திற்கான பின்னனியும்
3) மனமாற்றத்தின் பின் பவுலின் செயற்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள்.

| நியதிகள் / குழு இலக்கம் | | நோக்கத்தை தெளிவாக உறுதிப்படுத்தல் | செயற்பாடுகளை பொறுப்புடன் உறுதிப்படுத்தல் | ஒழுங்கமைப்பு மெய்ப்பிறப்பித்தல் | குழுச்செயற்பாடும் தலைமைத்துவ பண்பும் | மனதைக் கவரும் செயற்பாடு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | |
| 1 | | | | | | | |
| 1 | | | | | | | |
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| 2 | | | | | | | |
| 2 | | | | | | | |
| 2 | | | | | | | |

## புள்ளித்திட்டம்

| | | |
|---|---|---|
| மிக நன்று | - | 04 |
| நன்று | - | 03 |
| சாதாரணம் | - | 02 |
| தேர்ச்சி பெற வேண்டும் | - | 01 |

## 11.3.2. கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

01. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும் :- இரண்டாந்தவணை - 02

02. உள்ளடக்கப்பட வேண்டிய தேர்ச்சி மட்டம் :- 3.6, 3.7

03. உள்ளடக்கப்படவேண்டிய பாட விதானம். :-
- ஒடுக்கு முறைக்கும் , துன்பங்களுக்கும் முகம் கொடுத்தல்

04. உபகரணத்தின் தன்மை :-
- இயற்கை அனர்த்தமும், துன்பங்களும் மேல் எழுந்து செல்லும் தன்மையை பற்றி ஆழமாக அறிந்து கொள்ள விபரங்களைத் திரட்டி செயற்பாட்டு படிவம் தயாரித்தல்

05. உபகரணத்தின் நோக்கம் :-
- இயற்கை அனர்த்தமும், துன்பங்களில் இருந்து விலகிச் கொள்ள கிறிஸ்தவர்களாக இப்போது நடைமுறைப்படுத்தும் செயல்களை அறிந்து கொள்ளுதல்.
- இயற்கை அனர்த்தங்கள், துன்பங்களில் இருந்து விடுதலைப் பெற கிறிஸ்தவர்களாக செய்யக்கூடிய வழிமுறைகளை அறிந்து கொள்ளல்

06. நியதிகளை செயல்படுத்துவதற்கான ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல்:-
- செயற்பாடுகளை செயல்படுத்துவதன் நியதிகளை வகுப்பிற்கு அறிமுகம் செய்தல்.
- தேவையான தகவல் பிரதிகளைப் பெற்றுக் கொடுத்து செயற்பாட்டில் ஈடுபடுத்தல்
- குழுக்கள் மூலமாக விபரங்களை அந்த இடத்திலே பார்த்தக் கொள்ள இடமளித்தல்.
- செயற்பாட்டு படிவம் தயாரிப்பதுடன் இது நிறைவு பெறும் என்பதை அறிவித்தல்.
- குழுக்களாப் பிரித்து வகுப்பில் செயற்பாட்டில் ஈடுபடுத்தல்
- தமது குழுவுக்கு பொருத்தமான கருத்துக்களை தமது குறிப்புப் புத்தகங்களில் குறித்துக் கொள்ள ஆலோசனை கொடுத்தல்
- தேவையான விபரங்களைப் பெற்றுக் கொண்டு வினாக்களைத் தயாரித்து அதற்கான விடை களைப் பெற்றுக் கொள்ளும் முறையை விபரித்தல்.
- தேடிய விபரங்களை குழுக்களின் ஆலோசனை யுடன் செயற்படுத்தி அதன் சாராம்சத்துடன் சஞ்சிகை ஒன்றை தயாரிக்கவும்..
- செயற்பாட்டு படிவத்தைப் பெற்றுக் கொள்ளும் முடிவுத் திகதியை அறிவிக்கவும்.

மாணவர்களை அறிவுறுத்தல் :-

- விபரங்களைத் தேடும்போது பெற்றுக் கொள்ளும் மாதிரி படிவத்தில் அவதானமாய் செயல்படல்.
- அன்றேல் ஒருவர் மாதிரி படிவத்தை குறித்துக் கொள்ளல்
- ஒவ்வொருவரையும் தேடி அவர்களிடம் மாதிரி படிவத்தைப் பெற்றுக் கொண்டு அதன் மூலம் விபரங்களைப் பெற்றுக் கொள்ளல்.
- அதை புத்தகத்தில் குறித்துக் கொள்ளல்
- புத்தகத்தின் சாராம்சத்தில்
- வினாக்களுக்கான விடையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- குழுக்களோடு கலந்துரையாடி சாராம்சத்தை குறித்துக் கொள்ளுங்கள்.
- ஆலோசனைக் குழுக்களோடு கலந்துரையாடி விபரங்களை சேர்த்துக் கொள்ளுங்கள்.
- அதை செயற்பாட்டு படிவமாக ஆசிரியரிடம் ஒப்படைக்கவும்.

முதலாம் குழு :- இயற்கை அனர்த்தங்களுக்கமைய முன் செல்வோம்.

- அனர்த்தங்களால் ஏற்பட்ட பாதிப்பு.
- அந்த அனர்தங்களுக்கு திருவிவிலியத்தில் உள்ள வழிமுறைகள்.
- அதில் இருந்து மீள்வதற்கு அவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருக்கும் உதவி.
- அந்த உதவிகளால் ஏற்பட்ட முன்னேற்றம்.
- இப்படியானவர்களுக்கு அந் நிலையலிருந்து மீண்டு கொள்ள நாம் எடுக்கக் கூடிய வழிமுறைகளும் , ஆலோசனைகளையும் கூறுங்கள்.

இரண்டாம் குழு :- ஒடுக்கப்பட்டோரையும் காத்துக் கொள்வோம்.

- துன்பட்ட ஒருவரை சந்தித்து அவரின் துன்பங்ளை அறிந்து கொள்ளல்
- துன்பப்படுவோருக்கு திருவிவிலியத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் அறிவுரைகளைப் பார்க்கவும்.
- தற்சமயம் அப்படியான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு எடுத்திருக்கும் செயற்பாடுகளை அறிந்து கொள்ளல்.
- அதில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கூறுதல்
- அவர்களுக்கு அதில் இருந்து மீள்வதற்கான ஆலோசனை வழங்குதல்.

## கணிப்பீட்டு முறை

| குழு இலக்கமும் பெயரும் / நியதிகள் | நோக்கத்தை அறிந்து செயல்படல் | விபரங்களைப் பெற்றுக் கொள்ளும் ஈடுபாடு | தலைமைத்துவமும் செயற்பாடும் | நேர்தியான ஒழுங்கமைப்பில் முன்வைத்தல் | அறிவுறுத்தலோடு மெய்ப்பித்தல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## புள்ளித்திட்டம்

| | | |
|---|---|---|
| மிக நன்று | - | 04 |
| நன்று | - | 03 |
| சாதாரணம் | - | 02 |
| தேர்ச்சி பெற வேண்டும் | - | 01 |

01. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும் :- மூன்றாந்தவணை.

02. உள்ளடக்கப்பட வேண்டிய தேர்ச்சி மட்டம் :- 4:1

03. உள்ளடக்கப்படவேண்டிய பாட விதானம். :- யூத சமுதாயத்தின் நல்ல விழுமியங்களை பெற்று செயற்படுவோம்.

04. உபகரணத்தின் தன்மை :- யூத சமுதாயத்தின் நற் பண்புகளை அறிந்து கொண்டு, அதை நமது சமுதாயத்திற்கு பொருத்த மாக்கி ஒரு நாடகத்தை முன் வைத்தல்.

05. உபகரணத்தின் குறிக்கோள் :-

- யூத சமுதாயத்தின் நற்பண்புகளை அறிந்து கொள்ளல்.
- வெவ்வேறான நற் பண்புகளை இலங்கையிலும் பின்பற்றக்கூடியதாகக் செய்யக்கூடியதான முறை களைக் காணல்.

6). நியதிகளை செயல்படுத்துவதற்கான ஆசிரியர் அறிவுரை :-

- நியதிகளை செயல்படுத்தும் முன்பாக செயற்பாடு களை வகுப்பிற்கு அறிமுகம் செய்யுங்கள்
- விபரங்களை சேகரித்து நாடகமாக முன் வைப் பதுடன் நிறைவு பெறும் என்பதை மாணவர்களுக்கு அறிவியுங்கள்.
- மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள்
- தலைப்பை உணர்த்தும் வழிக்காட்டல் கருத்துக் களை குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொள் வதற்கு அறிவுரை வழங்குங்கள்.
- இப்படிப்பினையின் போதே நிகழும் செயற்பாடு கணீப்பீடு நிகழும் என்பதை மாணவர்களுக்கு அறிவியுங்கள்
- விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக பரிசீலிக் கப்பட்ட அடிப்படை விபரங்களைத் தேடி பெறு வதற்கு ஊக்குவியுங்கள்.
- தாங்கள் சேகரித்துக் கொண்ட விபரங்களை பொதுக் குழுவோடு கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்குங்கள்
- நாடக பாத்திரங்களை தேர்ந்தெடுப்பதற்கும் நாடகத்தை ஆயத்தப்படுத்துவதற்கும் நேரத்தை வழங்குங்கள்.
- நாடகத்தை அரங்கேற்றும் தினத்தை அறிவியுங்கள்.

மாணவர்களுக்கான அறிவுரை :-

- தலைப்பிற்கு அமைய விபரங்களை சேகரிப்பதற்கு வழிகாட்டுங்கள் கருத்துக்களில் தமது குழுவுக்கு தேவையான கருத்துக்களை குறித்துக் கொள்ளுங்கள்.
- பொருத்தமான கருத்துக்களை உபயோகித்து சரியான விபரங் களைச் சேகரியுங்கள்.
- குழுக்கள் மூலமாக சேகரிக் கப்பட்ட விபரங்களுக் கமைய நாடகத்தை அரங்கேற்றுங்கள்.
- மாணவர்களின் திறமைகளை வெளிக் கொணர்ந்து நாடகத்தை நடத்துங்கள்.

## நாடகத் தலைப்பு

**1ம் குழு** - யூத சமுதாயத்தின் நல்ல குடும்பம்
**2ம் குழு** - விவிலிய இறைவாக்கினர் இலங்கைக்கு வருகை
**3ம் குழு** - பன்மைத் தன்மையைப் பின்பற்றி செல்லும் நற் பண்புகள்
**4ம் குழு** - இனவாதத்தை புறக்கணித்த மேலாகச் சென்ற யூத குடும்பத்தின் வழிகாட்டல்

## கணிப்பீட்டு முறை

| நியதிகள் / குழு இலக்கமும் பெயரும் | நோக்கத்தை தெளிவாக உறுதிப்படுத்தல் | விபரங்களைப் பெற்றுக் கொள்ளுதலும் செயற்பாடும் | தலைமைத்துவமும் செயற்பாடும் | நேர்த்தியான ஒழுங்கமைப்பும் பொறுப்பும் | கருத்துக்களை மெய்ப்பித்து முன்வைத்தல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## புள்ளித்திட்டம்

மிக நன்று - 04
நன்று - 03
சாதாரணம் - 02
தேர்ச்சி பெற வேண்டும் - 01

கற்பித்தலோடே இதை கணிப்பீடாக நடாத்துங்கள்

## 11.3.3 மாதிரி வினாத்தாள்
## தரம் - 11

**கிறிஸ்தவம் - 1 மணித்தியாலம்**

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. 1-40 வரையான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள 1,2,3,4 எனும் விடைகளில் சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதில் அடையாளம் இடுக.

1. ஏசாயா இறைவாக்கினர் கூறியதற்கமைய மெசியாவில்,
   1. இருளிலிருந்த மக்கள் ஒளியை உணர்ந்து கொண்டனர்.
   2. இருளிலிருந்த மக்கள் ஒளியை நோக்கித் திரும்பினர்.
   3. இருளிலிருந்த மக்கள் ஒளியை கண்டனர்.
   4. இருளிலிருந்த மக்கள் ஒளியை இனங்கண்டனர்.

2. நல்லாயர்,
   1. ஆடுகளுக்குப் பின் செல்வார்.
   2. ஆடுகளுக்கு முன் செல்வார்.
   3. ஆடுகளுக்கு மத்தியில் செல்வார்.
   4. ஆடுகளுக்கு இருமருங்கிலும் செல்வார்.

3. இறையாட்சிக்காக செயலாற்றும் போது,
   1. துன்பப்படல் முக்கியமாகும்.
   2. துன்பப்படத் தேவையில்லை.
   3. வேறு மாற்று வழிகள் இல்லையெனில் துன்பப்பட நேரிடும்.
   4. துன்பப்பட வேண்டுமென நினைத்தே துன்பப்பட நேரிடும்.

4. இன்றைய சூழ்நிலையில் துன்புறும் ஊழியரைப்பின்பற்றும் போது,
   1. கிறிஸ்துவின் குணங்களை முன் மாதிரியாகக்கொள்ள வேண்டும்.
   2. கிறிஸ்துவின் போதனைகளை அறிவிக்க வேண்டும்.
   3. கிறிஸ்துவைப் போன்று புறக்கணிக்கப்பட வேண்டும்.
   4. கிறிஸ்துவைப் போன்று உயிர்த்தியாகமும் செய்ய ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

5. புனித பவுல் பணிக்காக அழைப்புப் பெற்றது,
   1. அவர் தாயின் வயிற்றில் இருக்கும் போதேயாகும்.
   2. தமஸ்குவிற்கு செல்லும் வழியிலாகும்.
   3. ஸ்தேவான் இறந்த சந்தர்ப்பத்திலாகும்.
   4. கமாலியேலிடம் கற்ற சந்தர்ப்பத்திலாகும்.

6. சதுசேயர், பரிசேயரின் முரண்பாடுகளைப் பவுல் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய செயற்பாடு கிறிஸ்தவனுக்கு,
   1. பின்பற்றக் கூடியதாகும்.
   2. பின்பற்றக் கூடாததாகும்.
   3. சந்தர்ப்பத்திற்கேற்ப அனுமதிக்கக் கூடியதாகும்.
   4. மறுக்க வேண்டியதாகும்.

7. மனித வாழ்விலே செல்வத்தினால் ஏற்படும் மாற்றமானது, பூரணமான வாழ்வை நோக்கி செல்லும் போது செல்வாக்குச் செலுத்துவது,
    1. அம்மாற்றமானது திடீரென ஏற்படும் போது மட்டுமேயாகும்.
    2. அம்மாற்றமானது நினைத்தே ஏற்படுத்திக்கொண்டால் மட்டுமேயாகும்.
    3. அம்மாற்றமானது நீண்ட காலமாகவும் தொடர் செயற்பாடாகவும் இருந்தால் மட்டுமேயாகும்.
    4. அம்மாற்றமானது கண்டுணரக் கூடியதொன்றாக இருந்தால் மட்டுமேயாகும்.

8. தனிப்பட்ட தலைமைத்துவத்தை விடக் கூட்டுத்தலைமைத்துவம் பயனுள்ளதாய் அமைவது,
    1. தனி ஆளைவிட பல ஆட்களை நன்றாகக் காண முடியும் என்பதனால் ஆகும்.
    2. கூட்டுத் தலைமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களைச் செயற்படுத்து வது இலகுவாகும் என்பதனாலாகும்.
    3. ஒரு தலைவரின் ஆற்றல் ஏனைய தலைவர்களினது ஆற்றல்களின் வழியாக ஒரே மட்டத்தில் மெருகூட்டப்படுபவதாலாகும்
    4. கூட்டுத் தலைமைத்துவத்தில் எல்லாக் கருத்துக்களும் பொதுக் கலந்துரையாடலுக்கு உட்படுவதனாலாகும்.

9. குற்றமற்றவராகக் கருதப்பட்ட புனித பவுல் பிலிப்பியில் முகங்கொடுக்க நேர்ந்த சம்பவங்களினூடாக எதிர்காலத்தில் இவ்வாறான நிலைக்கு முகங்கொடுக்க நேரிடுபவர் களுக்கு எடுக்கக் கூடிய படிப்பினையாய் அமைவது,
    1. எப்பொழுதும் ஆட்சியாளரை மகிழ்விப்பதாக செயற்பட வேண்டும் என்பது
    2. துன்பத்தின் மத்தியிலும் இறைவனுக்குச் சான்று பகர வேண்டும் என்பது.
    3. பிரச்சினைகள் உண்டாகும் இடங்களில் தைரியமாகச் செயற்பட வேண்டுமென்பது.
    4. பிரச்சினைகள் உண்டாகும் இடங்களைத் தவிர்த்தலும் அவ்விடத்தை விட்டு விலகிச் செல்ல வேண்டுமென்பது.

10. சவுல் பவுலாக அறிமுகமானது,
    1. தமஸ்குவிற்குச் செல்லும் போது ஏற்பட்ட விபரீதத்தின் பின்பாகும்.
    2. தமஸ்குவிற்குச் சென்ற பின்பு ஏற்பட்ட மாற்றங்களின் பின்பாகும்.
    3. புனித லூக்கா சவுலை பவுல் என்று விளித்தலினாலாகும்
    4. புனித பவுல் கிரேக்க பிரதேசங்களுக்குள் நுழைந்த பின் கிரேக்க பெயரை உபயோகித் தமையாகும்.

11. தர்சு நகரில் பிறந்தமையால் புனித பவுல் பெற்ற விசேட சலுகைகள் ஆவன.
    1. உரோமைக் குடியுரிமை
    2. கிரேக்க மொழி தெரிந்தமை
    3. அந்நியரோடு உறவாட பழகியமை
    4. பரிசேயனாக வளர்வதற்கு ஆற்றல் கிடைத்தமை

12. அறியாத தெய்வத்தினைப் பற்றி புனித பவுல் கூறியதாவது
    1. எபேசிய மக்களுக்காகும்
    2. எதென்ஸ் மக்களுக்காகும்
    3. கொரிந்து மக்களுக்காகும்.
    4. பிலிப்பி மக்களுக்காகும்.

13. கிறிஸ்தவ பக்தனாக இல்லாவிட்டாலும் அகிம்சாவாதியாக விடுதலைப் போரில் வெற்றி பெற்றவர்.
    1. மாட்டின்லூதர் கிங்
    2. பொலிகாப்
    3. பெர்பேவுவா
    4. மகாத்மா காந்தியடிகள்

14. பழைய ஏற்பாட்டில் துன்புறும் ஊழியர் என்ற சொல்லை முதாவது சந்தர்ப்பத்தில் பயன்படுத்தியது.
    1. துன்புறுகின்ற இறைவாக்கினரை அறிமுகப்படுத்துவற்காகும்.
    2. எகிப்தில் அடிமை வேலைகளில் ஈடுபட்டிருந்த மக்களை அறிமுகப்படுத்துவதாகும்.
    3. இஸ்ரேயல் மக்களை அறிமுகப்படுத்துவதாகும்.
    4. கிறிஸ்துவை அறிமுகப்படுத்துவதற்காகும்.

15. இன்றைய இலங்கைச் சமூகத்திலே குடும்ப உறவுக்குப் பலமுள்ள எச்சரிக்கையாய் அமைவது
    1. பொருளாதாரக் கஷ்டங்கள்
    2. குடும்ப அங்கத்தவர்கள் பல்வேறு நடத்தைகளில் ஈடுபடுதல் அறிமுகப்படுத்து வதாகும்.
    3. பெற்றோர் தமது பொறுப்புக்களை நிறைவேற்றாமை
    4. அன்பினால் தமது உறவைக் கட்டியெழுப்புவது பற்றி உதாசீனமாயிருத்தல்.

16. ஆணாதிக்கமுள்ள சமூகத்துக்கு கிறிஸ்துவினுடைய போதனைகள் வழியாகக் கொடுக்கக்கூடிய செய்தியாய் அமைவது.
    1. ஆணாதிக்கத்தை அனைவரும் எற்றுக் கொள்ள வேண்டுமென்பது.
    2. பெண்கள் விருந்து உபசாரனையில் ஈடுபடக்கூடாதென்பது
    3. பெண்களுக்கு விசேடமான சமூகத் தடை போடக்கூடாதென்பது.
    4. பெண்கள் சமூக சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடாதென்பது.

17. இன்றைய கிறிஸ்தவர்களுக்கு ஆரம்பகால கிறிஸ்தவ சபையிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய மிகப் பெரிய முன்மாதிரியாய் அமைவது
    1. ஒவ்வொருவரினதும் தேவைகள் நிறைவேற்றுவதற்கு தயாராயிருத்தல்
    2. விசேட தினங்களை வழிபாட்டுக்காக ஒதுக்கி வைத்திருத்தல்
    3. உபசரணைக்காக வேறாக ஒரு குழுவை ஈடுபடுத்தியிருத்தல்
    4. நல்லாடுகளையும் பொல்லாத ஆடுகளையும் நான் பிரித்தெடுப்பேன்.

18. அன்பும், ஆயனுக்குரிய பொறுப்பும் கடமைகளும் ஒன்றொடொன்று இணைய வேண்டுமென குறிப்பிடும் திருவிவிலிய பகுதியாவது
    1. ஆயன் இல்லாத ஆடுகள் சிதறுண்டு இருக்கும்
    2. நான் ஆடுகளுக்கெதிராக இருப்பினும் எனது ஆடுகள் அவர்கள் கைகளால் மீண்டும் எடுக்கலாம்.
    3. நான் ஆடுகளுக்காக எனது உயிரைக் கொடுப்பேன்.
    4. நல்லாடுகளையும் பொல்லாத ஆடுகளையும் நான் பிரித்தெடுப்பேன்.

19. இன்றைய உலகிலே காணக்கூடிய பேதங்களுக்கும் பிரிவினைகளுக்கும் முக்கிய காரணம்
   1. உலகமயமாக்கலினால் ஏற்படும் தீய விளைவுகளின் பாதிப்புக்கள்.
   2. பல்லின மக்கள் தொகையினால் உலக சமூகம் அமைக்கப்பட்டிருத்தல்.
   3. சில இனங்கள் மற்றவர்களை சந்தேகத்தோடு பார்த்தல்
   4. உலக இனங்களுக்கு இடையில் சகோதர தன்மையை காணமுடியாதிருத்தல.

20. கிறிஸ்தவ பிள்ளை என்ற மட்டில் நீர் பாடசாலை சமூகத்துக்குள் அமைதியைக் கட்டி யெழுப்ப உம்மால் செய்யக்கூடியது.
   1. யுத்தமா? அமைதியா? என்ற தலைப்பில் விவாதமொன்றை நடாத்துதல்
   2. தனக்கோ தனது நண்பனுக்கோ அநீதி இழைக்கப்படும் போது அதனைப் பொறுமை யோடு ஏற்றுக்கொள்ளுதல்.
   3. ஆசிரியரோடும் மாணவரோடும் எப்போதும் நட்புடன் நடந்து கொள்ளல்
   4. அமைதியைப் பற்றிய வெளியீடுகளை பாடசாலையில் பொருத்தமான இடங்களில் காட்சிப்படுத்தல்

21. ஏழ்மைக்கான காரணமாயமைவது,
   1. மனிதனின் பேராசை
   2. மனிதனின் சோம்பல்
   3. இறைவனின் விருப்பம்
   4. இயற்கையின் அழிவுகள்

22. சுனாமியின் அழிவுகள்
   1. மனிதனின் பாவத்திற்கான இறைவனின் தண்டனையாகும்
   2. கிறிஸதுவின் இரண்டாம் வருகை பற்றிய அடையாளமாகும்
   3. உலக முடிவு பற்றிய அடையாளமாகும்
   4. பூகம்பத்தின் காரணமாக புவியின் கண்டத் தகடுகளின் மோதலின் அதிர்வுகளால் ஏற்படும் நில இறக்கங்களின் விளைவாகும்.

23. இறையரசின் மக்களெனப்படுபவர்கள்
   1. ஏழைகள்
   2. துன்பப்படுபவர்கள்
   3. பகிர்ந்து கொள்ளாதவர்கள்
   4. பொது நலம் உள்ளவர்கள்

24. பல்லின சமூகத்தில் கிறிஸ்தவ பணிகளாய் அமைவது
   1. ஒன்றித்து வாழ்வதாகும்
   2. தீமைகளை ஏற்று வாழ்வதாகும்
   3. மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமையாகும்
   4. தனது கருத்துக்களுக்கு மற்றவரை இனங்காணச் செய்தலாகும்

25. இனரீதியான முரண்பாடுகளுக்கு மாற்றுச் செயலாவது
   1. அமைதியைப் பற்றி உரையாற்றுவதாகும்
   2. அரசியலமைப்பு யாப்புக்களை விவாதத்திற்கு எடுத்தலாகும்
   3. அதிகாரங்களைப் பகிர்தலாகும்
   4. வெளிநாடுகளுக்கு செல்வதாகும்

26. கிறிஸ்தவர்கள் பிற சமயத்தவரோடு வாழ வேண்டியது
   1. அவர்களுக்கு கிறிஸ்தவ மதிப்பீடுகளை எடுத்துரைத்தலாகும்
   2. அவர்களை கிறிஸ்தவ சமயத்துக்கு மனந்திரும்பும் நோக்கத்தோடு ஆகும்
   3. அவர்களோடு உணவைப் பகிர்ந்து கொள்வதாகும்
   4. சமய வேறுபாடுகளின்றி ஒற்றுமையாக வாழ்வதாகும்

27. வாழும் மறைசாட்சிகள் என்பதன் அர்த்தம்
   1. இறையாட்சியை நிறுவுவதற்காக உழைப்பவர்கள்
   2. இறையாட்சிக்காக உயிர்த்தியாகம் செய்பவர்கள்
   3. இறையாட்சிக்காகத் தைரியத்தோடும் பயமின்றியும் வாழ்பவர்கள்
   4. இறையாட்சியைப் பற்றிப் போதிப்பவர்கள்

28. யூத சமூகத்தைப் போன்று எமது சமூகத்திலும் உள்ள நல்ல விழுமியங்களாவன
   1. விருந்தோம்பலாகும்
   2. பிதா வழிக்கு முக்கியத்துவமாகும்
   3. தமது இனத்தை நேசிப்பதாகும்
   4. கடன்காரரை கடனிலிருந்து விடுவிப்பதாகும்.

29. கிறிஸ்தவ அன்பு சரியான முறையில் செயற்படுவது
   1. மனைவியர் தமது கணவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் சேவை செய்வதாகும்.
   2. கிறிஸ்துவைப் போல் நாமும் சிறு பிள்ளைகளை நேசித்தலாகும்.
   3. அன்பைப் பற்றிய கிறிஸ்துவின் கட்டளையை தியானித்தலாகும்.
   4. மற்றவர்களுக்காக ஒருவர் தனது வாழ்வைத் தியாகம் செய்வதாகும்.

30. கடுமையான கருத்துக்களுள்ள நிமாலின் செயற்பாடுகளின் முன் கமாலின் செயற்படாயமைய வேண்டியது.
   1. அவனுக்காக மன்றாடுதலாகும்
   2. அவன் பிழைவிடும் போது அவற்றைச் சுட்டிக் காட்டுவதாகும்.
   3. அவனுடைய கருத்துக்களை தந்திரமாக ஏற்காமையாகும்.
   4. அவனுடைய கருத்துக்களைப் பொறுமையோடு கேட்டலாகும்.

31. இன்றைய திருச்சபையில் இறையாட்சி விழுமியங்களைப் பகிர்ந்து கொள்வதன் பூரண நிலையை நாம் காணக்கூடியதாயிருப்பது.
   1. எது வித பேதமும் இல்லாத நாட்டை உருவாக்கிய பின்னராகும்.
   2. எல்லா விதமான தொழிநுட்பங்களையும் உபயோகித்து சமயத்தைப் போதிப்பதன் பின்னராகும்
   3. இலங்கைக் கிறிஸ்துவை நாம் வெளிப்படுத்திய பின்னராகும்
   4. இறையாட்சி விழுமியங்களை பலவந்தமாக மனித உள்ளங்களில் அறிவித்த பின்னராகும்

32. எந்தவொரு ஆளும் துன்பத்துக்குள்ளாகும் போது நாம் அவருக்கு உதவி செய்ய வேண்டியது.
   1. அதன் வழியாக நிலை வாழ்வைப் பெற்றுக் கொள்ளலாமென்பதால்
   2. உயர்ந்த மனிதத் தன்மைக்குள் மனிதனை துன்பத்துக்குள்ளாக்குவது இறைவனது திட்டத்திற்கு எதிரானது என்பதால்
   3. துன்பப்படும் மனிதருக்கு உதவுவதால் பேரின்ப வீட்டுக்கான வழி திறக்கப்படும் என்பதால்
   4. சமூகத்தை நல்ல முறையில் கட்டியெழுப்புவதற்கு சமூகம் துன்பமில்லாதிருக்க வேண்டுமென்பதால்

33. எல்லா மனித இனமும் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதை விளக்குகின்ற சம்பவம்.
   1. திருத் தொண்டர்கள் ஏழு பேரைத் தேர்ந்தெடுத்த சம்பவமாகும்
   2. புனித பவுல் லிஸ்திராவில் முடவனைக் குணமாக்கிய சம்பமாகும்
   3. அனனியா பவுலைக் குணப்படுத்திய சம்பவமாகும்
   4. பேதுரு, கொர்னேலியு பற்றிய சம்பவமாகும்.

34. கிறிஸ்தவர்கள் கண்டுணரும் மீட்பின் தூய தன்மையானது.
   1. அது அவர்களின் முயற்சியால் ஏற்பட்ட பிரதிபலனல்ல என்பது
   2. அது கலகத்தினால் அல்லாமல் பெற்றுக் கொள்ளக் கூடியது என்பது
   3. அது நீதிச்சட்டத்தின் படி வாழ்வதால் பெற்றுக் கொள்ளக் கூடியது என்பது
   4. அது அமைதியான கலந்துரையாடலின் பெறுபேறாகும்.

35. இயற்கை அழிவுகளினால் அகதிகளானவர்களுக்கு நிவாரணங்களைப் பகிர்ந்தளிக்கும் போது கிறிஸ்து மறைநூல் அறிஞர்களுக்கு கண்டனம் செய்தமை,. எமக்கு நினைவூட்டுவது.
   1. நிவாரணங்கள் சிலருக்கு கிடைப்பதில்லை பற்றியதாகும்.
   2. நிவாரணங்களைப் பகிரும் போது அதனைக் கொடுத்தவர்களின் பெயர்களை பகிரங்கப்படுத்துதல் பற்றியதாகும்
   3. நிவாரணங்கள் பெற உரித்தில்லாதவர்கள் பெற்றுக் கொள்கின்றமை பற்றியதாகும்.
   4. சில நிவாரணப் பொருட்களை தமது பாவணைக்காக எடுக்கின்றனர். என்பது பற்றியதாகும்.

36. கிறிஸ்தவர்களாகிய நாம் பன்மைத்துவத்தையும் ஒருமைப் பாட்டையும் பாராட்ட வேண்டும். அதற்கேற்ப
   A. யூதர்களும் அந்நிய கிறிஸ்தவர்களும் ஒற்றுமையான சகோதரத் தன்மைக்குள் அடங்குவர்.
   B. ஒவ்வொரு உறுப்புகளும் தொடர்புற்று ஒன்றிணைக்கப்படுகின்றது.
   C. இன்றைய சமூகத்தில் ஒருமைப்பாட்டை எதிர்பார்க்க முடியாது.
   D. கிறிஸ்தவன் பன்மைத்துவதினூடாக ஒருமைப் பாட்டுக்குள் வர வேண்டும்.
   E. மனித சமூகத்தில் அந்தஸ்தை கவனிக்க வேண்டும்.

   இவற்றுள் மிகச் சரியானது.
   1. A யும் C யும் மட்டும்
   2. C யும் D யும்
   3. A யும் D யும் மட்டும்
   4. B யும் E யும் மட்டும்.

37. கிறிஸ்தவ ஒற்றுமையைப் பற்றிய வெளிப்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
   A. கிறிஸ்தவ ஒற்றுமையின் அடிப்படையில் கிறிஸ்துவுக்கும் இறைவனுக்கும் இடையே யுள்ள உறவு
   B. குழுக்களாக வேலை செய்யும் போது ஒற்றுமை ஏற்படுகின்றது
   C. ஒற்றுமையை உறுதிப்படுத்துவது தனியான மன்றாட்டினாலாகும்
   D. கிறிஸ்தவ ஒற்றுமைக்காக உள்ள தடைகள் அனைத்தையும் விலக்க வேண்டும்.

   இவற்றில் மிகச் சரியானது.
   1. A யும் C
   2. B யும் D
   3. A யும் D
   4. C யும் D

38. இலங்கையிலே கிறிஸ்தவ சபைகள் கிறிஸ்துவுக்குள் ஒரே சபையாக ஏற்படுத்து வதற்காக

A. "ஒரே இயேசுக் கிறிஸ்து; ஒரே திருமுழுக்கு" என கவனத்தில் கொள்ள வேண்டும்.

B. கிறிஸ்து பகைமை எனும் சுவரைத் தகர்த்தெறிந்து, ஒரே மக்களாக வாழ்வதற்கு அவர் கூறிய வழிகாட்டலை மாதிரியாகக் கொள்ள வேண்டும்.

C. "மனிதருக்கிடையில் அந்தஸ்து பார்ப்பதைத் தவிர்ப்பதற்கு" எண்ணிப் பார்க்க வேண்டும்.

D. ஒவ்வொரு உறுப்பும் போன்று ஒவ்வொரு சபையும் நல்ல முறையில் செயலாற்றுவது உண்மையென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவற்றுள் மிகச் சரியான வெளிப்பாடுகள் இரண்டு

1. A யும் B
2. B யும் C
3. C யும் D
4. A யும் D

39. கிறிஸ்தவ எதிர்பார்ப்பு பற்றிய வெளியீடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. பரிசுத்த பங்குபற்றுதலின் வழிபாடு இறை ஆட்சியின் திருவிருந்தில் எதிர்பாார்க்கும் நிகழ்வின் முன் சுவையாகும்.

B. எதிர்பாார்ப்பானது இறை ஆட்சியில் வாழ்வதற்காக இறைவன் தந்த பரிசாகும்

C. கிறிஸ்தவ எதிர்பார்ப்பு தனித்துவத்தின் மேல் கட்டியெழுப்பக் கூடியது.

D. எதிர்பார்ப்பு , துன்பம், வேதனை, விரக்தி என்பன. இவற்றில் மிகவும் சரியான வெளியீடுகள் இரண்டு

1. A யும் B
2. B யும் C
3. C யும் D
4. A யும் D

40. பன்மைத்துவம் என்பதற்கான சரியான விடை

1. "நீ பிழை. எனவே என்னைப் பின்செல்லவும்"
2. "நீயும் பிழை. நானும் பிழை. நாம் சேர்ந்து பிழையைத் திருத்துவோம்"
3. "உமது கருத்துக்கள் ஓரளவு சரி எனினும் நான் முழுமையாக சரி. எனவே உமது கருத்தை நான் பூரணப்படுத்துகிறேன்."
4. "நீ சரி. எனினும் நான் உன்னைப் பின்பற்ற மாட்டேன்."

# கிறிஸ்தவம் II

## 2 மணித்தியாலம்

முதலாம், இரண்டாம் வினாக்களுக்கும் ஏனைய மூன்று வினாக்களுக்கும் விடை தருக

1. கீழ்வரும் கூற்றுகளிலிருந்து **இரண்டைத்** தெரிவு செய்து, அவை யாரால், யாருக்கு. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டன என்பதை எடுத்துக்காட்டி, இச்சந்தர்ப்பத்தில் இக் கூற்றுகளின் முக்கியத்துவத்தையும் இவற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் படிப்பினைகளையும் எழுதுக.
   - i "அறியாத தெய்வத்திற்கு என எழுதப்பட்ட பலிபீடம் ஒன்றைக் கண்டேன். நீங்கள் அறியாமல் வழிபட்டுக் கொண்டிருக்கும் அந்த தெய்வத்தையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்."
   - ii. "நான் காணாமற் போன ஆட்டைத் தேடுகிறேன். வழி தவறிய ஆட்டை மீண்டும் கண்டு பிடிப்பேன்."
   - iii. "நீங்களே கிறிஸ்துவின் உடல், ஒவ்வொருவரும் ஓர் உறுப்பு"

2. கீழ்க்காணும் தலைப்புகளில் **மூன்றைத்** தேர்ந்தெடுத்து சுருக்கக் குறிப்பெழுதுக. தரப் பட்டுள்ள கட்டமைப்பை அடிப்படையாக வைத்து விடை எழுதுக
   - i புனித பவுலின் முதலாவது திருத்தூதுப் பயணம்
     - இவர் திருத்தூதுப் பணிக்கு செல்வதற்கு தீர்மானம் எடுத்த விதம்
     - புனித பவுலுக்கு உதவிய இருவர்
     - லிஸ்திராவில் ஏற்பட்ட சம்பவம்
     - மக்களும் பவுலும் அதற்குக் காட்டிய பிரதி நடவடிக்கை.
     - அதிலிருந்து நாம் பெறும் படிப்பினை
   - ii. நியாயத்தின் அடிப்படையிலான அமைதி
     - அமைதியைப் பற்றிய பல்வேறு வரைவிலக்கணம்
     - வன்செயல்களினால் அமைதியைப் பெறமுடியா தென்பது
     - அமைதியைப் பற்றி இறைவாக்கினர் கூறியவை
     - நிகழ்கால இலங்கையில் அமைதிக்கான முயற்சி
     - அமைதிக்காகச் செய்ய வேண்டியவை
   - iii. தொடக்க கால திருச்சபை
     - ஆரம்பிக்கப்பட்ட விதம்
     - திருத்தொண்டர்களின் பணி
     - தொடக்க கால திருச்சபையில் நிலவிய நல்ல விழுமியங்கள்
     - சில விழுமியங்களை இன்று காணமுடியாதமைக்கான காரணம்
     - இன்று திருச்சபையில் இவ் விழுமியங்களை கடைப்பிடிக்கக் கூடிய விதம்.
   - iv. கிறிஸ்துவுக்குள் சமூகமாக வளர்தல்
     - நிகழ்கால சமூகத்தின் மனப்பான்மை சீரழிவை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கிற தென்பது
     - நேர்மையான நியாயம் நிறைந்த சமூகத்திலே இருக்க வேண்டிய விழுமியங்கள்
     - சமூகம் மாற்றமடைய வேண்டுமென்பது
     - நிகழ்காலத்தில் உமது சமூகப் பணி
     - அங்கு எதிர்கொள்ள வேண்டிய சவால்கள்

(3X5 =15 புள்ளிகள்)

3. 1. இஸ்ரயேலரின் மெசியா பற்றிய எதிர்பார்ப்பும், முழுமையான விடுதலை என்பதையும் விளக்குக

(3 புள்ளிகள்)

2. நிகழ்கால சமூகத்தில் காணக்கூடிய அரசியல், பொருளாதார சமூகத்தில் நிலை கொண்டுள்ள அரசியல், பொருளாதார சமூகமய அடிமைத் தன்மைகள் எவை?

(3 புள்ளிகள்)

3. கிறிஸ்துவின் போதனைகளின் வழியாக அடிமைத் தனத்திலிருந்து மீண்டு முழுமையான விடுதலையைப் பெற்றுக் கொள்வது எவ்வாறு என்பதை விளக்கமாகக் பகுப்பாய்வு செய்க?

(3 புள்ளிகள்)

4. 1. மத்தியகால கிறிஸ்தவ வரலாற்றிலே துன்பங்களுக்குள்ளாகிய மூவரை இனங்கண்டு அவர்கள் கிறிஸ்துவுக்காக வாழ்ந்த முறையை முன்வைக்கவும்.

(3 புள்ளிகள்)

2 உலக நாடுகள் எங்கும் மக்கள் இம்சைக்கும் துன்பங்களுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். நம் நாட்டிற்கு இக்கூற்று பொருந்துமா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(3 புள்ளிகள்)

3 உமது பாடசாலையிலோ, வகுப்பிலோ இம்சைக்கும், துன்பங்களுக்கும் உட்படுத்தப்பட்ட மாணவர்களின் அல்லது மாணவியின் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு நீர் எவ்வாறு உதவி செய்வீர் என்பதை விளக்கமாக எழுதுக.

(3 புள்ளிகள்)

5. 1. சமாதானமும் ஒப்புரவும் என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

(3 புள்ளிகள்)

2. கிறிஸ்துவும் அவரது சீடர்களும் சமாதானமாகவும் ஒப்புரவோடும் எவ்வாறு செயற்பட்டனர் என்பதை உதாரணங்களோடு விளக்குக?

(3 புள்ளிகள்)

3. இலங்கையின் குடிமக்களின் ஒருவராக நீர் நிகழ்கால பன்மைச் சமூகத்திலே பிறரோடு உதவி புரிந்து எவ்வாறு வாழ்வீர் என்பதை விளக்குக?

(3 புள்ளிகள்)

6. 1. மன்னிப்பு வழங்கவும் மன்னிப்பு கேட்கவும் நம்மிடம் இருக்க வேண்டிய நல்ல விழுமியங்கள் எவை?

(3 புள்ளிகள்)

2. மன்னிப்பு பற்றிய கிறிஸ்துவின் போதனைக்கும் வாழ்வின் முன்மாதிரிக்கும் இடையிலுள்ள தொடர்பு எத்தகையது?

(3 புள்ளிகள்)

3. உமது கருத்துகளுக்கமைய இலங்கையில் மரண தண்டனையை செயலாற்றச் செய்வது பொருத்தமானதா? பொருத்தமற்றதா? என்பதற்கான விடைகளுக்குக் காரணங்காட்டுக.

(3 புள்ளிகள்)

ISBN - 978-955-654-115-1

ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය

ක්‍රිස්තු ධර්මය - 11 (දෙ)

2010/T/11/TIM/1,750